ஏப்ரல் 2022
விலை ரூ.20/–

தமிழரசு

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மலர் : 52 இதழ் : 10

முதலீடுகளை ஈர்த்த மாண்புமிகு முதல்வர்

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்களை, புதுதில்லியில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் 31.03.2022 அன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் சந்தித்துத் தமிழகத்தின் வளர்ச்சித் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை வழங்கினார்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்கள் பெயரிலே நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருந்த திட்டம்தான் இந்தத் திருமண உதவித் திட்டம். அதைப் பற்றி மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் அவர்கள் மிக விளக்கமாக உங்களிடத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இருந்தாலும், அதையொட்டி நான் கொஞ்சம் அழுத்தம் தந்து, அதில் நீங்கள் தெளிவுபெற வேண்டும் என்பதற்காக, நீங்கள் மட்டுமல்ல; நாட்டு மக்களும் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக சில விளக்கங்களை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.

1989இல் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம் என்ற பெயரிலே துவங்கப்பட்டபோது முதன்முதலில் ரூ.5 ஆயிரம் நிதியுதவி வழங்கப்பட்டது. பிறகு, 2009ஆம் ஆண்டில் அது ரூ.25 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்பட்டது.

முதலில், ஒருமுறை இந்தத் திருமண உதவித் திட்டத்தை நிறுத்திய அ.தி.மு.க. அரசு, பின்னர் இதனுடைய முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டு, 17.05.2011இல் ஆட்சிக்கு வந்தபோது, திருமண உதவியை ரூ.50 ஆயிரமாக உயர்த்தி, தாலிக்குத் தங்கம் 4 கிராம் என்பதை 8 கிராம் என்ற நிலையிலே உயர்த்தி, அதை 2016லிருந்து நிறைவேற்றிக் கொண்டிருந்தது. அ.தி.மு.க. ஆட்சியில் பெறப்பட்டு, நிலுவையில் உள்ள மனுக்கள் பற்றி இப்போது ஆய்வு செய்தபோது அதைத்தான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். ஆய்வு செய்தபோது, 24.5 விழுக்காடு பயனாளிகள் மட்டுமே தகுதியான பயனாளிகள் எனக் கண்டறியப்பட்டது. அது தவிர, மாநிலக் கணக்காய்வுத் தலைவரது அறிக்கையில், இந்தத் திட்டம் குறித்துப் பல்வேறு குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இத்திட்டப் பயனாளிகளுக்கு நிதியுதவி மற்றும் தங்க நாணயம் வழங்குவதில் முறைகேடுகள் செய்தவர்கள்மீது, இதுவரை 43 வழக்குகளை லஞ்ச ஒழிப்புத்துறையினர் பதிவு செய்து, 43 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இதற்குமேல் இந்தத் திட்டத்தில் அ.தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற குளறுபடிகள், முறைகேடுகளை விளக்கிக் கூறி, திருமண உதவித் திட்டத்தை, தயவுசெய்து கொச்சைப்படுத்திட நான் விரும்பவில்லை.

அதே நேரத்தில், உயர்நிலைக் கல்வியில் பெண்கள் சேருவது 46 சதவிகிதம் மட்டுமே இருப்பதால், அதைச் சரிசெய்து, கல்வியே நிரந்தரச் சொத்து என்ற உயரிய நோக்கில்தான் “தாலிக்குத் தங்கம் வழங்கக்கூடிய திட்டம்” “6 முதல் 12ஆம் வகுப்புவரை உள்ள அரசுப் பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 உதவித்தொகை வழங்கும் திட்டமாக” மாற்றியமைக்கப்பட்டுள்ளது. திருமணத் தகுதி வருவதற்கு முன்பே, ஒரு பெண்ணுக்குக் கல்வித் தகுதியை, கல்வி என்ற நிரந்தரச் சொத்தை வழங்க வேண்டும் என்ற பெண்ணுரிமைக் கொள்கையின் மறுவடிவம்தான் இந்த “நிதியுதவி வழங்கக்கூடிய திட்டம்”.

இன்னொன்றையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திருமண உதவித் திட்டத்தின்கீழ், ஆண்டொன்றுக்கு சுமார் ஒரு இலட்சம் பெண்கள் பயனடைந்தார்கள். ஆனால், இந்த “ரூ.1,000” கல்வி உதவித் திட்டத்தின்கீழ், வருடத்திற்கு 6 இலட்சம் மாணவிகள் பயனடைவார்கள்.

சமூக நீதி, பெண் கல்வி, நிலைத்த நீண்ட பலன், நவீனச் சிந்தனை, இடைத்தரகர்கள் இன்றி மாணவிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாகப் பணம் வரவு வைக்கப்படுவது என்பது ஒரு வெளிப்படையான, அதே சமயத்தில் பெண்கள் அதிக அளவில் கல்வித் தகுதி பெறுவதற்கு வித்திடக்கூடிய திட்டமாக இந்தத் திட்டம் அமைந்திருக்கிறது. எனவே, கட்சிப் பாகுபாடின்றி, வேறுபாடின்றி இந்தத் திட்டத்தை அனைவரும் வரவேற்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

பெண்களுக்கான நிதியுதவித் திட்டம் குறித்த விவாதத்தின்போது,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
சட்டமன்றத்தில் ஆற்றிய உரை –21.03.2022

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2053
பிலவ – சுபகிருது வருடம் : பங்குனி – சித்திரை
ஏப்ரல் 2022

மலர் : 52 விலை ரூ.20 இதழ் : 10

ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **வீ.ப. ஜெயசீலன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
த. ஹரிராம்
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
அ. மகேஸ்வரி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
சு. தீபா
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
அ. சுகுமார்
மு. மணிமேகலை
அ. மதன்
கு. சுபாஷ்

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542224 / 22542221
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தாத் தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர். *(குறள் : 447)*

இடித்துரைத்து நல்வழி காட்டுபவரின் துணையைப் பெற்று நடப்பவர்களைக் கெடுக்கும் ஆற்றல் யாருக்கு உண்டு ?.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ முதலீடுகளை ஈர்க்க துபாயில் நமது முதல்வர் 5
★ துபாய் பயணத்தால் ரூ.6,100 கோடி மதிப்பீட்டில் தொழில்கள் தொடங்க ஒப்பந்தங்கள் 16
★ தமிழகத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்கான பல்வேறு கோரிக்கைகள் 22
★ தமிழ்நாட்டின் நிதிநிலையை மேம்படுத்தும் நிதிநிலை அறிக்கை 2022–2023 28
★ தமிழ்நாட்டின் இரண்டாம் வேளாண் நிதிநிலை அறிக்கை 37
★ 30ஆவது அனைத்திந்திய கட்டுநர்கள் மாநாடு 44
★ மதுரையில் ரூ.65.89 கோடியில் ஆவின் ஐஸ்கிரீம் தொழிற்சாலை 47
★ 2021 திறன் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற இளைஞர்களுக்கு ஊக்கத்தொகை 49
★ நம்பர்–1 தமிழ்நாடு எனும் நிலை உருவாக வேண்டும் 63
★ மேகதாது அணை தொடர்பான தனித்தீர்மானம் 66
★ ரூ.230 கோடியில் சென்னை, கிண்டியில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனைக்கு அடிக்கல் 67
★ நமது அரசு சொன்னதை மட்டுமல்ல சொன்னதற்கு மேலும் செய்து காட்டும் அரசு 68
★ தமிழ்நாடு மாநில சுகாதாரப் பேரவை தொடக்கம் 76

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில்
28.03.2022 அன்று, அபுதாபியில், லுலு நிறுவனம்,
தமிழ்நாட்டில் ரூ.3,500 கோடி முதலீட்டில்
3 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்
கையெழுத்தானது.

முதலீடுகளை ஈர்க்க துபாயில் நமது முதல்வர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஐக்கிய அரபு நாடுகளைச் சேர்ந்த துபாயில் நடைபெறும் உலகக் கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரங்கினைத் துவக்கி வைப்பதற்காகவும், தமிழ்நாடு மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் இடையே பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் வகையிலும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் வகையிலும், மார்ச் 24, 2022 முதல் மார்ச் 28, 2022 வரையிலான 5 நாட்கள் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டார்.

ஐக்கிய அரபு நாட்டு அமைச்சர்களுடன் சந்திப்பு:

ஐக்கிய அரபு அமீரகத்தின் பொருளாதார அமைச்சர் மாண்புமிகு அப்துல்லா பின் டுக் அல் மார்ரி அவர்களுடனும், ஐக்கிய அரபு அமீரகத்தின் வெளிநாட்டு வர்த்தகத்துறை அமைச்சர் மாண்புமிகு டாக்டர் தானி பின் அகமது அல் சியோதி அவர்களுடனும் 25.03.2022 அன்று சந்திப்புகள் நடைபெற்றன.

இந்தச் சந்திப்பின்போது, ஐக்கிய அரபு நாடுகளின் பொருளாதார அமைச்சர் அவர்கள், இந்தியா மற்றும் ஐக்கிய அரபு நாடுகளிடையே உள்ள விரிவான பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தம் (CEPA) பற்றிக் குறிப்பிட்டு, இந்த ஒப்பந்தம் மூலம், தமிழ்நாடு மற்றும் ஐக்கிய அரபு நாடுகளில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்குப் பல வாய்ப்புகளும் சாத்தியக்கூறுகளும் உள்ளதாகவும், இதன்மூலம் இரு நாடுகளுக்கிடையே, வர்த்தகமும் வாணிகமும் மேம்பட வாய்ப்புகள் ஏராளமாக உள்ளது என்றும் தெரிவித்தார்.

மேலும், மே மாதத்தில், ஒரு வணிக வர்த்தகக் குழுவுடன் மும்பாய் மற்றும் புதுதில்லி ஆகிய நகரங்களுக்கு வரவிருப்பதாகவும், அச்சமயத்தில், தமிழ்நாட்டிலிருந்து ஒரு வணிக வர்த்தகக் குழு அங்கு வந்து அவரைச் சந்திக்கலாம் என்றும் கூறினார்.

இந்தச் சந்திப்புகளின்போது, ஐக்கிய அரபு நாடுகளில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கும், தமிழ்நாட்டிற்கும் இடையே உள்ள வர்த்தக உறவுகளை மேம்படுத்துதல், புத்தாக்கம் மற்றும் புத்தொழில்கள், தொழில் சூழலை மேம்படுத்துதல், விவசாயம், உணவு பதப்படுத்துதல், ஜவுளி மற்றும் ஆடைகள், நகை மற்றும் விலையுயர்ந்த கற்கள், மின் வாகனங்கள், மின்னணுவியல், மோட்டார் வாகனம் மற்றும் வாகன உதிரிப் பாகங்கள், பொறியியல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி போன்ற துறைகளில் இணைந்து பணியாற்றி முதலீடுகள் மேற்கொள்வதன் மூலம் தமிழ்நாட்டிற்கும், ஐக்கிய அரபு நாடுகளுக்கும் இடையே உள்ள பொருளாதாரம் மற்றும் வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து விரிவான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு அரங்கு திறப்பு

உலகக் கண்காட்சியில், இந்திய அரங்கில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரங்கினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 25.03.2022 அன்று திறந்துவைத்தார்கள். தமிழ்நாடு அரங்கினைத் திறந்துவைக்க வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஐக்கிய அரபு அமீரக வாழ் தமிழர்கள் உற்சாக வரவேற்பு அளித்தார்கள்.

இந்தத் திறப்பு விழாவின்போது, ஐக்கிய அரபு அமீரகத்தின் சகிப்புத்தன்மைத்துறை அமைச்சர் / துபாய் உலகக் கண்காட்சியின் ஆணையர் மாண்புமிகு ஷேக் நஹ்யான் பின் முபாரக் அல் நஹ்யான் அவர்கள் உடனிருந்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரங்கினைத் திறந்துவைத்துப் பேசியதாவது:

உலகத்தரத்திலான இந்த எக்ஸ்போ கண்காட்சியை நடத்திவரும் துபாய் அரசுக்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுக்களை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நாட்டின் தரத்துக்கும் திறத்துக்கும் இந்த நிகழ்வின் வெற்றியே சான்றாக அமைந்திருக்கிறது.

இந்தக் கண்காட்சியின் இந்திய அரங்கில் 'தமிழ்நாடு வாரத்தைத்' தொடங்கிவைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். முக்கியமான வளர்ந்துவரும் துறைகளில் எங்கள் மாநிலத்தின் ஆற்றலை வெளிப்படுத்துவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக இந்த எக்ஸ்போ கண்காட்சி அமைந்துள்ளது. உற்பத்தித்துறையில் சிறந்து விளங்கும் தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்ட பலவகைப் பொருட்களும் இந்த அரங்கில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. சுற்றுலா, மருத்துவம், கலை, பண்பாடு ஆகிய துறைகளோடு, தொழிற்பூங்காக்கள், கவனம் செலுத்த வேண்டிய துறைகள் பற்றிய தகவல்கள் ஆகியவையும் நாள் முழுவதும் இங்குப் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்த அரங்கை யார் பார்வையிட்டாலும், தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் சாதித்துள்ள ஒருங்கிணைந்த வளர்ச்சியைப் பற்றிய புரிதலை அவர்களுக்கு இந்த அரங்கு வழங்கும்.

இந்தியத் தூதரகத்துக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்தத் துபாய் எக்ஸ்போ மற்றும் அதில் இடம்பெற்றுள்ள இந்திய அரங்கின் அமைப்பாளர்களுக்கு மீண்டும் ஒருமுறை எனது பாராட்டுக்களை, வாழ்த்துக்களைக் கூறி என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன், நன்றி.

இந்தக் கண்காட்சியில், தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் உருவகங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், தமிழ்நாட்டின் சுற்றுலா, மருத்துவம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு, கலை மற்றும் கலாச்சாரம், தொழில் பூங்காக்கள் மற்றும் முக்கிய துறைகள் பற்றிய தகவல்கள் இருபத்தி நான்கு மணி நேரமும் ஒளிபரப்பப்பட உள்ளன. இந்த அரங்கினைப் பார்வையிடும் அனைவரும், தமிழகத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சியை நன்கு புரிந்துகொள்ளும் வகையில், இந்த அரங்கு அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரங்கில் நடைபெற்ற கலைநிகழ்ச்சியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, பேசியதாவது:

உங்கள் அனைவருக்கும் என்னுடைய தமிழ் வணக்கம்.

துபாயில் நடைபெறக்கூடிய இந்தச் சிறப்புக்குரிய கண்காட்சியில் கலந்துகொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்று முதல்முறையாக இந்தத் துபாய்க்கு வருவதில் அளவு கடந்த மகிழ்ச்சி அடைகிறேன். எப்படி உலகத்தில் இருக்கக்கூடிய எந்தப் பகுதிகளாக இருந்தாலும், எந்த நாடுகளாக இருந்தாலும், அங்கு இருக்கக்கூடிய தமிழர்களுக்கு நம்முடைய தமிழக அரசு குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறதோ, பாதுகாப்பாக இருக்கிறதோ, அது தொடர்ந்து நடைபெறும். எனவே ஒன்றிணைந்து

வேற்றுமையிலே ஒற்றுமை காணவேண்டிய நிலையில் இந்தச் சிறப்பான கண்காட்சி நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதில் நம்முடைய தமிழ்க் கலாச்சாரத்தை, தமிழ்ப் பண்பாட்டை உணர்த்தக்கூடிய வகையில் இந்தக் கலை நிகழ்ச்சி நடத்தியிருக்கக்கூடிய அந்தக் கலைஞர்களுக்கெல்லாம் மீண்டும், மீண்டும் என்னுடைய தமிழ் வணக்கத்தைத் தெரிவித்து, உங்கள் அத்தனை பேருக்கும் நன்றி, நன்றி என்று கூறி விடைபெறுகிறேன்.

தமிழ்நாடு அரங்கைத் திறந்துவைத்த பின்னர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆலிஃப் மற்றும் சவுதி அரேபியா அரங்குகளைப் பார்வையிட்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 25.03.2022 அன்று தமிழ்நாடு வார விழாவையொட்டி, துபாயில் உள்ள 2,217 அடி உயரம் கொண்ட உலகிலேயே அதிக உயரமான கட்டடமான புர்ஜ் கலீஃபா கோபுரம் மீது ஒளிபரப்பப்பட்ட தமிழ்நாட்டின் வரலாறு, பண்பாடு, செம்மொழி, தமிழ்நாட்டின் சமீபத்திய அகழ்வாராய்ச்சிகள் பற்றிய அழகிய காட்சிப் படத்தினைப் பார்வையிட்டார்.

இந்திய வரலாற்றைத் தெற்கிலிருந்து எழுதுவோம்...

3,200 ஆண்டுகள் தொன்மையுடைய நமது வரலாற்றின் பெருமை வாய்ந்த கீழடி மற்றும் பொருநை ஆற்றங்கரை நாகரீகங்களின் சிறப்பை விளக்கும் காணொளி, உலகின் உயரமான கட்டடமான புர்ஜ் கலீஃபாவில் ஒளிபரப்பப்பட்டது.

குழுமியிருந்த உலக மக்கள் அனைவரும் கண்டு வியந்தனர்.

இந்திய வரலாற்றைத் தெற்கிலிருந்து எழுதுவோம்!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்*
சமூக வலைதளப்பதிவு

ரூ.2,600 கோடியில் 9,700 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில் தமிழ்நாட்டிற்கு ரூ.2,600 கோடி முதலீடு மற்றும் 9,700 நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் விதமாக ஐக்கிய அரபு நாடுகளின் முன்னணி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் 26.03.2022 அன்று மேற்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு மற்றும் ஐக்கிய அரபு நாடுகளிடையே பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் வகையிலும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கத்திலும், துபாய் மற்றும் அபுதாபிக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

ஐக்கிய அரபு நாடுகளின் முதலீட்டாளர்கள் அமைப்புடன் சந்திப்பு

26.03.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஐக்கிய அரபு நாடுகளின் முதலீட்டாளர் அமைப்பின் உறுப்பினர்களைச் சந்தித்தார். இச்சந்திப்பின்போது, தமிழ்நாட்டின் சிறப்புகளையும், தமிழகத்தில் சிறந்த தொழில் சூழல் நிலவுவதையும் சுட்டிக்காட்டி, மாநிலத்தில் முதலீடுகள் மேற்கொள்ளுமாறு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அமைப்பின் உறுப்பினர்களுக்குக் கோரிக்கை விடுத்தார்.

மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கீழ்க்கண்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன:

- துபாயைச் சேர்ந்த நோபுள் ஸ்டீல்ஸ் நிறுவனம் (Noble Steel Company), ரூ.1,000 கோடி முதலீடு மற்றும் 1,200 நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில், ஒரு உற்பத்தித் திட்டத்தினை தமிழ்நாட்டில் நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. மொகம்மது அஷ்ரஃப் சாகுல் அமீத் அவர்கள் (Mr. Mohamed Ashraf Shahul Ameed) கலந்துகொண்டார்.

- துபாயைச் சேர்ந்த ஒயிட் ஹவுஸ் நிறுவனம் (White House), ரூ.500 கோடி முதலீடு மற்றும் 3,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில், 3 வருடத்தில் ரூ.150 கோடி முதலீட்டில் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள திண்டிவனத்திலும், 5 வருடத்தில் ரூ.350 கோடி முதலீட்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள வாலாஜாபாத்திலும் என இரு ஒருங்கிணைந்த தையல் ஆலைகள் (Integrated Sewing Plants) நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிறுவனத்தின் பங்குதாரர் திரு. ஏ.மொகம்மது இல்யாஸ் அவர்கள் (Mr. A. Mohamed Elyas) கலந்துகொண்டார்.

- துபாயைச் சேர்ந்த டிரான்ஸ்வேல்டு குழுமம் (M/s. Transworld Group) ரூ.100 கோடி முதலீடு மற்றும் 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில், தமிழகத்தில் உணவுப் பூங்கா அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிறுவனத்தின் தலைவர் திரு. ரமேஷ் எஸ்.ராமகிருஷ்ணன் அவர்கள் கலந்துகொண்டார்.

இந்த முதலீட்டாளர்கள் சந்திப்பின்போது, UAE சர்வதேச முதலீட்டாளர்கள் அமைப்பின் செயலாளர்–பொது, H.E. திரு. ஜமால் சாயிப் அல் ஜர்வான் அவர்கள் பேசும்போது, தொழில் முதலீட்டைப் பொறுத்தவரைத் தமிழகம் ஒரு முக்கியமான மாநிலம் என்றும், இப்பகுதியிலுள்ள முதலீட்டாளர்கள் தமிழகத்தில் முதலீடு செய்யச் சிறப்பான வாய்ப்புகள் உள்ளதாகத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வின்போது, IBPC Dubai நிறுவனத்தின் தலைவர் திரு. சுரேஷ் குமார், சர்வதேச லுலு குழுமத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. எம்.ஏ. யூசுப் அலி மற்றும் இந்தியத் துணைத் தூதர் டாக்டர் அமன் பூரி ஆகியோர் உடனிருந்தனர்.

ஐக்கிய அரபு நாடுகளில் உள்ள நிறுவனங்களின் உயர் தலைமை நிருவாக அதிகாரிகளுடன் சந்திப்பு

26.03.2022 அன்று மாலை மற்றொரு நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், ஐக்கிய அரபு

நாடுகளில் உள்ள முன்னணி நிறுவனங்களின் தலைமை நிருவாக அதிகாரிகளைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கீழ்க்கண்ட இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன.

இரு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

1) ஆஸ்டர் DM ஹெல்த்கேர் அமைப்பு (Aster DM Healthcare), ரூ.500 கோடி முதலீடு மற்றும் 3,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு (3,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு மற்றும் 500 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பு) என்ற வகையில், 500 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையைத் தமிழ்நாட்டில் நிறுவுவதற்காகப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. ஆஸ்டர் DM ஹெல்த்கேர் அமைப்பின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஆசாத் மூப்பன் அவர்கள் (Dr. Azad Moopen) கலந்துகொண்டார்.

2) ஷெராப் குழும நிறுவனம் (Sharaf Group), தமிழ்நாட்டில், ரூ.500 கோடி முதலீடு மற்றும் 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், இருப்புப்பாதை இணைப்பு வசதியுடன், ஒரு சரக்குப் போக்குவரத்துப் பூங்கா அமைத்திடுவதற்காக, தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இக்குழுமத்தின் துணைத் தலைவர் H.E. மேஜர் ஜெனரல் (ஓய்வு), (Major Gen (Rtd.) திரு. ஷெராஃபுதின் ஷெராப் (Sharafuddin Sharaf) மற்றும் அந்நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி திரு. ஷியாம் கபூர் (Mr. Shyam Kapur) ஆகியோர் கலந்துகொண்டனர்.

இன்றைய நிகழ்வுகளின்போது, மொத்தம் ரூ.2,600 கோடி முதலீடு மற்றும் 9,700 நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் விதமாக ஐக்கிய அரபு நாடுகளின் முன்னணி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

துபாய் நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகளுடன் சந்திப்பு

1) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஃபராபி பெட்ரோ கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் (Farabi Petro Chemicals) தலைமைச் செயல் அதிகாரி திரு. முகம்மது அல் வாதே அவர்களுடனான (Mr.Mohammed Al-Wadaey) சந்திப்பின்போது, தமிழ்நாட்டில் உள்ள 4 பெரும் துறைமுகங்கள், சாலைகள் மற்றும் இரயில் இணைப்புகள் பற்றியும், திறன்மிகு பணியாளர்கள், மேம்பட்ட வணிகச்சூழல் போன்றவற்றை எடுத்துக்கூறி, தமிழ்நாட்டில் ஒரு இரசாயன வளாகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்திடுமாறு கேட்டுக் கொண்டார்.

2) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உலகப் புகழ்பெற்ற புர்ஜ் கலீஃபா கட்டடத்தை நிறுவியவர்களும், மிகப் பெரிய ரியல் எஸ்டேட் நிறுவனர்களுமான எம்மார் பிராப்பர்டீஸ் (EMAAR Properties) நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி திரு. ஹாதி பத்ரி அவர்களுடனான (Mr. Hadi Badri) சந்திப்பின்போது, இக்குழுமத்தினைத் தமிழ்நாட்டில் உட்கட்டமைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுத்தார்.

ஜெபல் அலி தடையில்லா வர்த்தக மண்டலத்தை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

முன்னதாக மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் 26.03.2022 அன்று காலை, துபாயில் உள்ள ஜெபல் அலி தடையில்லா வர்த்தக மண்டலத்தினைப் (Jebel Ali Free Zone - JAFZA) பார்வையிட்டார்.

இந்த ஜெபல் அலி தடையில்லா வர்த்தக மண்டலம், மத்தியக் கிழக்கு நாடுகளிலேயே மிகப் பெரிய துறைமுகமும் வர்த்தக மண்டலமும் கொண்டதாகும். இந்தத் தடையில்லா வர்த்தக மண்டலம், ஐக்கிய அரபு நாடுகளைச் சேர்ந்த மிகப்பெரிய சேவைகள் மற்றும் வணிகத் தீர்வு வழங்கிடும் DP வேல்ட்டு (DP World) நிறுவனத்தின் ஒருங்கிணைந்த வணிக வர்த்தக மையப் பிரிவாகும். இந்தத் தடையற்ற வணிக மண்டலம், ஐக்கிய அரபு நாடுகளில் உள்ள ஏற்றுமதி நிறுவனங்களின் வர்த்தக வளர்ச்சிக்கு வாய்ப்புகளையும், மிகப் பெரிய சந்தையையும் வழங்கி வரும் நிறுவனமாக விளங்குகிறது.

இந்தத் தடையில்லா வர்த்தக மண்டலத்தில் உள்ள தானியங்கி கொள்கலன் முனையத்தினையும் (Automotive Container Terminal), இம்மண்டலத்தின் கிடங்கு வசதிகள், சேமிப்புக் கிடங்குகள், வர்த்தகம் மற்றும் வணிக நிறுவனங்களுக்குத் தேவையான விநியோகம், பரிமாற்றம், ஏற்றுமதி நடவடிக்கைகள் போன்றவற்றை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

தமிழ்நாட்டில் உள்ள திருவள்ளூர் மாவட்டத்தில் DP World நிறுவனம் ஒரு தடையில்லா வர்த்தக மண்டலத்தை உருவாக்கி வருகிறது. மேலும், தென்மாவட்டங்களில் ஒரு தடையில்லா வர்த்தக மண்டலம் அமைத்திட, கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம், DP World நிறுவனம் தமிழ்நாடு அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் துபாயில் நடைபெற்ற ஐக்கிய அரபு நாடுகளின் முதலீட்டாளர்கள் சந்திப்பில் ஆற்றிய உரை

வணக்கம்! வணக்கம் துபாய்!

Mr. Suresh Kumar, Chairman, IBPC Dubai, Founder & Mentor, Tricolour Values Group,

Mr. Yusuff Ali, Chairman & Managing Director, LuLu Group International,

His Excellency Mr. Jamal Saif Al Jarwan, Secretary-General, The UAE International Investors Council,

Dr. Aman Puri, Consul-General,

Hon'ble Tamil Nadu Minister for Industries Mr. Thangam Thennarasu,

Additional Chief Secretary to Government of Tamil Nadu, Industries Department Mr. S. Krishnan,

Mr. Arun Roy, MSME Secretary,

MD & CEO of Guidance Mrs. Pooja Kulkarni,

Distinguished guests! Ladies and Gentlemen,

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற தன்னம்பிக்கை மொழியை ஏற்றுத் துபாய்க்குக் குடிபெயர்ந்து இந்த மண்ணையும் வளமாக்கியுள்ள எனது தமிழ்ச் சொந்தங்களே !

Very Good Afternoon to all.

அனைவருக்கும் எனது அன்பார்ந்த வணக்கங்கள்.

I am very happy to address this great gathering of captains of business, trade and industry.

We are committed to develop and strengthen these relations.

I am happy and honoured to be here.

UAE and Tamil Nadu share a long history of rich cultural and trade relations. We are committed to develop and strengthen this relations.

ஐக்கிய அரபு நாடுகளுக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையேயான உறவு முன் எப்போதையும்விட இப்போது வலுவாக வளர்ந்து வருகின்றது.

தமிழ்நாடு மற்றும் ஐக்கிய அரபு நாடுகளிடையே பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதில் நம் அனைவருக்கும் ஆர்வம் இருக்கிறது. இந்த அரங்கில் பெருமளவில் நீங்கள் இங்குக் கூடி இருப்பதற்கு இதுவே சாட்சியாக அமைந்துள்ளது.

ஓர் அழகான நகரத்தில் நீங்கள் வசிக்கிறீர்கள். துபாய் மிக அழகான நகரம் மட்டுமல்ல, வர்த்தகம் அதிகம் நடைபெறக்கூடிய நகரமாகவும் அமைந்திருக்கிறது. 50 ஆண்டுகளுக்கு முன்னால், ஒரு இலட்சத்திற்கும் குறைவான மக்கள் மட்டுமே வாழ்ந்து வந்த இந்தத் துபாய், இன்று உலகமே வியந்து பார்க்கும் நகரமாக வளர்ந்திருக்கிறது.

இன்று நவீனக் கட்டடக்கலை சாதனைகளுடன் உலகளாவிய வணிக மையமாக மிகப்பெரும் வளர்ச்சியைக் கண்டிருக்கிறது. இந்த வளர்ச்சி கற்பனைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டது.

உங்கள் ஊரின் புகழை நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஆனாலும், நான் அறிந்தும் தெரிந்தும் வைத்திருப்பதை உங்களுடன் மட்டுமல்ல, இந்த நிகழ்ச்சியை ஊடகங்களில் பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய தமிழ்நாட்டு மக்களுக்கும் சேர்த்துத்தான் என்னுடைய உணர்வுகளை நான் இங்கே பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

➢ 2,217 அடி உயரம் கொண்ட உலகிலேயே உயரமான புர்ஜ் கலிஃபா,

➢ செயற்கையாக உருவாக்கப்பட்ட பாம் ஜீமேரா தீவு,

➢ 5.5 கி.மீ. நீளம் கொண்ட உலகிலேயே மிக நீளமான தங்கச் சங்கிலி,

➢ மிகப்பெரிய மால்கள்,

➢ மிகப்பெரிய மீன் காட்சியகம்,

➢ மலர் பூங்கா எனத் துபாயில் பார்க்கும் இடமெல்லாம் பிரமிப்பாகவும் அழகாகவும் இருக்கிறது.

➢ பறக்கும் கார்கள் முதல் தானியங்கி இரயில்கள் வரை உயர் தொழில்நுட்பப் போக்குவரத்தில் தலைசிறந்து துபாய் விளங்கிக் கொண்டிருக்கிறது.

➢ துபாயின் அழகைக் கண்டு ரசிக்க ஆண்டுதோறும் சராசரியாக 17 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் எல்லா நாடுகளிலிருந்தும் வருகிறார்கள்.

தமிழ்நாடு மற்றும் துபாய் இடையே வளர்ந்து வரும் பொருளாதார உறவுகளை மேம்படுத்தத்தான் நான் இப்போது இங்கே வந்திருக்கிறேன். தமிழ்நாட்டில் அதிக முதலீடுகளைச் செய்ய வேண்டும் என உங்களையெல்லாம் கேட்டுக்கொள்ள வேண்டி உங்களைத் தேடி, நாடி நான் வந்திருக்கின்றேன்.

முதலமைச்சராக ஆட்சிப்பொறுப்பை ஏற்றபிறகு, நான் மேற்கொள்ளக்கூடிய முதலாவது அயல்நாட்டுப்பயணம் இந்தப் பயணம்தான், இந்தத் துபாய் பயணம்தான். இந்த முதல் பயணமும் ஐக்கிய அரபு அமீரகத்தின், துபாய் நகரமாக அமைந்தது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தகப் பங்குதாரர்களில் ஒன்றாகவும், ஏற்றுமதிகளுக்கான மிகப்பெரிய நுழைவாயிலாகவும் துபாய் விளங்குகிறது.

துபாய் மக்கள், ஒழுக்கம், கடின உழைப்பு மற்றும் சட்டத்தை மதிக்கக்கூடிய நற்பெயரைப் பெற்றவர்கள். அதனால்தான் உங்களை நாடி நான் வந்திருக்கிறேன்.

ஐக்கிய அரபு நாடுகளில் 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் பேசும் மக்கள் பணியாற்றியும், வணிகம் செய்தும் வருகின்றனர். தமிழர்களின் கடின உழைப்பு மற்றும் விடாமுயற்சி, ஐக்கிய அரபு நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகப் பெரிய பங்களிப்பை அளித்து வருவது அனைவரும் அறிந்த உண்மை. எனவே, துபாயை வெளிநாடாக நினைக்க முடியாத அளவுக்குத் தமிழர்கள் அதிகம் வாழக்கூடிய நாடாகவும் இது இருக்கிறது.

The COVID pandemic has affected economies all over the world.

Despite the pandemic, in the last ten months alone, Tamil Nadu has signed 124 MoUs attracting investment of 8 billion US Dollars, creating employment opportunities for nearly two lakh persons.

Tamil Nadu has registered a positive GDP growth rate of 5.8% in 2020-2021 in contrast to negative growth in most economies. This clearly shows the faith and confidence that Global investors have reposed in Tamil Nadu.

Our strength is our human resources.

தமிழ்நாடு, வணிக மற்றும் வர்த்தக வாய்ப்புகள் நிறைந்த ஒரு மாநிலம். கிட்டத்தட்ட ஏழரைக் கோடி மக்களைக் கொண்டிருக்கக்கூடிய மாநிலம்.

2030ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற்றிடக்கூடிய வகையில் ஒரு தொலைநோக்குப் பார்வையுடன் நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த இலட்சிய இலக்கினை அடைவதற்காக, தமிழ்நாட்டின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல், பணியாளர்களின் திறனை மேம்படுத்துதல், வருங்கால தொழில் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு பணியாளர்களைத் தயார்ப்படுத்துதல் போன்ற பல முன்னேற்ற நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம்.

இந்தச் சூழ்நிலையில், நீங்கள் எங்கள் மாநிலத்தில் முதலீடுகளைச் செய்வதற்கான வாய்ப்புகளும் சாத்தியக்கூறுகளும் ஏராளமாக உள்ளன.

வாருங்கள்! இதற்கான பயணத்தில் இணைந்து நாம் எல்லோரும் பயனடைவோம் என்று இந்தத் தருணத்தில் உங்களுக்கு எல்லாம் நான் அன்போடு அழைப்பு விடுக்கின்றேன்.

தமிழ்நாட்டில் உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் ரியல் எஸ்டேட் வணிகத்திற்கு, மிகப்பெரிய வாய்ப்புகள் இருக்கின்றன. அது மட்டுமா? சுற்றுலாத்துறையிலும் விருந்தோம்பல் துறையிலும் எங்கள் மாநிலத்தில் வாய்ப்புகள் கொட்டிக்கிடக்கின்றன.

வேளாண்மைத்துறையைப் பொறுத்தவரையில் குளிர்பதனக் கிடங்குகள், சேமிப்புக்கிடங்குகள் ஆகியவற்றின் தேவை எங்களுக்கு உள்ளது. நிதி நுட்பம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, தகவல் தரவு மையங்கள், வான்வெளி மற்றும் பாதுகாப்பு ஆகிய துறைகளிலும் சிறந்த உட்கட்டமைப்புகளை நாங்கள் உருவாக்கியிருக்கிறோம். மின்னணுவியல் துறையைப் பொறுத்தவரையில், மின் வாகனங்கள், மின்னேற்றி நிலையங்கள் போன்றவற்றில் முதலீடுகள் வரவேற்கப்படுகின்றன.

புத்தொழில்களிலும், புத்தாக்கத் தொழில்களிலும் முதலீடுகளை வரவேற்கிறோம். மேற்கூறிய துறைகளில் ஐக்கிய அரபு நாடுகளின் வணிகங்களுக்கு மிகப் பெரிய வாய்ப்புகள் உள்ளன.

தமிழ்நாட்டின் 2ஆவது பெரிய துறைமுகம் மற்றும் அகில இந்திய அளவில் 3ஆவது பெரிய கொள்ளளவு கொண்ட துறைமுகம் தூத்துக்குடி. அங்குச் சர்வதேச அறைகலன் பூங்காவிற்கு Furniture Park சில வாரங்களுக்கு முன்னால் அதற்குரிய அடிக்கல்லை நான் நாட்டியிருக்கிறேன்.

இந்தியாவிலேயே, முதன்முதலாக, தமிழ்நாட்டில்தான் இத்தகைய சர்வதேச அறைகலன் பூங்கா அதாவது Furniture Park அமைக்கப்பட இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. 1,156 ஏக்கர் பரப்பளவில் தூத்துக்குடியில் அமைக்கப்பட்டிருக்கக்கூடிய இந்தப் பூங்காவில், முதலீடுகளுக்கான வாய்ப்புகள் மிக அதிக அளவில் இருக்கின்றன. 70–80 விழுக்காடு மூலப்பொருட்கள் தேவையை அங்கேயே பூர்த்தி செய்திடும் வகையில் முழுச் சூழல் அமைப்பையும் அந்தப் பூங்காவில் உருவாக்க நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம். அடிக்கல் நாட்டிய அன்றே, அந்த அறைகலன் பூங்காவில் 375 மில்லியன் டாலர் அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டிருக்கிறது. நம்பிக்கையுடன் முதலீடுகளை மேற்கொள்வதற்கான தகுந்த இடம் எங்களது தூத்துக்குடி சர்வதேச அறைகலன் பூங்கா Furniture Park.

உற்பத்தி, சேவைகள் உட்படப் பொருளாதாரத்தின் எந்தத் துறையிலும் முதலீடுகளை ஈர்ப்பதும், தமிழ்நாட்டை உலகளாவிய முதலீட்டு மையமாக மேம்படுத்துவதும்தான் எங்களுடைய குறிக்கோள்.

பொருளாதார வளர்ச்சியினை அதிகரித்து, அதன்மூலம் சமூகநலம் பேணுதல் என்கிற நோக்குடன் செயல்பட்டு வரக்கூடிய நாங்கள், எங்கள் முதலீட்டுக் கோரிக்கைகளை உங்கள் முன் வைத்துள்ளோம்.

➢ ஹுண்டாய், ப்யூஜோ, BMW, டெய்ம்லர், கேட்டர்பில்லர், அசோக் லேலண்ட், TVS, ரெனால்ட் நிஸ்ஸான், ஃபாக்ஸ்கான், டெல்டா, டெல், சால்காம்ப், டாட்டா எலெக்ட்ரானிக்ஸ், சியட், மிச்செலின், MRF, சாம்சங், கிரண்ட்ஃபோஸ், L&T ஆகிய எண்ணற்ற உலகளாவிய, புகழ்பெற்ற நிறுவனங்கள், தங்களது உற்பத்தித் திட்டங்களைத் தமிழ்நாட்டில் அமைத்திருக்கின்றன.

மேலும், 75க்கும் மேற்பட்ட பார்ச்சூன் 500 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் அமைந்திருக்கின்றன. பல்வேறு நாடுகளின் முதலீட்டாளர்கள் மற்றும் தூதரக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு முதலீடுகளை ஈர்த்திடுவதற்கு ஏதுவாக, வழிகாட்டி (GUIDANCE) நிறுவனத்தில், நாடுவாரியாகப் பிரத்தியேக அமைவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டின் மீது வைத்திருக்கக்கூடிய நம்பிக்கை இதன் மூலம் வெளிப்படுகிறது. தொழில் புரிவதற்கும், முதலீடுகள் மேற்கொள்வதற்குமான அழைப்புகளுக்கு எங்கள் கதவுகள் எப்போதும் திறந்திருக்கும்.

உலகத் தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வணிகச் சூழல் அமைப்பினைத் தொடர்ந்து மேம்படுத்த முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். எல்லாத் தரவரிசைகளிலும் தமிழ்நாடு முன்னேறி வருகிறது. மாநிலம் முழுவதும் உள்ள பெருந்தொழிலதிபர்கள் மற்றும் தொழில் முனைவோரின் சான்றுகளிலும் அது வெளிப்படுகிறது.

Independent surveys have validated Tamil Nadu's position as a leading State in good governance, economic growth, social and public health indicators. They also bear testimony to our vision of bringing inclusive growth.

தமிழ்நாடு மற்றும் துபாய் இடையேயான பொருளாதார மற்றும் உணர்வுப்பூர்வமான பிணைப்புகள் ஏற்கெனவே வலுவாக இருக்கிறது. இதை மேலும் வலுப்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் பெருமளவில் இருக்கிறது என்பதை இங்கு நான் மீண்டும் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

வாய்ப்புகள் ஏராளமாக உள்ள மாநிலம் தமிழ்நாடு என்பது உங்களுக்குத் தெரியும். எங்கள் வளர்ச்சிக்கு வித்திடுவது, உங்கள் வளர்ச்சிக்கும் துணைபுரியும் என்று நான் உறுதியளிக்கிறேன். எங்கள் வளர்ச்சியிலும் பங்கேற்று, நீங்களும் பயன் அடைந்திடுமாறு மீண்டும் நான் உங்களுக்கு அன்புடன் அழைப்பு விடுக்கிறேன். வாருங்கள், இணைந்து பயணிப்போம், இணைந்து வளர்ச்சி பெறுவோம்.

Once again I take this opportunity to invite you to Tamil Nadu, to engage in a partnership of investment, innovation, growth and prosperity.

I wish you all success in your endeavours.

அறிவியல் வழியில் அருங்காட்சியகங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
27.03.2022 அன்று, துபாயில் உள்ள
Museum of The Future
அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டார்.

புதுமையை நாடும் அருங்காட்சியகங்கள் காலத்தின் தேவை...

துபாய் மற்றும் அபுதாபி பயணம் பல்வேறு அனுபவங்களைத் தந்துகொண்டிருக்கிறது. தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பாதைக்கான நம்பிக்கையை அளித்துவரும் இப்பயணம், அறிவியல் பார்வையிலும் புதுமையை அள்ளித்தந்துள்ளது.

பழங்காலத்தை நினைவூட்டுவது மட்டுமே அருங்காட்சியகங்களின் பணி அல்ல; புதுமையையும், எதிர்காலத்தையும் நோக்கி நம்மை விரைவுபடுத்துவதும்கூட அதன் பணி என Museum of The Future காட்டியது.

போலியான பழம்பெருமைகளைப் பேசி மூடத்தனங்களுக்குள் புகுந்துகொள்ளாமல் அறிவியல் வழியில் புதுமையை நாடும் இதுபோன்ற அருங்காட்சியகங்கள் காலத்தின் தேவையாகின்றன!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைத்தளப் பதிவு

ரூ.3,500 கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஐக்கிய அரபு நாடுகளில் உள்ள நிறுவனங்களின் உயர் தலைமை நிருவாக அதிகாரிகளுடன் தமிழ்நாட்டில் முதலீடுகள் மேற்கொள்வது குறித்துச் சந்திப்பு மற்றும் லுலு நிறுவனம் தமிழ்நாட்டில் மேற்கொள்ளும் ரூ.3,500 கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு மற்றும் ஐக்கிய அரபு நாடுகளிடையே பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் வகையிலும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கத்திலும், துபாய் மற்றும் அபுதாபிக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

அதன்படி, துபாய் பயணத்தினை முடித்துக் கொண்டு, அபுதாபிக்கு வந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 28.03.2022 அன்று கலந்துகொண்ட நிகழ்வுகளின் விவரங்கள் பின்வருமாறு:–

ஐக்கிய அரபு நாடுகளில் உள்ள நிறுவனங்களின் உயர் தலைமை நிருவாக அதிகாரிகளுடன் சந்திப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஐக்கிய அரபு நாடுகளைச் சேர்ந்த அபுதாபியில் உள்ள முபாதாலா கோபுரத்தில் உள்ள எமிரேட்ஸ் பேலஸில் முன்னணி நிறுவனங்களின் தலைமை நிருவாக அதிகாரிகளைச் சந்தித்தார்.

முபாதாலா நிறுவனத்தின் உட்கட்டமைப்பு நிருவாக இயக்குநர் திரு. சையத் அரார் (Thiru. Syed Arar) அவர்களுடனான சந்திப்பின்போது, தமிழ்நாட்டில், மிகப்பெரும் உட்கட்டமைப்பு திட்டங்களில் முதலீடுகள் மேற்கொள்ளுமாறு இந்நிறுவனத்திற்கு அழைப்பு விடுத்தார். ஏற்கெனவே, முபாதாலா நிறுவனம், பிரின்ஸ்டன் டிஜிட்டல் என்ற நிறுவனத்தின் பெயரில் 350 மில்லியன் டாலர் முதலீடுகள் மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும், முபாதாலா நிறுவனம் மற்றும் தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகம் (TNIFMC) நிறுவனங்களுக்கிடையே ஒரு பணிக்குழுவை அமைத்து, தமிழ்நாட்டில் உள்ள பசுமை எரிசக்தி, சாலைத் திட்டங்கள், தொழிற்பூங்காக்கள் மற்றும் உடனடியாகத் துவங்கும் திட்டங்கள், தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கான விடுதிகள், தகவல் தரவு மையங்கள் போன்ற மிகப் பெரிய உட்கட்டமைப்புத் திட்டங்களில் முதலீடுகள் மேற்கொள்வதற்கான திட்டங்கள் வகுத்திடவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முபாதாலா நிறுவனத்திற்கு அழைப்பு விடுத்தார்.

அபுதாபி வர்த்தகச் சபைத் தலைவரும், ஐக்கிய அரபு நாடுகளின் வர்த்தகச் சபை மற்றும் அரபு வர்த்தகக் கூட்டமைப்பு தலைவருமான H.E அப்துல்லா முகமது அல் மஸ்ரோயீ (H.E Abdulla Mohammed Al Mazroeui) அவர்களுடனான சந்திப்பின்போது, அபுதாபி நிறுவனங்கள் தமிழகத்தில் உணவுப் பதப்படுத்துதல், உணவுப் பூங்காக்கள், குளிர்பதனக் கிடங்குகள், சரக்கு மற்றும் சேவைகள், வணிகத்தீர்வை திட்டங்கள் போன்றவற்றில் முதலீடுகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். மேலும், தமிழ்நாட்டில் இருந்து உணவுப் பொருட்களை ஐக்கிய அரபு நாடுகள் மற்றும் மத்திய கிழக்கு/வடக்கு ஆப்பிரிக்கா நாடுகளுக்கு ஏற்றுமதி மேற்கொள்ளலாம் என்றும் ஆலோசனை தெரிவித்தார்.

ரியல் எஸ்டேட் துறையில் முதலீடு மேற்கொள்ள ஆர்வமுள்ள நிறுவனங்கள், குடியிருப்புகள், வணிகக் கட்டடங்கள், தடையில்லா வர்த்தக மண்டலங்கள், கிடங்குகள் மற்றும் சரக்குப் போக்குவரத்துப் பூங்காக்களில் முதலீடு செய்திடலாம் என்றும், சென்னை, கோயம்புத்தூர், மதுரை, ஒசூர் போன்ற நகரங்களில் தொழில், சேவை, சில்லரை வணிகங்கள் போன்ற துறைகளில் உள்ள நிறுவனங்களுக்கு இவ்வாறான உட்கட்டமைப்புத் தேவைகள் அதிகம் உள்ளது என்றும், எனவே, இத்துறைகளில் முதலீடுகள் மேற்கொள்ளுமாறும், அபுதாபி நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்தார்.

ADQ நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி, H.E முகம்மது அல் சுவைதி (H.E Mohammed Al Suwaidi) அவர்களுடனான சந்திப்பின்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தில் மருத்துவச் சுகாதாரத் திட்டங்கள், உணவுப் பதப்படுத்துதல் போன்ற திட்டங்களில், முதலீடுகள் மேற்கொள்ளுமாறு, இந்நிறுவனத்திற்கு அழைப்பு விடுத்தார்.

லுலு குழுமத்தின் தலைவர் மற்றும் நிருவாக இயக்குநருடன் சந்திப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், லுலு குழுமத்தின் தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர் திரு. யூசுஃப் அலி அவர்களை அவரது அபுதாபி இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் லுலு நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. லுலு நிறுவனம், ரூ.3,500 கோடி முதலீடு மற்றும் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், 3 திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது. அதில், ரூ.2,500 கோடி முதலீடுகளில் 2 வணிக வளாகங்கள் மற்றும் ரூ.1,000 கோடி முதலீடுகளில் ஒரு ஏற்றுமதி சார்ந்த உணவுப் பதப்படுத்தும் திட்டம் நிறுவிட லுலு நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

துபாய் பயணத்தால் ரூ.6,100 கோடி மதிப்பில் தொழில்கள் தொடங்க ஒப்பந்தங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 28.03.2022 அன்று அபுதாபியில் உள்ள இந்தியச் சமூக மற்றும் கலாச்சார மையத்தில், இந்தியச் சமூக மற்றும் கலாச்சார மையம் மற்றும் அபுதாபி வாழ் தமிழ்ச் சமூகம் சார்பாக நடைபெற்ற பாராட்டு விழாவில் ஆற்றிய உரை.

இனிய சகோதரர் மாண்புமிகு தங்கம் தென்னரசு அவர்களே!

மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் அருமைத் தம்பி டி.ஆர்.பி.ராஜா அவர்களே!

நாடாளுமன்றத்தினுடைய மேலவை உறுப்பினர் அருமைத் தம்பி புதுக்கோட்டை அப்துல்லா அவர்களே!

நிறைவாக நன்றியுரை ஆற்றவிருக்கக்கூடிய டாக்டர் ரவிச்சந்திரன் அவர்களே!

பல்வேறு மாநிலத்தினுடைய தொழில் முனைவோர்களே! இந்தியத் தூதரக அதிகாரிகளே!

நமது இந்தியாவினுடைய பல்வேறு மாநிலத்தைச் சார்ந்திருக்கக்கூடிய சொந்தங்களே! அமீரகக் காவல்துறை அதிகாரிகளே! பெரியோர்களே! தாய்மார்களே!

என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புக்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

அபுதாபி வாழ் தமிழ் உடன்பிறப்புக்களிடத்தில் முதலில் என்னுடைய அபுதாபி மாலை வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன்.

நான்கு நாட்களாகத் துபாயிலும், இந்த அபுதாபிப் பகுதியிலும் நான் ஒரு சுற்றுப் பயணத்தை நடத்திக் கொண்டிருக்கிறேன். தமிழகத்திலே தான் சுற்றுப் பயணம் நடத்துவது எனக்கு வழக்கம். அவர்கள் அழைத்த இடங்களுக்கு எல்லாம் நான் போவது உண்டு. அப்படி அழைக்கப்பெறும் இடங்களிலெல்லாம் எனக்கு வரவேற்புகளை மகிழ்ச்சியோடு, உற்சாகத்தோடு, ஊக்கத்தோடு அவர்கள் என்னை வரவேற்பது உண்டு. அதற்குக் கொஞ்சம்கூட குறைவில்லாமல், கொஞ்சம் கூட இல்லை, ஒரு இன்ச் கூட குறைவில்லாமல், இந்த நான்கு நாட்களாக நான் திக்குமுக்காடிப் போயிருக்கிறேன். எதைப் பேசுவது, என்ன பேசுவது, எப்படிப் பேசுவது என்று நான் யோசிக்கின்ற நேரத்தில், பேசாமல் உங்கள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தால் போதும், அப்படி என்கிற உணர்வுதான் என்னை ஆட்கொண்டிருக்கிறது.

நான் நலம்! நீங்கள் அனைவரும் நலமா? நீங்கள் நலமாக இருக்கிறீர்கள் என்பது உங்களது முகத்தைப் பார்த்தாலே தெரிகிறது. உங்களுடைய

மகிழ்ச்சியை, உங்களுடைய எழுச்சியை, உங்களுடைய உணர்ச்சியை, ஆர்வத்தை, ஆரவாரத்தைப் பார்க்கின்றபோதே எனக்குத் தெரிகிறது. அப்படி இருக்கக்கூடிய உங்களைப் பார்க்கிறபோது எனக்கு மகிழ்ச்சிதான். எனக்கும் இப்போது ஒரு உத்வேகம் வருகிறது. எத்தனையோ கடல் மைல்களைத் தாண்டி இங்கே வந்து தொழில் முன்னேற்றத்திற்குக் குறிப்பாக, தமிழகத்தினுடைய முன்னேற்றத்திற்குத் திட்டங்களைத் தீட்டுகிற, அதற்காக ஒப்பந்தங்களைப் போடுகிற அந்தப் பணியை நானும் நம்முடைய தங்கம் தென்னரசு அவர்களும், எங்களோடு வருகை தந்திருக்கக்கூடிய அரசு அதிகாரிகளும், அந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே, என்னைப் பொறுத்தவரைக்கும் நான் உங்களிடத்தில் சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக மட்டுமல்ல, உங்களில் ஒருவனாக, அதனால்தான் நீங்கள் நம்மில் ஒருவராக என்னை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். உள்ளபடியே எனக்கு மகிழ்ச்சி.

தமிழ்நாட்டை நோக்கிப் பல தொழில் நிறுவனங்களை ஈர்ப்பதற்கான பயணமாக என்னுடைய பயணம் என்று சொல்லப்பட்டாலும், அதற்காகச் சுற்றுப் பயணத்தை வகுத்திருந்தாலும், இன்னும் அதைத் தாண்டி சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாட்டை நோக்கி தமிழர்களின் மனங்களை ஈர்க்கின்ற பயணமாக என்னுடைய பயணம் அமைந்திருக்கிறது.

ஆனால், இந்தப் பயணம் இவ்வளவு வெற்றி அடைந்து கொண்டிருக்கிறதே, இவ்வளவு சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறதே, ஊடகங்களில் பார்க்கிறார்கள், பத்திரிகைகளில் படிக்கிறார்கள், தொலைக்காட்சியில் இந்தக் காட்சிகளையெல்லாம் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய எல்லோரும் பார்க்கிறார்கள். ஆனால் ஒரு சிலருக்கு இந்த வெற்றியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இதைத் திசை திருப்ப வேண்டும், ஒரு தவறான பிரச்சாரத்தை நடத்திட வேண்டும் என்று திட்டமிட்டு, நான் பணத்தை எடுத்துக் கொண்டு வந்திருப்பதாக, நான் அரசியல் பேசுவதாக நீங்கள் கருதக்கூடாது, நான் அரசியல் பேசினேன் என்றால் நீங்கள் என்னை விடமாட்டீர்கள், அது வேறு அதுவும் எனக்குத் தெரியும். நான் பணத்தை எடுத்துக் கொண்டு வரவில்லை, தமிழ்நாட்டில் வாழக்கூடிய மக்களுடைய மனத்தைத்தான் எடுத்து வந்திருக்கிறேன், அதுதான் உண்மை.

இனத்தால், மொழியால், பண்பாட்டால், நாகரிகத்தால், பழக்க வழக்கங்களால், அன்பால், பண்பால், நடத்தையால், அடுத்தவருக்கு உதவி செய்யக்கூடிய குணத்தால், இன்னொருவர் பாதிக்கப்படும்போது துடிக்கக்கூடிய துடிப்பால் நாம் அனைவரும் தமிழினத்தைச் சார்ந்திருக்கக்கூடியவர்கள். எனக்கு ஒரு சந்தேகம், தமிழ்நாட்டில்தான் இருக்கிறோமா, துபாயில் இருக்கிறோமா அல்லது அபுதாபியில் இருக்கிறோமா என்று ஒரு சந்தேகம். எங்கு இருக்கிறோமோ தமிழரிடத்தில் இருக்கிறோம், தமிழர் உள்ளம் படைத்திருக்கக்கூடிய உங்களிடத்தில் இருக்கிறோம். அதுதான் எனக்கு முக்கியம். அந்த நட்பின் அடிப்படையில்தான் உங்களைத் தேடி நான் வந்திருக்கிறேன். அதேபோல, என் முகத்தைப் பார்க்க, என்ன பேசப் போகிறேன் என்பதைக் கேட்க நீங்களும் வந்திருக்கிறீர்கள்.

இதெல்லாம் தமிழுக்கும், தமிழர் நலனுக்கும் எதிராகச் சிந்திக்கக்கூடியவர்களுக்குப் புரியாது, உண்மையான தமிழனாக இருந்தால் அவனுக்குப் புரியும். பொய்களையும், அவதூறுகளையும் கட்டமைத்து, வெறுப்பு என்று சொல்லக்கூடிய நஞ்சை நெஞ்சில் விதைத்து அதன்மூலம் ஆதாயம் தேடலாம் என்று கணக்குப் போடுபவர்களுக்கு இதெல்லாம் புரியாது!

உங்களில் ஒருவனான நான், உங்களது தமிழ்ச் சொந்தங்களால் தமிழ்நாட்டின் முதலமைச்சர் பொறுப்புக்கு வந்திருக்கிறேன், அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு செயலாற்றிக் கொண்டிருக்கிறேன். நான் எப்போதும் சொல்வது உண்டு. துபாயில் கூட பேசுகிற போது, குறிப்பிட்டுச் சொன்னேன். முதலமைச்சர் பொறுப்பு என்று சொன்னேனே தவிர, முதலமைச்சர் பதவி என்று சொல்லவில்லை. என்னை ஆளாக்கி இருக்கக்கூடிய நம்முடைய தலைவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பலமுறை எங்களுக்குச் சொல்லக்கூடிய அறிவுரைகள், ஆலோசனைகள் என்னவென்றால், இன்றைக்கு நீங்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக அல்லது பல மக்களுக்குப் பணியாற்றக்கூடிய பொறுப்புக்களில் வந்திருக்கிறீர்கள் என்றால், அதை நீங்கள் பொறுப்பாக எண்ணி, பொறுப்பாகப் பணியாற்ற வேண்டும். அதை யாரும் பதவியாக நினைத்துவிடக் கூடாது, ஏதோ ஒரு பெரிய சிம்மாசனம் கிடைத்திருக்கிறது என்று நினைத்துவிடக் கூடாது. என்னுடைய உள்ளத்தில் என்றைக்கும் மறக்க முடியாத, மறைத்து வைக்க முடியாத ஒரு உண்மை என்னவென்றால், நான் முதன்முதலில் 1996ஆம் ஆண்டு சென்னை மாநகரத்தினுடைய மேயராக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மேயராக நான் பொறுப்பேற்றேன். அப்படிப் பொறுப்பேற்ற அந்த மேயர் பொறுப்பில் சென்று அமர்கிற நேரத்தில், அதில் முதல் பேச்சு என்னுடைய பேச்சு இருக்க வேண்டும், அந்த மன்றக் கூட்டத்தில் நான் உரையாற்ற வேண்டும். அதற்காக நான் ஒரு பேச்சைத் தயாரித்தேன். ஏனென்றால் முதன் முதலில் பேசப் போகிறோம், ஜாக்கிரதையாகப் பேச வேண்டும், கொஞ்சம் பதட்டமும் எனக்கு இருந்தது. ஆகவே, பேச்சை நானே முழுமையாகத் தயாரித்து நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரிடத்தில் கொண்டு போய் காண்பித்தேன். அதை அவர் படித்துப் பார்த்து, இரண்டு இடத்தில் திருத்திக் கொடுத்தார். மேயர் பதவி என்று இரண்டு இடத்தில் போட்டிருந்தேன். அந்த இரண்டு இடத்தில் அந்தப் பதவி என்கின்ற வார்த்தையை அடித்து விட்டு, மேயர் பொறுப்பு என்று மாற்றிக் கொடுத்தார். நான் இதை ஏன் அடித்துத் திருத்திக் கொடுத்திருக்கிறேன் என்று உனக்குப் புரிகிறதா என்று கேட்டார். கொஞ்சம் தயக்கத்தோடு நின்று கொண்டிருந்தேன், அவரே சொன்னார், மக்கள் உனக்கு மேயர் பதவியைத் தரவில்லை, மேயர் பொறுப்பு என்கிற அந்தக் காரியத்தை உன்னிடத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள். அதைப் பொறுப்போடு இருந்து, பொறுப்புணர்வோடு நீ பணியாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் நான் அதை மாற்றிக் கொடுத்தேனே தவிர வேறு அல்ல என்று எனக்கு விளக்கம் சொன்னார்.

ஆகவே, இப்போது முதலமைச்சர் என்கின்ற பொறுப்பில் நான் அமர்ந்திருக்கிறேன் என்று சொன்னால், அதைப் பதவியாகக் கருதாமல், மக்களுக்குத் தொண்டாற்றக் கூடிய அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடிச் சொல்வார்கள்; மக்களிடம் செல், மக்களோடு மக்களாக இருந்து பணியாற்று, மக்களுக்காக உன் கடமையைச் செய் என்று அடிக்கடி சொல்வார். ஆகவே, அந்த நிலையிலேதான் நான் என்னுடைய பணியை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறேன்.

அத்தகைய கோடிக்கணக்கான மக்களுடைய பிரதிநிதியாக இருந்து தமிழ்நாட்டைத் தெற்காசியாவிலேயே சிறந்த மாநிலமாக மாற்றுவதற்கு, ஆக்குவதற்கு அனைத்து முயற்சிகளையும் நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன். அதில் நான் வெற்றி பெறுவேன் என்கிற நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கிறது.

ஏனென்றால், நான் கலைஞருடைய மகன். அதுவும், உங்கள் முகத்தையெல்லாம் பார்க்கிறபோது, உங்களுடைய எழுச்சியை, ஆர்வத்தை, ஆரவாரத்தை, உணர்ச்சியை, இந்த அன்பை எல்லாம் பார்க்கிறபோது, அதை நிச்சயம் நிறைவேற்றுவேன் என்ற நம்பிக்கை இன்னும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை.

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சி, அதுதான் திராவிட மாடல். அந்த திராவிட மாடல் ஆட்சியைத்தான் நாங்கள் இன்றைக்குத் தமிழகத்தில் நடத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே, பல துறைகள் இருந்தாலும், முக்கியமான துறைகளில் ஒன்று, தொழில்துறை. அந்தத் தொழில் வளர்ச்சி என்பது தனிப்பட்ட ஒரு நிறுவனத்தினுடைய வளர்ச்சி மட்டுமல்ல, ஒரு தொழில் நிறுவனம் தொடங்குகின்றபோது, அந்த நிறுவனத்தோடு சேர்ந்து பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பயனடைகிறார்கள். அந்த நிறுவனத்தின் மூலமாக மாநிலமே வளர்ச்சி பெறுகிறது. அத்தகைய வளர்ச்சிக்கு இந்த ஐக்கிய அரபு அமீரகமும், அதன் நிறுவனங்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று நான் உங்களையெல்லாம் விரும்பி, வேண்டிக் கேட்டுக்கொள்ள வந்திருக்கிறேன்.

இந்தப் பயணத்தில், நான் பெருமையோடு சொல்கிறேன், 6,100 கோடி ரூபாய் மதிப்பிலான தொழில்கள் தொடங்க ஒப்பந்தங்கள் போடப்பட்டிருக்கின்றன. துபாய் இல்லாமல், துபாய் நிறுவனங்கள் இல்லாமல் ஒரு மாநிலம் வளர முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும், எனக்கும் தெரியும். அதனால்தான் முதல் வெளிநாட்டுப் பயணமாகத் துபாய் பயணத்தைத்தான் நான் தேர்ந்தெடுத்தேன். தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கு இத்தனை நிறுவனங்கள் ஆர்வமாக இருப்பதைப் பார்த்து நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

துபாய்க்கு வந்த பிறகு, இதனை வெளிநாட்டுப் பயணம் என்று சொல்ல முடியாத அளவுக்குச் சொந்த நாட்டுக்குள் இருப்பது போன்றுதான் நான் உணர்கிறேன். அந்த உணர்வை நீங்கள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறீர்கள்.

துபாயில் இருக்கக்கூடிய உலகின் மிக உயர்ந்த கட்டடமான புர்ஜ் கலீஃபா அந்தக் கோபுரத்தில் நம்முடைய செம்மொழியான தமிழ் வண்ண வண்ண விளக்குகளில் ஒளிர்ந்ததை, அதைப் பாடியதை, நம்முடைய தமிழ்நாட்டின் பெருமை, பாரம்பரியம், அகழ்வாய்வுகள் காட்டும் தொன்மை ஆகியவற்றின் சிறப்புகள் உலகறிய வெளிப்பட்டதைப் பார்த்தபோது எனக்கு உள்ளபடியே மகிழ்ச்சி. மகிழ்ச்சி இருந்தாலும் ஒரு ஏக்கம் இருந்தது, இதைப் பார்க்க நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் இல்லையே என்ற அந்த ஏக்கம் எனக்கு இருந்தது.

கலைஞர் அவர்கள் இல்லாவிட்டாலும், கலைஞரின் பிள்ளையான நான் அதைப் பார்த்ததில் எனக்கு மகிழ்ச்சி. இன்னும் சொல்ல வேண்டுமென்றால், நான் மட்டுமா தலைவர் கலைஞருடைய பிள்ளை, நீங்களும் தலைவர் கலைஞருடைய பிள்ளைகள்தான், அவரது உடன்பிறப்புக்கள்தான். அத்தகைய தமிழ் உணர்வை, கடல் கடந்து வந்திருந்தாலும், நீங்கள் தக்க வைத்திருப்பதைப் பார்க்கும் போது எனக்கு உள்ளபடியே பெருமையாக இருக்கிறது.

அதுதான் தமிழுக்கு இருக்கக்கூடிய பெருமை. தமிழினத்தினுடைய பெருமை. தமிழினத்துக்கு இருக்கும் பெருமை. தமிழ்நாட்டுக்கு இருக்கக்கூடிய பெருமை.

நேற்று முன் தினம் துபாய் தமிழர்களைப் பார்த்த போதும், அதேபோல, இன்று அபுதாபித் தமிழர்களைப் பார்க்கும்போதும், சத்தியமாகச் சொல்கிறேன், உறுதியாகச் சொல்கிறேன், அண்ணா மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். தமிழ்நாட்டில் தான் இருக்கிறோமா அல்லது வேறு எங்காவது இருக்கிறோமா!

‘கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்தகுடி தமிழ்க்குடி’ என்று சொல்வார்கள்.

இன்றைக்கு உலகம் முழுவதும் பரவியிருக்கும் நம்முடைய தமிழினம், சுமார் 75க்கும் மேற்பட்ட நாடுகளில் தமிழர்கள் வந்து வாழ்கிறார்கள்.

தமிழ்ப் பெருமையை நாம் பேசினாலும், **‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’** என்ற தமிழ் நெறிப்படி உலகம் முழுவதும் பரவி நாம் வாழ்ந்து வருகிறோம்.

எந்த நாட்டில் வாழ்ந்தாலும், நமது தாய் மண்ணை நாம் மறந்துவிடக் கூடாது.

சிவகங்கை மாவட்டம் கீழடியில் கிடைத்துள்ள ஆதாரங்கள் நம்முடைய பழமையை, பெருமையைப் பறைசாற்றுவதாக அமைந்துள்ளது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, வியக்கத்தக்க வகையிலே செங்கல் கட்டுமானங்கள், கருப்பு மற்றும் சிவப்பு வண்ணம் தாங்கிய பானை ஓடுகள், அரிய கல்மணிகள், தங்க அணிகலன்கள், சிந்துவெளி நாகரிக காலத்தில் காணப்பட்ட அதே, திமில் கொண்ட காளையின் எலும்புகள், விளையாட்டுப் பொருட்கள், தொழிற்பகுதிகள் என ஒரு செழுமைமிக்க சமூகமாகச் சங்ககாலத் தமிழர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை நாம் மட்டுமல்ல, உலகமே கீழடி மூலமாக அறிந்து கொண்டிருக்கிறது.

இவற்றைக் கொண்ட மாபெரும் கண்காட்சி அரங்கத்தை விரைவில் நாம் அமைக்க இருக்கிறோம்.

❖ கீழடி, ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை, கொடுமணல், மயிலாடும்பாறை, கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய இடங்களிலும் தற்போது அகழாய்வுப் பணிகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம்.

தமிழினத்தின் வரலாறு என்பது 3,200 ஆண்டுகளுக்கு முந்தியது என்ற வரலாற்றை மீட்டெடுக்கத் தமிழ்நாடு அரசு உறுதி பூண்டுள்ளது.

ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின்போது கிடைத்திருக்கக்கூடிய அரிய பொருட்களை அழகுறக் காட்சிப்படுத்தும் விதமாக, திருநெல்வேலி நகரில் நவீன வசதிகளுடன் அருங்காட்சியகம் அமைக்கப்படும். இது “தண்பொருநை” அருங்காட்சியகம் என அழைக்கப்படும் என்று சட்டமன்றத்தில் நான் ஏற்கெனவே அறிவித்திருக்கிறேன்.

இதுமட்டுமல்ல, தமிழ்ப் பண்பாட்டின் வேர்களைத் தேடி, இந்திய நாடெங்கும், அதேபோல் கடல்கடந்து பயணம் செய்து தமிழர்கள் வெற்றித்தடம் பதித்த வெளிநாடுகளிலும் தமிழ்நாடு தொல்லியல் துறை உரிய அனுமதிகளைப் பெற்று இனி ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளும் என்றும் நான் அறிவித்திருக்கிறேன்.

ஓர் இனம் கடந்தகால வரலாற்றை முழுமையாக அறிந்திருக்க வேண்டும். அதனை ஆவணப்படுத்த வேண்டும். அதனை வரக்கூடிய வருங்காலத் தலைமுறைக்குச் சொல்லித் தர வேண்டும். எத்தகைய வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள் என்ற பெருமிதம் நமக்கு வேண்டும்.

அதே நேரத்தில் கடந்தகாலப் பெருமைகளை மட்டும் பேசிக் கொண்டு இருந்துவிடக் கூடாது. நிகழ்காலத்தில் கல்வியில்,

வேலைவாய்ப்பில், தொழில் வளர்ச்சியில், வர்த்தகத்தில் நாம் முன்னேற வேண்டும்.

அதனால்தான், ஒரு கையில் கடந்த காலப் பெருமிதங்கள், இன்னொரு கையில் எதிர்காலப் பெரிய உயர்வுகள் ஆகிய இரண்டுக்கும் முக்கியத்துவம் தரும் அரசாகத் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. இத்தகைய அரசுக்கு நீங்கள் உறுதுணையாக இருப்பதற்கு மீண்டும், மீண்டும் உங்கள் அத்தனைப் பேருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நேற்றைய முன்தினம் நான் துபாயில் குறிப்பிட்டதைப் போல, சாதி, மதம் ஆகிய வேற்றுமைக்கு முக்கியத்துவம் தராமல், இனத்தால் மொழியால் நாம் அனைவரும் தமிழர்கள் என்ற ஒற்றுமை உணர்வோடு வாழுங்கள் என்று உங்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நம்மை ஒற்றுமைப்படுத்தும் ஆற்றல் நம் தமிழ் மொழிக்கு உண்டு!

அத்தகைய தமிழினப் பெயரால் அமைந்துள்ள அபுதாபி தமிழ்ச் சங்கத்தில் எனக்கு நீங்கள் கொடுத்துள்ள இந்த வரவேற்பு என்னுடைய வாழ்நாளில் மறக்க முடியாத ஒரு வரவேற்பாக அமைந்திருக்கிறது. அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, உங்களையும் தமிழ்நாடு வரவேற்கக் காத்திருக்கிறது. இந்த நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்னால் அமீரகத் தேசிய கீதம் பாடல் பாடப்பட்டது. இந்தியாவினுடைய தேசிய கீதம் பாடலும் பாடினார்கள். அதேபோல தமிழ்த்தாய் வாழ்த்தும் பாடப்பட்டிருக்கிறது. ஆகவே, எப்படி அமீரக தேசிய கீதம் பாடுகின்றபோது, நாம் எழுந்து நின்று அதற்குரிய மரியாதையை, நம்முடைய வணக்கத்தைச் செலுத்தினோமோ, அதேபோல, இந்தியாவினுடைய தேசிய கீதம் பாடுகிறபோதும் நாம் நம்முடைய மரியாதையை, நம்முடைய வணக்கத்தைத் தெரிவித்திருக்கிறோம். நிறைவாக, தமிழ்த்தாய் வாழ்த்து பாடுகிறபோது பார்த்தேன், எல்லோருடைய வாயும் அசைந்தது, மேடையில் இருக்கக்கூடிய எல்லோருடைய வாயும், என்னுடைய வாயும் சேர்த்துச் சொல்கிறேன். எல்லோர் வாயும், அந்தப் பாடலைப் பாடியது. அந்தப் பாடலுக்கு நாம் ஆட்சிக்கு வந்தவுடன் ஒரு சர்ச்சை ஏற்பட்டது, நான் அந்த பிரச்சினைக்குப் போக விரும்பவில்லை. ஆனால், அந்த சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்து இனி தமிழ்த்தாய் வாழ்த்துக்கு எல்லோரும் எழுந்து நின்று வணக்கத்தைச் சொல்ல வேண்டும் என்று ஒரு அரசாணையையும் வழங்கப்பட்டது, அதை நீங்கள் செய்திகளில் பார்த்திருப்பீர்கள்.

ஆகவே, நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை, நான் எப்போதும் அதிக நேரம் பேச மாட்டேன். அதைக்கூட எல்லோரும் கிண்டல் செய்வார்கள், இவர் பேசவே மாட்டார், பேசவே மாட்டார் என்று. ஓர் அடுக்கு மொழி உண்டு, பேச்சைக் குறைத்துச் செயலில் நம்முடைய திறமையைக் காட்டு. என்னைப் பொறுத்தவரைக்கும், அடிக்கடிப் பல கூட்டங்களில் சொல்லியிருக்கிறேன். ஓர் அடுக்கு மொழி உண்டு, Do or Die செய் அல்லது செத்து மடி என்று வரும். ஆனால் அந்த or என்கிற வார்த்தையை நீக்கிவிட்டு Do and Die, செய்து முடித்துவிட்டுத் தான் சாகவேண்டும். அப்படி என்கிற அந்த உறுதியை எடுத்துக்கொண்ட காரணத்தால்தான், பேச்சைக் குறைத்து நம்முடைய செயலில், நம்முடைய திறமையைக் காட்டிட வேண்டும் என்ற அந்த உணர்வோடு நான் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். தமிழ்நாட்டுக்குப் போய் இன்று இரவோடு இரவாக நான் இறங்கப் போகிறேன். பத்திரிக்கை நிருபர்கள், ஊடகத்துறையைச் சார்ந்தவர்கள் என்னை மறித்துக் கேட்பார்கள், என்ன நடந்தது, எவ்வளவு முதலீட்டைப் பெற்றிருக்கிறீர்கள், எப்படி இருந்தது என்று துளைத்துத் துளைத்துக் கேள்வி கேட்பார்கள். நான் அவர்களிடத்திலே சொல்லப் போவது ஒன்றே ஒன்றுதான். நான் துபாய்க்கு, அபுதாபிக்குச் சென்றுவிட்டு வந்தேனென்றால், அங்கிருக்கக் கூடிய என்னுடைய சொந்தங்களை, என்னுடைய உறவினர்களை, என்னுடைய நண்பர்களை, என்னுடைய உடன்பிறப்புக்களைப் பார்க்கத்தான் போயிருந்தேன், பார்த்துவிட்டுத்தான் வந்திருக்கிறேன்.

எனக்கு ஒரு ஏக்கம், உள்ளபடியே ஒரு ஏக்கத்தோடு தான் நிற்கிறேன். என்ன ஏக்கம் என்றால், நான்கு நாள் தானே நிகழ்ச்சி போட்டிருக்கிறோம், இன்னும் ஒரு நான்கு நாட்கள் இருந்துவிட்டுப் போகக்கூடாதா அப்படியென்ற ஒரு ஏக்கம் எனக்கு வந்திருக்கிறது. ஆனால், நாளைக்கு சென்னைக்குச் சென்றவுடன், உடனடியாக நான் டெல்லிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. பிரதமரிடத்திலும், உள்துறை அமைச்சரிடத்திலும் நேரம் கேட்கப்பட்டு, நேரமும் தேதியும் குறித்துக் கொடுத்திருக்கிறார்கள், அந்த நிகழ்ச்சியில் சென்று கலந்து கொள்ள வேண்டும். அதைத் தொடர்ந்து எப்படி சென்னையில் கலைஞரால் கட்டப்பட்ட அறிவாலயம் இன்றைக்குக் கம்பீரமாகக் காட்சி அளித்துக் கொண்டிருக்கிறதோ, அதேபோல, இந்தியாவினுடைய தலைநகரமான புதுதில்லியிலேயே கலைஞர் அறிவாலயம் கட்டடம் கட்டப்பட்டு, அதனுடைய தொடக்க விழா நிகழ்ச்சியும் நடைபெற இருக்கிறது. அதற்கெல்லாம், பணிகள் இருக்கின்றன, அதற்கு உடனடியாக நான் போக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன்.

இப்போது சொல்கிறேன்,இனிமேல் நீங்கள் அழைத்தாலும், அழைக்காவிட்டாலும் அடிக்கடி இந்தத் துபாய்க்கு வந்து போவேன். ஆகவே, துபாயில் நடந்த நிகழ்ச்சியின்போது, ஏனென்றால் இங்கு வந்திருக்கக்கூடிய 99 சதவிகிதம் என்று கூடச் சொல்ல வேண்டாம், 100 சதவிகிதமும் எப்படியாவது இவரிடம் போய் ஒரு செல்பி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருப்பீர்கள், அதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று காத்துக் கொண்டிருக்கிறீர்கள், அது எனக்குத் தெரிகிறது. தமிழ்நாட்டிலேயே அது இருக்கிறது என்றால் இங்கு இல்லாமல் போய்விடுமா அது ? அதனால்தான், துபாயில் என்ன செய்தேன் என்றால், நீங்கள் அப்படியே அமர்ந்திருங்கள், நான் இந்த மேடையில் இருந்துகொண்டு உங்களை செல்பி எடுத்துக்கொண்டு, அது சமூக ஊடகங்களில் எல்லாம் வந்துவிடும், வந்துவிட்டது என்றால், அதை நீங்கள் எடுத்து வைத்துக் கொள்ளலாம். சுலபமாக எந்தத் தள்ளுமுள்ளு இல்லாமல், எந்த பிரச்சினையும் இல்லாமல் அதை எடுத்துக்கொள்ள முடியும். எனவே அமைதியாக அப்படியே உட்கார்ந்திருங்கள், நான் உங்களிடத்தில் செல்பி எடுத்துக்கொள்வதற்கு நீங்கள் அனுமதி கொடுக்க வேண்டும் என்று உங்களையெல்லாம் அன்போடு கேட்டு இந்தச் சிறப்பான வாய்ப்பை எனக்கு ஏற்படுத்தித் தந்த அனைவருக்கும் என்னுடைய இதயப்பூர்வமான நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

துபாய் பயணம் தமிழக வளர்ச்சிக்கு ஆக்கப்பூர்வமான அடித்தளம்

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
துபாய் மற்றும் அபுதாபி பயணத்தை
முடித்துக் கொண்டு 29.03.2022 அன்று
அதிகாலை சென்னை வந்தடைந்த பின்
சென்னை விமான நிலையத்தில்
செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி

அனைவருக்கும் வணக்கம்.

நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, முதல்முறையாக வெளிநாட்டுப் பயணமாகத் துபாய், அபுதாபி போன்ற நாடுகளுக்குச் சென்று விட்டு வந்திருக்கிறேன். என்னுடைய பயணம் வெற்றிகரமாக, மகிழ்ச்சிகரமான பயணமாக அமைந்தது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எப்படி துபாய் ஒரு பிரம்மாண்டமான ஒரு நாடாக உருவாகியிருக்கிறதோ, அதுபோன்று என்னுடைய பயணமும் மிகப் பிரம்மாண்டமான வகையில் அமைந்தது என்பதை மகிழ்ச்சியுடன் நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆறு மிக முக்கியமான தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoU) போடப்பட்டு இருக்கிறது. இரும்புத் தளவாடங்கள் துறையில் இருக்கக்கூடிய நோபல் ஸ்டீல்ஸ் துறையோடு ரூ.1,000 கோடி மதிப்பிலான ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. ஜவுளித் துறையைச் சார்ந்த White House நிறுவனத்துடன் ரூ.500 கோடி மதிப்புள்ள ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. உணவுத் துறையைச் சார்ந்த Transworld குழுமத்தோடு ரூ.100 கோடி மதிப்பில் ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. மருத்துவத் துறையைச் சார்ந்த Aster DM Healthcare நிறுவனத்தோடு ரூ.500 கோடி மதிப்பில் ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. சரக்குப் போக்குவரத்து நிறுவனத்தைச் சார்ந்த Sharaf நிறுவனத்துடன் ரூ.500 கோடி மதிப்பில் ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. உணவுப் பதப்படுத்தும் தொழில் மற்றும் கட்டுமானத்துறையைச் சார்ந்த Lulu நிறுவனத்தோடு ரூ.3,500 கோடி மதிப்பில் ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. இந்த ஆறு நிறுவனங்களுடன் ரூ.6,100 கோடி மதிப்புள்ள ஒப்பந்தங்கள் போடப்பட்டிருக்கின்றன. இந்த ஒப்பந்தங்கள் போடப்பட்டிருப்பதன் மூலமாக 14,700 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாகப் போகிறது. ஆகவே,

இந்தப் பயணம் ஒரு மகத்தான பயணமாக, வெற்றிப் பயணமாக அமைந்திருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

துபாய் மற்றும் அபுதாபிக்குச் சென்று அந்த நாட்டினுடைய முக்கியமான துறைகளின் அமைச்சர்களையும், அரசு சார்ந்த அலுவலர்களையும், பெரிய பெரிய தொழில் நிறுவனங்களின் தலைவர்களையும் நான் சந்தித்து உரையாடி இருக்கிறேன். துபாய், அபுதாபி உள்ளிட்ட அமீரகத்தின் பெரும் நிதி மேலாண்மை நிறுவனங்கள் தமிழ்நாட்டில் புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தித் திட்டங்கள், சிறு துறைமுகங்கள் மேம்பாடு, உணவு பதப்படுத்துதல், தொழில் பூங்காக்கள் உருவாக்கக்கூடிய திட்டங்களில் முதலீடு செய்திட அவைகளெல்லாம் முன்வந்திருக்கின்றன. தமிழகத்தில் தொழில் முதலீட்டுக்கு ஏற்ற சூழல் இருப்பதை நான் தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறேன். தமிழ்நாட்டில் நிலவக்கூடிய, தொழில் தொடங்க உதவக்கூடிய சாதகமான சூழ்நிலை அமைந்திருப்பதை எல்லோரும் அங்கே என்னைப் பாராட்டினார்கள், தமிழகத்தையும் ஒட்டுமொத்தமாக பாராட்டியிருக்கிறார்கள். இப்போது 6 மிகப்பெரிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியிருக்கின்றன. தொடர்ந்து, அடுத்தடுத்த மாதங்களில் இன்னும் பல ஒப்பந்தங்கள் கையெழுத்தாக இருக்கின்றன. நான் சந்தித்த அனைவரையும், தமிழ்நாட்டிற்கு வருகை தரவேண்டும் என்று நான் அழைப்பு விடுத்திருக்கிறேன். அவர்களது வருகை தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கு அடித்தளமாக நிச்சயம் அமையப் போகிறது.

ஜவுளித்துறை, மருத்துவ சேவைத்துறை, உணவுப் பதப்படுத்துதல், இரும்புத் தளவாடங்கள் செய்தல் ஆகிய துறைகள் நிச்சயமாக வளர்ச்சி பெறும். அந்தவகையில், துபாய் பயணம் தமிழக வளர்ச்சிக்கு ஆக்கப்பூர்வமான அடித்தளத்தை அமைத்துள்ளது. அதேபோல் நம்முடைய தொழில்துறை அமைச்சர் அவர்களும், அவருக்குத் துணை நிற்கக் கூடிய தொழில்துறை அதிகாரிகளும் மிகவும் சிறப்பான வகையில் நம்முடைய பிரச்சினைகளை எல்லாம் அங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களை எல்லாம் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், தமிழ்நாட்டில் தொழில் துறையின்கீழ் இயங்கக்கூடிய தொழில் வழிகாட்டி நிறுவனம் (Guidance Bureau) மூலமாக இரு நாடுகளிலிருந்து மேலும் முதலீடுகளைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்படும்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அனைத்தும் காகிதக் கப்பல்களாகத்தான் இருந்தது. ஒப்பந்தம் போட்டதோடு சரி. ஆனால் நாங்கள் ஒப்பந்தம் போட்டிருக்கிறோம். அதனைவிட முக்கியமாக அந்த நிறுவனங்கள் இங்கே வந்து தொழில் தொடங்க நடவடிக்கை எடுப்பதும், துரிதப்படுத்துவதுடன், முதலமைச்சரின் அலுவலகத்தில் Dash Board வைத்து மாதந்தோறும் அதை நாங்கள் ஆய்வு நடத்திக் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே அந்தத் தொழிலைத் தொடங்கி ஒரு நல்ல சூழலை உருவாக்கப் போகிறோம். வேலைவாய்ப்பை உருவாக்கப் போகிறோம். இதனை, உடன் வந்த அதிகாரிகள் அனைவருக்கும் நான் உத்தரவாகப் பிறப்பித்திருக்கிறேன். தொழில் துறைக்கு நன்றி சொன்னது போலவே, துபாய் அபுதாபி வாழ் தமிழர்களுக்கும் நான் இந்த நேரத்தில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் தந்த வரவேற்பு மிகவும் எழுச்சியோடு, உணர்ச்சியோடு இருந்தது, இன்னும் வெளிப்படையாகச் சொல்லவேண்டுமென்றால், நாங்கள் போனபோது தமிழ்நாட்டு உணர்வைத்தான் நான் பெற்றேன். அந்த அளவிற்கு அவர்கள் உற்சாகத்தை, வரவேற்பை எனக்கு வழங்கியிருக்கிறார்கள். எனக்கே ஒரு சந்தேகம் வந்தது, இது தமிழ்நாடா அல்லது துபாயா என்று கூட எனக்குச் சந்தேகம் வந்தது. அந்த வகையில், என்னுடைய பயணம் வெற்றிகரமாக அமைந்தது என்பதை மீண்டும், மீண்டும் உங்கள் மூலமாகத் தமிழ்நாட்டு மக்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கேள்வி: துபாயில் உள்ள தொழிலதிபர்களுக்கு இங்கு வந்து தொழில் தொடங்குவதற்கு எந்த அளவு எதிர்பார்ப்பு இருக்கிறது? இங்கு வந்து தொழில் தொடங்குவதற்கு அவர்களுக்கு எந்த அளவுக்கு நம்பிக்கை கொடுத்திருக்கிறீர்கள்?

மாண்புமிகு முதலமைச்சர்: ஒப்பந்தம் நேரடியாகக் கையெழுத்திட்டிருக்கிறோம். தமிழ்நாட்டில் தொடங்கினீர்கள் என்றால் எல்லா விதமான சலுகைகளும் முறையான வகையில் தொழில் தொடங்குவதற்கான சூழ்நிலையை நிச்சயமாக உருவாக்கித் தருகிறோம் என்ற நம்பிக்கையைக் கொடுத்திருக்கிறோம். அவர்களும் அந்த நம்பிக்கையுடன்தான் இருக்கிறார்கள்.

கேள்வி: இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் தொழில் வடிவம் எத்தனை மாதங்களில் வரும்?

மாண்புமிகு முதலமைச்சர்: ஒரு குறிப்பிட்ட காலத்தை நிருணயித்து ஒப்பந்தம் கையெழுத்திட்டிருக்கிறோம். அதுதான் சொன்னேன், நாங்கள் ஒப்பந்தம் போட்டிருக்கிற தேதிக்கு முன்பே அந்தத் தொழிலைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்து வேலைவாய்ப்பை நிச்சயமாக உருவாக்கித் தருவோம். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

கேள்வி: உங்களுடைய பயணம் குறித்து எதிர்க்கட்சிகள் எல்லாம் பல குற்றச்சாட்டுகள் வைக்கிறார்கள், அதை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?

மாண்புமிகு முதலமைச்சர்: அவர்கள் எதிர்க் கட்சி, அப்படித்தான் சொல்வார்கள். நான் அதைப் பற்றியெல்லாம் கவலைப்படுவது கிடையாது.

கேள்வி: தொடர்ச்சியாக இப்பொழுது ஐக்கிய அரபு நாடுகளில் சென்றதுபோல, வேறு நாடுகளுக்குச் சென்று, தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான வாய்ப்பு எப்படி இருக்கிறது?

மாண்புமிகு முதலமைச்சர்: தொழில் தொடங்கக்கூடிய சூழ்நிலையில், வேலைவாய்ப்பு ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலையில் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக நிச்சயமாக அப்படி ஒரு சூழ்நிலை வருகிறபோது நான் நிச்சயமாகப் பயன்படுத்துவேன், அதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

துபாய் மற்றும் அபுதாபியில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

லுலு குரூப்	ரூ.3,500 கோடி	ஓமிட் ஹவுஸ்	ரூ.500 கோடி
நோபல் ஸ்டீல்ஸ்	ரூ.1,000 கோடி	ஷராப்	ரூ.500 கோடி
அஸ்டர் டிஎம் ஹெல்த்கேர்	ரூ.500 கோடி	டிரான்ஸ்வேல்டு	ரூ.100 கோடி

தமிழகத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்கான பல்வேறு கோரிக்கைகள்

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 31.03.2022 அன்று புதுதில்லியிலுள்ள பிரதமர் அலுவலகத்தில், சந்தித்து, தமிழகத்தின் வளர்ச்சித் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை வழங்கினார். அதன் விவரங்கள் வருமாறு:

நீர்வளப் பிரச்சினைகள்

- ❖ காவிரியின் குறுக்கே கருநாடகாவால் மேகதாது அணைக் கட்டும் திட்டம் தொடர்பான பிரச்சினை.

மீன்வளம்

- ❖ பாக். வளைகுடாவில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- ❖ "கச்சத்தீவு" மீட்பது மற்றும் தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை மீட்டெடுப்பது.

எரிசக்தி

- ❖ நிலக்கரி குறித்த விவகாரங்கள் – தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு அதிக அளவிலான நிலக்கரி பெறுவதற்கான முன்னெடுப்புகள் மற்றும் கூடுதலான இரயில் தொடர்கள் ஒதுக்கீடு செய்யக் கோருதல்.
- ❖ ரெய்கார், புகழூர் உயர் மின் அழுத்த மின் தொடரமைப்பினை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சொத்தாக அறிவித்தல்.

நிதி

- ❖ மாநிலங்களுடன் மேல்வரிகள் மற்றும் கூடுதல் கட்டணம் மூலம் வரும் வருவாயைப் பகிர்ந்து கொள்வது.
- ❖ ஜூன் 2022க்குப் பின்பும் ஜி.எஸ்.டி. இழப்பீட்டைத் தொடர்ந்து வழங்குதல்.

சுகாதாரம்

- ❖ மருத்துவ மாணவர் சேர்க்கை கொள்கை மற்றும் தேசியத் தகுதி மற்றும் நுழைவுத் தேர்வுக்கு (NEET) எதிர்ப்பு.
- ❖ உக்ரைனில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் படிப்பு தடைப்பட்ட நிலையிலிருந்து இந்தியாவில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் படிப்பைத் தொடர வழியைக் கண்டறிதல்.

வேளாண்மை

- ❖ பிரதம மந்திரி வேளாண்மை பயிர் பாதுகாப்புத் திட்டத்திற்கு (PMFBY) ஒன்றிய அரசின் பங்களிப்பை முந்தைய நிலைக்கு உயர்த்துதல்.

தொழில்கள்

- ❖ காலணி உற்பத்தியில் பி.எல்.ஐ. (PLI) திட்ட அறிமுகம்.
- ❖ டி.டி.ஐ.எஸ். (DTIS) திட்டத்தில் தமிழ்நாடு பாதுகாப்பு தொழில்துறை வழித்தடத்திற்கு முன்னுரிமை ஒதுக்கீடு.
- ❖ தமிழ்நாட்டில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) ஆய்வுக்கூடம் அமைத்தல்.
- ❖ சேலம் எஃகு ஆலையின் மிகை நிலம் பாதுகாப்பு தொழில் பூங்காவிற்கு வழங்கப்படுதல்.
- ❖ மப்பேடுவில் மல்டி மாடல் லாஜிஸ்டிக் பார்க் (MMLP) வரை இரயில் பாதை அமைத்தல்.

பள்ளிக்கல்வி

- ❖ தேசியக் கல்விக் கொள்கை –2020.

சென்னை மெட்ரோ இரயில்

- ❖ சென்னை மெட்ரோ இரயில் திட்டம் – II, இந்திய அரசுக்கும், தமிழ்நாடு அரசுக்கும் இடையே 50:50 பங்கு அடிப்படையில் ஒப்புதல்.

பிற்படுத்தப்பட்டோர் நலன்

- ❖ 2022இல் ஹஜ் புனிதப் பயணத்திற்கான புறப்படும் இடமாகச் சென்னையை அறிவிக்கக் கோரிக்கை.

பொது

- ❖ இலங்கைத் தமிழர் பிரச்சினை, ஈழத் தமிழர்களுக்குச் சம உரிமையியல் மற்றும் அரசியல் உரிமைகள்.
- ❖ இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலையின் காரணமாக அல்லலுறும் இலங்கைத் தமிழர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் உயிர் காக்கும் மருந்துகளைத் தமிழக அரசின் சார்பில் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் தொடர்பாக.

போக்குவரத்து

- ❖ தமிழ்நாட்டில் புதிய இரயில்வே திட்டங்கள்.

சுற்றுச்சூழல்

- ❖ நியூட்ரினோ ஆய்வகத் (INO) திட்டத்தைக் கைவிடக் கோரிக்கை.
- ❖ கூடங்குளம் அணுமின் திட்டம் – செலவழித்த அணு எரிபொருள் நீக்குதல் தொடர்பாக (SNF).

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்

- ❖ நரிக்குறவர்கள் / குருவிக்காரர்கள் சமூகங்களைத் தமிழ்நாட்டின் பட்டியல் பழங்குடியினர் பட்டியலில் சேர்த்தல்.

மாண்புமிகு பிரதமர் அவர்களுடனான சந்திப்பு மகிழ்ச்சியாகவும், மனநிறைவாகவும் அமைந்தது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 31.03.2022 அன்று தமிழ்நாடு இல்லத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி.

அனைவருக்கும் என் அன்பான வணக்கம்!

மூன்று நாள் பயணமாக நேற்று டெல்லிக்கு நான் வருகை தந்திருக்கிறேன். முதலமைச்சராகப் பொறுப்பேற்று எனது மூன்றாவது தில்லிப் பயணம் இது!

மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களை இன்று மதியம் நாடாளுமன்ற வளாகத்தில் சந்தித்தேன். சந்திப்பதற்காக நேரம் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று நான் கோரிக்கை வைத்தபோது உடனடியாக அதற்கு நேரம் ஒதுக்கிச் சந்தித்தமைக்காக நான் முதலில் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டினுடைய மிக முக்கியமான 14 கோரிக்கைகள் அடங்கிய மனுவினை (Memorandum) மாண்புமிகு பிரதமர் அவர்களிடத்தில் நான் வழங்கினேன். அந்தக் கோரிக்கைகளில் இருக்கக்கூடிய முக்கியத்துவத்தை அவருக்கு நான் தெளிவாக எடுத்துரைத்தேன். அப்போது பொறுமையாக அனைத்தையும் கேட்ட மாண்புமிகு பிரதமர் அவர்கள், அதன் மீது உரிய நடவடிக்கை எடுப்பதாக என்னிடத்தில் உறுதி அளித்திருக்கிறார்கள். மாண்புமிகு பிரதமர் அவர்கள் அளித்த உறுதிமொழிக்கும் நான் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைத் தற்போது இங்கு இருக்கக்கூடிய ஊடகங்கள் மூலமாகவும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பிரதமர் அவர்களுடனான இந்தச் சந்திப்பு மகிழ்ச்சிக்குரியதாகவும், மனநிறைவை அளிப்பதாகவும் அமைந்திருந்தது. மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் நான் அளித்த கோரிக்கை மனு ஏற்கெனவே உங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், குறிப்பிட்ட சில முக்கியமான கோரிக்கைகளை மட்டும் நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

இலங்கையில் இப்போது நடந்துவரும் அசாதாரண சூழலை நீங்கள் அறிவீர்கள். பொருளாதார நெருக்கடியில் சிக்கி வேதனையில் தவித்துக் கொண்டிருக்கக்கூடிய இலங்கைத் தமிழர்களுக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் உதவி செய்வதற்கு அனுமதி வழங்க வேண்டும். அதேபோல, அத்தியாவசியமான பொருள்களையும் உயிர் காக்கும் மருந்துகளையும் அவர்களுக்கு வழங்குவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்கிற அந்தக் கோரிக்கையை நான் வைத்திருக்கிறேன். அதேநேரத்தில், இலங்கையில் தமிழர்களுக்குச் சம உரிமையும், அரசியல் உரிமையும் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அந்த கோரிக்கையையும் எடுத்து வைத்திருக்கிறேன். தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமை குறித்தும் வலியுறுத்தி இருக்கிறேன். கச்சத்தீவு மீட்புக் குறித்தும் கோரிக்கை வைத்திருக்கிறேன்.

தொடர்ந்து, உக்ரைனில் பாதிக்கப்பட்ட இந்திய மாணவர்களின் மருத்துவக் கல்லூரிப் படிப்பை இந்தியாவில் தொடர அனுமதி வழங்க வேண்டும் என்றும் நான் எடுத்து வைத்திருக்கிறேன்.

காவிரியின் குறுக்கே மேகதாதுவில் கருநாடக அரசு அணை கட்டுவதற்கு ஒன்றிய அரசு அனுமதி வழங்கக் கூடாது என்ற அந்தக் கோரிக்கையையும் வைத்திருக்கிறேன்.

மாநிலங்களுடன் மேல்வரிகள் மற்றும் கூடுதல் கட்டணம் மூலம் வரும் வருவாயைப் பகிர்ந்து அளிக்க வேண்டும்.

ஜூன் 2022க்குப் பின்பு ஜி.எஸ்.டி. இழப்பீட்டைத் தொடர்ந்து வழங்கிட வேண்டும்.

நரிக்குறவர்கள் / குருவிக்காரர்கள் சமூகங்களைத் தமிழ்நாட்டின், ‘‘பட்டியல் மற்றும் பழங்குடியினர்’’ பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று இப்படி பல்வேறு கோரிக்கைகளை நான் மாண்புமிகு பிரதமர் அவர்களிடத்தில் எடுத்து வைத்திருக்கிறேன். முக்கியமாக மாண்புமிகு பிரதமர் அவர்களிடத்திலும், மாண்புமிகு உள்துறை அமைச்சர் அவர்களிடத்திலும் நான் அழுத்தத்துடன் பதிவு செய்தது என்னவென்று கேட்டீர்களானால், நீட் தேர்வில் இருந்து விலக்குக் கேட்கும் சட்டமுன்வடிவைத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றி இரண்டாவது முறை தமிழக ஆளுநர் அவர்களுக்கு நாங்கள் அனுப்பி வைத்தோம். ஆனால் இதுவரையில் மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பாமல் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இன்னமும் தாமதம் செய்து கொண்டிருக்கிறார். இந்தச் சட்டமுன்வடிவுக்கு உரிய நடவடிக்கை எடுக்க ஒன்றிய அரசை நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

தொடர்ந்து, ஒன்றிய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா அவர்களிடத்தில், தமிழகத்திற்கு வரவேண்டிய வெள்ள நிவாரண நிதிகள் குறித்தும் வலியுறுத்தி இருக்கிறேன். காவல் மற்றும் தீயணைப்புத் துறையை நவீனப்படுத்தவும், நிதி ஒதுக்கீடு கோரி இருக்கிறேன்.

அடுத்ததாக, ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் அவர்களிடத்தில், தமிழகத்தில் அமையவிருக்கக்கூடிய புதிய விமான நிலையங்கள் அமைத்திடத் தேவைப்படக்கூடிய பாதுகாப்புத்துறை வசம் இருக்கக்கூடிய நிலங்களை ஒதுக்கித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் DRDO ஆய்வுக்கூடம் அமைக்கப்பட வேண்டும்.

சேலம் இரும்பாலையின் மிகை நிலத்தைப் பாதுகாப்புத் தொழில் பூங்காவிற்கு வழங்க வேண்டும்.

ஒன்றிய அரசு பாதுகாப்புத்துறை தொடர்பாகச் சில திட்டமிடுதல்களைச் செய்து வருகிறது. ஒன்றிய அரசு அமைக்கத் திட்டமிட்டுள்ள, ‘‘Aviation Technology Hub’’ ஒன்றினைக் கோவையில் அமைக்க வேண்டும் என்ற அந்தக் கோரிக்கையை எடுத்து வைத்திருக்கிறேன்.

ஒன்றிய நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்காரி அவர்களைப் பொறுத்தவரை, பல்வேறு கோரிக்கைகளை எடுத்து வைத்திருக்கிறேன்.

முக்கியமாகச் சொல்ல வேண்டுமென்றால், சென்னை – கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையை ஆறுவழிச் சாலையாக ஆக்கவும், சென்னை, மதுரவாயல் உயர்மட்டச் சாலையை ஸ்ரீபெரும்புதூர் வரை நீட்டிக்கவும் கோரிக்கை வைத்துள்ளேன், தாம்பரம் – செங்கல்பட்டுவரை உயர் மட்ட பாலம் அமைக்கப்பட வேண்டும். மாநிலத்தில் நிலுவையிலுள்ள தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களை விரைவில் அறிவிக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்துள்ளேன்.

என்னுடைய இன்றைய சந்திப்பைப் பொறுத்தவரை, மாண்புமிகு பிரதமர், மாண்புமிகு உள்துறை அமைச்சர், மாண்புமிகு பாதுகாப்புத் துறை அமைச்சர், மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் அவர்கள் ஆகியோருடனான இந்தச் சந்திப்புகள் மனநிறைவு அளிப்பதாக அமைந்திருந்தன.

எங்களின் உரையாடலின்போது, மாண்புமிகு நிதின் கட்கரி அவர்கள், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, நெடுஞ்சாலைத்துறையில் அதிக அளவிலான திட்டங்களைச் செயல்படுத்த இருப்பதாக அவரே கூறினார்.

அதேபோல், மாண்புமிகு ராஜ்நாத் சிங் அவர்கள், நாட்டின் பாதுகாப்புத்துறை தொழிற்சாலைகளைத் துவங்குவதற்குத் தமிழ்நாடுதான் உகந்த மாநிலமாகத் திகழ்வதாகப் பாராட்டி அதை எங்களிடத்திலே எடுத்துச் சொன்னார்.

நான் இன்று வைத்த கோரிக்கைகளை வலியுறுத்தி எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்றத்தில் பலமுறை பேசியுள்ளார்கள். தொடர்ந்து மீண்டும் அதை வலியுறுத்துவார்கள் என்பதையும் உங்கள் மூலமாகத் தமிழக மக்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாளைய தினம், மாண்புமிகு நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களையும், மாண்புமிகு வர்த்தகம் மற்றும் உணவுத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் அவர்களையும் நான் சந்திக்க இருக்கிறேன், அதற்கான நேரத்தை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். தமிழகத்துக்கான கோரிக்கைகளை நிச்சயம் அவர்களிடத்தில் நான் எடுத்து வைப்பேன்.

அதேபோல, ஒரு தில்லி மாடல் ஸ்கூல் மற்றும் ஒரு மருத்துவமனை ஆகியவற்றை நாளைய தினம் நான் பார்வையிட இருக்கிறேன். அப்போது மாண்புமிகு தில்லி முதல்வர் அவர்களும் என்னுடன் வருவதாகச் சொல்லியிருக்கிறார். அவருடன் சேர்ந்து நான் பார்வையிட இருக்கிறேன்.

அதைத் தொடர்ந்து, ஏப்ரல் இரண்டாம் நாள் மாலையில் ‘அண்ணா – கலைஞர் அறிவாலயம்’ திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற இருக்கிறது. இந்த நேரத்தில் நான் உங்களையும் கேட்டுக் கொள்கிறேன், அனைவரும் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டும் என்ற அந்த அன்பான வேண்டுகோளை வைத்து, முடித்துக் கொள்கிறேன்.

கேள்வி: மேகதாது அணை விவகாரம் தொடர்பாகப் பிரதமரிடம் பேசியது குறித்து...

பதில்: இந்த விஷயம் குறித்து ஏற்கெனவே பேசி இருக்கிறேன். இது தொடர்பாகக் கேட்டு இருக்கிறீர்கள். அதைத் தொடர்ந்து

வலியுறுத்தி, எது நியாயமோ அதைச் செய்வோம் என்று உறுதி அளித்திருக்கிறார்.

கேள்வி: தமிழ் மக்களுக்குப் பாதுகாவலராக இருக்கிறீர்கள். தில்லியில் ஏழு தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன. அந்தப் பள்ளிக்கூடங்களில் படிக்கின்ற மாணவர்களின் கல்வித் தரம் கேள்விக்குறியாக உள்ளது. கடந்த ஆட்சிக் காலத்தில் அப்பள்ளிக்கூடத்திற்கு அம்மா பிளாக் கட்டுவதற்காகப் பல கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் பல விதிமீறல்கள் நடந்ததாகத் தெரிகின்றன. அது குறித்து ஏதாவது விசாரணை செய்வீர்களா ?

பதில்: நிச்சயமாக விசாரிக்கப்படும். இப்போது சொன்னதை வைத்து விசாரிக்கப்படும். நாளைய தினம் தில்லியில் உள்ள மாடல் பள்ளிக் கூடத்தைப் பார்வையிட உள்ளேன். அதற்கு ஆர்வமாக டில்லி முதலமைச்சர் அவர்களும் மகிழ்ச்சியுடன் தானும் வருவதாகத் தெரிவித்துள்ளார்.

கேள்வி: திரு. ராஜ்நாத் சிங் அவர்கள் பாதுகாப்புத்துறையின் மூலம் தமிழகத்தில் செயல்படுத்தவுள்ள திட்டங்கள் குறித்து ஏதாவது தெரிவித்தாரா ?

பதில்: அதைப் பற்றிக் கேட்டபோது, அதற்கெல்லாம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார். அதற்குரிய அதிகாரிகளையும் அழைத்துக் கூட்டத்தை நடத்தி, என்ன செய்யப் போகிறோம் என்பதைத் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். விரைவில் எல்லாப் பணிகளையும் முடித்துத் தருவதாக உறுதி அளித்துள்ளார்.

கேள்வி: கச்சத்தீவு பிரச்சினை தொடர்ந்து நீடித்து வருகிறது. ஒன்றிய அரசு எந்தவித முயற்சியும் செய்வதாகத் தெரியவில்லை. சர்வதேச நீதிமன்றத்தை நாடுவதற்காக வாய்ப்புகள் உள்ளதா. அது குறித்து ஏதாவது ஆலோசனை மேற்கொள்ளப்பட்டதா ?

பதில்: நிச்சயமாக ஏற்கெனவே இதுகுறித்துச் சட்டரீதியாக நாங்கள் ஆலோசனை மேற்கொண்டு உள்ளோம். அது தொடரும். அதற்கான முயற்சிகளை எடுப்பதற்காகத்தான் மாண்புமிகு பிரதமர் அவர்களிடத்திலும் வலியுறுத்திச் சொல்லி இருக்கிறோம்.

கேள்வி: பிரதமருக்கு நன்றி தெரிவித்து உள்ளீர்கள். இந்த முறை அவருடைய அணுகுமுறை எப்படி இருந்தது.

பதில்: நேரம் கொடுத்ததற்கு நன்றி சொன்னேன். உரிய நேரத்தில், உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார். அதற்கும் நன்றி சொன்னேன். வேலையை முடித்ததற்காகச் சொல்லவில்லை. செய்து தருவதாக உறுதி கொடுத்திருக்கிறார், அதற்காக நன்றி சொன்னேன்.அதனால் நம்பிக்கை இருக்கிறது.

கேள்வி: இலங்கைத் தமிழர்கள் அதிகமாக வந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களை அகதிகளாகப் பதிவு செய்வதா, சட்ட விரோதமாக வந்ததாகப் பதிவு செய்வதா என்று ஒரு குழப்பம் ஏற்பட்டு இருக்கிறது. ஒன்றிய அரசிடம் அவர்களை எப்படிப் பதிவு செய்யலாம் என்று விளக்கம் கேட்டு இருக்கிறார்கள். அதற்கு என்ன பதில் கொடுத்துள்ளார்கள். வருபவர்களுக்கு எந்தமாதிரியான பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது ?

பதில்: இன்றைக்குக் கொடுத்த கோரிக்கையில் இதுவும் அடங்கியுள்ளது. அதனைக் குறித்தும் பரிசீலிப்பதாகத் தெரிவித்துள்ளார்கள். ஏற்கெனவே இலங்கையில் இருந்து வருபவர்களுக்கு அகதிகள் என்று பெயர் சூட்டப்பட்டு இருந்ததை நாங்கள் மாற்றி, புலம்பெயர்ந்த தமிழர்கள் என்று அழைத்து, அவர்களுக்கு நிதி ஒதுக்கி, எல்லா வசதிகளும் ஏற்படுத்தித் தந்திருக்கிறோம்.

கேள்வி: பாராளுமன்றத்தில் பல்வேறு கட்சித் தலைவர்களைச் சந்தித்தீர்கள். அவர்களுடைய அணுகுமுறை எப்படி இருந்தது.

பதில்: நாடாளுமன்ற மைய வளாகத்தில் பல்வேறு கட்சித் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்திக்கக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. எல்லோரும் “சிறப்பாகத் தமிழ்நாட்டில் ஆட்சி நடத்திக் கொண்டு இருக்கிறீர்கள்” என்று பாராட்டுத் தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு இப்போது இருக்கக்கூடிய அரசியல் சூழ்நிலை குறித்துப் பேசினார்கள்.

கேள்வி: திருமதி சோனியா காந்தி சந்திப்புக் குறித்து..

பதில்: அவர்கள் நாடாளுமன்றத்தில் இருந்தார்கள். அவர்களைப் பார்க்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. அதுமட்டுமல்ல, எப்போது நான் தில்லி வந்தாலும் அவர்களைச் சந்திக்காமல் இருந்தது இல்லை. வருகின்ற 2ஆம் தேதி கட்சியினுடைய அலுவலகத் திறப்பு விழா நிகழ்ச்சிக்கும் திருமதி சோனியா காந்தி அவர்களும், திரு. ராகுல் காந்தி அவர்களும் வருவதாகச் சொல்லி இருக்கிறார்கள். அங்கேயும் அவர்களைச் சந்திப்பேன்.

தமிழகத்தின் நிதி தொடர்பான கோரிக்கைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 01.04.2022 அன்று புதுதில்லியில், மாண்புமிகு ஒன்றிய நிதித்துறை அமைச்சர் திருமதி **நிர்மலா சீதாராமன்** அவர்களைச் சந்தித்து, தமிழகத்தின் நிதி தொடர்பான பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை வழங்கினார். அதன் விவரங்கள் வருமாறு:

14ஆவது நிதிக்குழு உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பரிந்துரைத்த அடிப்படை மானியம் மற்றும் செயல்பாட்டிற்கான எஞ்சிய மானியத்தினை விடுவிக்கக் கோருதல்

2015–2020 காலகட்டத்திற்கு, 14ஆவது நிதிக்குழு, தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சிகளுக்கு அடிப்படை மானியமாக ரூ.7,899.69 கோடி பரிந்துரைத்தது. ஆனால், மொத்தமுள்ள 12,525 கிராமப் பஞ்சாயத்துகளில், 2,900 கிராமப் பஞ்சாயத்துகளில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறாததால், ரூ.548.76 கோடி அடிப்படை மானியத்தை ஒன்றிய அரசு விடுவிக்கவில்லை. நீதிமன்றத்தில் வழக்குகள் இருந்ததால், இந்த 2,900 கிராமப் பஞ்சாயத்துகளில் தேர்தல்கள் அப்போது நடத்த இயலவில்லை. இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர், 2,900 கிராமப் பஞ்சாயத்துகளில் கடந்த அக்டோபர் 6 மற்றும் 9ஆம் தேதிகளில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டு, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் தங்கள் பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இதைப்போன்று 14ஆவது நிதிக்குழு 2016–2017 முதல் 2019–2020 வரையிலான காலத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான செயல்பாட்டு மானியமாகத் தமிழ்நாட்டுக்கு ரூ.2,524.20 கோடி பரிந்துரை செய்துள்ளது. அந்த மானியத்தொகையில் பரிந்துரைக் காலத்தில் ஒன்றிய அரசு 2016–2017ஆம் ஆண்டுக்கான செயல்பாட்டு மானியமாக ரூ.494.09 கோடியை விடுவித்துள்ளது. இந்நிலையில் அதற்கான பயன்பாட்டுச் சான்றிதழ் ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டு, 2017–2018ஆம் ஆண்டுக்கான செயல்பாட்டு மானியத்தினை விடுவிக்கக் கோரிக்கை விடப்பட்டது. மானியங்களைப் பெறுவதற்கான அனைத்து நிபந்தனைகளை நிறைவேற்றியபோதும், பயன்பாட்டுச் சான்றிதழை அனுப்பிய நிலையிலும், 2017–2018ஆம் ஆண்டுக்கான செயல்பாட்டு மானியம் தமிழ்நாட்டிற்கு விடுவிக்கப்படவில்லை. இதனைத் தொடர்ந்து 2018–2019 மற்றும் 2019–2020ஆம் ஆண்டுக்கான மானியமும் விடுவிக்கப்படவில்லை.

இருப்பினும், 2017–2018ஆம் ஆண்டிற்கான செயல்பாட்டு மானியத்தினைப் பெரும்பாலான மற்ற மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு விடுவித்துள்ளது. எனவே, அடிப்படை மானிய நிலுவைத் தொகையான ரூ.548.76 கோடியையும், செயல்பாட்டு மானியம் ரூ.2,029.22 கோடியையும் தமிழகத்திற்கு விரைந்து விடுவிக்க வலியுறுத்தப்படுகிறது.

ஒன்றிய அரசிடமிருந்து பெறவேண்டிய நிலுவைத் தொகைகள்

பெருந்தொற்றினால், மாநிலத்தின் வருவாய் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், தற்போது பெருந்தொற்றின் தாக்கம் குறைந்து வந்தாலும், மாநிலம் இன்னும் கடும் நிதிச்சுமையில் உள்ளது. பெருந்தொற்றினால், சுகாதாரக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும், மருத்துவக் கருவிகள் மற்றும் மருந்துகளைக் கொள்முதல் செய்யவும், ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்டங்களைச் செயல்படுத்தவும், மாநில அரசிற்குக் கூடுதல் செலவினங்கள் ஏற்பட்டுள்ளது. சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டு நிலுவைத் தொகையான ரூ.13,504.74 கோடி உட்பட ரூ.20,860.40 கோடி ஒன்றிய அரசிடம் நிலுவையில் உள்ளது. மாநிலம் தனது நிதி நெருக்கடியிலிருந்து மீண்டு வர, இந்த நிலுவைத் தொகையை உடனடியாக விடுவிக்க வேண்டும் என ஒன்றிய அரசிற்கு வலியுறுத்தப்படுகிறது.

சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டிற்கான காலக்கெடுவினை நீட்டிக்கக் கோருதல்

சரக்கு மற்றும் சேவை வரியை அறிமுகப்படுத்திய பொழுது, மாநிலத்தின் வருவாய் பாதுகாக்கப்படும் என்று ஒன்றிய அரசு அளித்த வாக்குறுதியின் அடிப்படையில், மாநிலம் தனது நிதி சார்ந்த அதிகாரத்தைக் கைவிட்டது. கடந்த 5 ஆண்டுகளில், உறுதியளிக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட வருவாய்க்கும், வசூலிக்கப்பட்ட வருவாய்க்கும் இடையே பெரும் இடைவெளி இருந்துள்ளது. பெருந்தொற்றிற்கு முன்னரே, இத்தகைய போக்குக் காணப்பட்டது. அதன்பின், இந்த இடைவெளி அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது. கோவிட் பெருந்தொற்றின் தாக்கம் குறைந்து வந்தாலும், மாநிலத்தின் வருவாய் இன்னும் அதிகரிக்கவில்லை. இந்நிலையில், 30.06.2022 அன்று, சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டுத் தொகை வழங்கும் காலம் முடிவுக்கு வருகிறது. இதன் விளைவாக, 2022–2023 நிதியாண்டில், தமிழ்நாடு ஏறத்தாழ ரூ.20,000 கோடி வருவாய் இழப்பைச் சந்திக்க நேரிடும்.

இழப்பீடு வழங்கும் காலத்தை, ஜூன் 2022க்குப் பின் குறைந்தபட்சம் 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசிற்கு வலியுறுத்தப்படுகிறது.

புதுதில்லி அரசு மாதிரி பள்ளியை பார்வையிட்ட மாண்புமிகு முதல்வர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 01.04.2022 அன்று புதுதில்லியில், மேற்கு வினோத் நகரில் உள்ள தில்லி அரசு மாதிரிப் பள்ளியைப் பார்வையிட்டார்.

அப்போது, தில்லி அரசுக் கல்வித்துறை இயக்குநர் திரு. ஹிமான்சூ குப்தா அவர்கள் தில்லி கல்விமுறை பற்றிய முக்கிய கூறுகள் குறித்து எடுத்துரைத்தார். தில்லி அரசுப் பள்ளிகளில் தொழில்முனைவோர் மற்றும் வணிகம் குறித்த பாடத்திட்டமான பிசினஸ் பிளாஸ்டர்ஸ் படிப்பில் 9 முதல் 12ஆம் வகுப்பு வரை 13 இலட்சம் மாணவர்கள் படிக்கின்றனர். இதற்காக 2021–2022ஆம் ஆண்டில் தில்லி அரசால் ரூ.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் முக்கிய நோக்கம், மாணவர்களைத் தொழில்முனைவோர்களாக உருவாக்குவதாகும்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தில்லி மாதிரி பள்ளியின் வளர்ச்சி குறித்த குறும்படத்தையும் பார்வையிட்டதோடு, அப்பள்ளி மாணவர்களிடம் கலந்துரையாடினார். பின்னர், அப்பள்ளி மாணவர்களால் உருவாக்கப்பட்ட பொருட்களைப் பார்வையிட்டு, பாராட்டினார். மேலும், அப்பள்ளியில் உள்ள நீச்சல் குளத்தைப் பார்வையிட்டு, அங்கிருந்த மாணவர்கள் மற்றும் நீச்சல் பயிற்சியாளர்களுடன் உரையாடினார்.

தில்லி அரசு மாதிரி பள்ளியைப் பார்வையிட்ட பின்பு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செய்தியாளர்களுக்கு ஆற்றிய உரை;

மாண்புமிகு தில்லி முதலமைச்சர் திரு. கெஜ்ரிவால் அவர்கள் மாடர்ன் பள்ளியை உருவாக்கி, அது சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது என்ற செய்தியை நான் கேள்விப்பட்டேன். அதனால், தில்லிக்கு வந்த நான் அந்தப் பள்ளியைப் பார்வையிடுவதற்கு வாய்ப்பு கிடைக்குமா என்று கேட்டபோது, நிச்சயமாக நீங்கள் வருகிறபோது நானே வரவேற்று அதை அழைத்துச் சென்று காண்பிக்கிறேன் என்று மாண்புமிகு தில்லி முதலமைச்சர் அவர்கள் சொல்லி, என்னை இங்கு அவரே அழைத்து வந்திருக்கிறார்கள். அதற்காக முதலில் அவருக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் புதியதாக ஆட்சி பொறுப்பேற்றிருக்கக் கூடிய எங்களுடைய அரசு, எல்லாத் துறைகளுக்கும் எந்த அளவிற்கு முக்கியத்துவம் தருகிறதோ, அதைவிட அதிகமான அளவிற்குக் கல்விக்கும், மருத்துவத்திற்கும் முக்கியத்துவத்தை நாங்கள் தந்து கொண்டிருக்கிறோம். இன்றைக்கு இந்த மாடர்ன் பள்ளி எப்படி நடந்து கொண்டிருக்கிறதோ, அதேபோன்ற பள்ளிகளைத் தமிழ்நாட்டில் விரைவில் நாங்கள் உருவாக்கப் போகிறோம். அதற்கான பணிகள் நடந்து கொண்டிருக்கிறது. அந்தப் பணிகள் முடிவுற்று அந்தப் பள்ளியை நாங்கள் திறக்கிற நேரத்தில், நிச்சயமாக உங்களுடைய முதலமைச்சர் திரு.கெஜ்ரிவால் அவர்களை நாங்கள் அழைக்க இருக்கிறோம். அவரும் வருவார், வரவேண்டும் என்று தமிழ்நாட்டு மக்களின் சார்பில் உங்கள் மூலமாக நான் அவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அரசு மொஹலா கிளினிக்கைப் பார்வையிட்டு, அதன் செயல்பாடுகள் குறித்துக் கேட்டறிந்தார். அப்போது, 500 மொஹலா கிளினிக்குகள் உள்ளதாகவும், அதனை 1,000ஆக உயர்த்த திட்டமிட்டுள்ளதாகவும், இக்கிளினிக்குகளைத் தில்லி மெட்ரோ இரயில் நிலையம், விமான நிலையம் ஆகிய இடங்களில் தொடங்க உள்ளதாகவும், மகளிருக்கான தனி மொஹலா கிளினிக்குகளை அமைக்க உள்ளதாகவும் தெரிவித்தனர்.

தமிழ்நாட்டின் நிதிநிலையை மேம்படுத்தும் நிதிநிலை அறிக்கை 2022-2023

தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க நிதிநிலை அறிக்கை!

10 ஆண்டுக்காலச் சரிவைச் சரிசெய்வது மட்டுமல்ல, அடுத்த 25 ஆண்டுக்கால உயர்வை உணர்த்துவதாக இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது!

திராவிட மாடல் தொடரும்! வாருங்கள் நாம் அனைவரும் சேர்ந்து வளமான தமிழ்நாட்டை உருவாக்குவோம்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் முனைவர் **பழனிவேல் தியாகராஜன்** அவர்கள், 2022–2023ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை 18.03.2022 அன்று தாக்கல் செய்தார்.

சிறப்பம்சங்கள்

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து" (குறள் –738)

- இந்த வரவு, செலவுத் திட்டத்தைத் தொடங்கும்போது, "இன்றைய சூழல்களை மட்டும் கருத்திற்கொள்ளாமல் தமிழ்நாட்டின் வருங்கால சந்ததியினரின் நலத்தையும் கருத்தில் கொண்டு தயாரிக்க வேண்டும்" என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.
- இந்த அரசு, வரலாறு காணாத வேகத்தில் தேர்தல் வாக்குறுதிகளைத் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது. இவை மட்டுமின்றி, கடந்த ஆண்டு நடைபெற்ற வரவு, செலவுத் திட்டச் சட்டமன்றக் கூட்டத் தொடரில் பல முக்கியமான அறிவிப்புகளையும் வெளியிட்டுள்ளது.
- எதிர்பாராமல் பெருமளவில் செலவினங்கள் ஏற்பட்ட போதிலும், சிறந்த நிதி நிருவாகத்தையும் நிதி மேலாண்மையையும் அரசு கடைப்பிடித்தது.
- இதன் பயனாக, மொத்த வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டில் வெறும் ஒரு சதவிகிதம் உயர்வினையே முதல் துணைநிலை மதிப்பீடுகளில் கோரினோம்.
- முதன்முறையாக இந்த ஆண்டு ரூ.7,000 கோடிக்கும்மேல் தமிழ்நாட்டின் வருவாய் பற்றாக்குறை குறைய உள்ளது. மேலும் இந்த சவாலான ஆண்டிலும் நிதிப் பற்றாக்குறை 4.61 சதவிகிதத்திலிருந்து 3.80 சதவிகிதமாகக் குறைய உள்ளது.
- தாமிரபரணி படுகையில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள், பண்டைத் தமிழ் நாகரிகத்தின் தொன்மை, குறைந்தது 3,200 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என வெளிப்படுத்தியுள்ளன.
- இந்தியா மாநிலங்களின் ஒன்றியம் என்பதே நமது அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடாகும்
- நமது அரசியல் முன்னோர்களான நீதிக்கட்சியின் காலத்திலிருந்தே, சமூகநீதிக்கான அளவுகோல் திராவிட இயக்கத்திற்கான அடையாளமாகத் திகழ்ந்து வருகின்றன.
- தற்போது, நமது பொருளாதாரம் மீண்டும் எழுச்சி பெற்று வர, சமூகநலத் திட்டங்களில் எவ்விதக் குறையுமின்றி, நமது முன்னுரிமைகளை மறுபரிசீலித்துச் சமூகக் கட்டமைப்பு, வளர்ச்சித் திட்டங்கள் போன்றவற்றின்மீது அதிக கவனம் செலுத்தப்படும்.

முதல்வரின் முகவரி

- "முதல்வரின் முகவரி" என்ற புதிய துறை உருவாக்கப்பட்டு இதுவரை, 10,01,883 மனுக்களுக்கு உரியத் தீர்வு காணப்பட்டுள்ளது.



பொருநை ஆற்றங்கரையில் தொல்லியல் இடங்களைத் தேடி கள ஆய்வு

ஒன்றிய, மாநில நிதி உறவுகள்

- சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டை ஒன்றிய அரசு வழங்கும் கால வரையறை 30.06.2022ஆம் நாளன்று முடிவுக்கு வருகிறது. இதனால், வரும் நிதியாண்டில், சுமார் ரூ.20,000 கோடி நிதி இழப்பினைத் தமிழ்நாடு சந்திக்க நேரிடும்.

மாநில நிதிக்குழு

- மாநில நிதிக் குழுவின் அறிக்கையின்மீது, அரசு எடுத்த நடவடிக்கை குறித்த அறிக்கையை (Action Taken Report) விரைவில் இம்மாமன்றத்தில் தாக்கல் செய்யும்.

தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு

- தமிழ் மொழிக்கும் இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்திற்கும் இடையிலான உறவை வெளிக்கொணரும் வகையில், தமிழ் வேர்ச்சொல் வல்லுநர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைத்து, அகரமுதலி உருவாக்கும் சிறப்புத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும்.
- பெரியாரின் சிந்தனைகள் அடங்கிய தொகுப்பு, 21 இந்திய உலக மொழிகளில் அச்சு மற்றும் மின்னூல் பதிப்புகளாகவும் வெளியிடப்படும். இப்பணிகள் ரூ.5 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.
- புதிய கற்கால இடங்களைத் தேடி 5 மாவட்டங்களில் கள ஆய்வும் (Exploration), பொருநை ஆற்றங்கரையில் தொல்லியல் இடங்களைத் தேடிக் கள ஆய்வும் மேற்கொள்ளப்படுகிறது.
- விழுப்புரம், இராமநாதபுரம் மாவட்டங்களில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் புதிய அரசு அருங்காட்சியகங்கள் அமைக்கப்படும். தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் உள்ள பழங்குடியினர் அகழ் வைப்பகம், திருவள்ளூர் மாவட்டம் பூண்டியில் உள்ள தொல் பழங்கால அகழ் வைப்பகம், தருமபுரியில் உள்ள நடுகற்கள் அகழ் வைப்பகம் ஆகியவை ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.
- இம்மதிப்பீடுகளில் தமிழ் வளர்ச்சித்துறைக்கு ரூ.82.86 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை

- அரசு நிலங்களைப் பாதுகாப்பதற்கும், பராமரிப்பதற்கும், ஆக்கிரமிப்புகளில் இருந்து மீட்பதற்கான பணிகளை மேற்கொள்ளவும், சிறப்பு நிதியாக ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- சென்னைப் பெருநகரப் பகுதியில் வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுப்பதற்கு, தக்க பரிந்துரைகளை வழங்க ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் பரிந்துரைகளின்படி, வெள்ளத்தடுப்புப் பணிகள் முதற்கட்டமாக ரூ.1,000 கோடி செலவில் மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இப்பணிகளுக்காக ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- வானிலையைத் துல்லியமாகக் கணிக்க, ‘‘பேரிடர் எச்சரிக்கை அமைப்புகளை’’ மேம்படுத்துவதன் அவசியத்தை, அண்மையில் சென்னையில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கு நமக்கு உணர்த்தியுள்ளது. பேரிடர் தாக்கும்முன், உரிய நேரத்தில் எச்சரிக்கையை வழங்குவதற்கு, வானிலை பலூன் அமைப்பு, இரண்டு வானிலை ரேடார்கள், 100 தானியங்கி வானிலை மையங்கள், 400 தானியங்கி மழைமானிகள், 11 தானியங்கி நீர்மட்டக் கருவிகள், அதிவேகக் கணினிகள் (Super Computers) உள்ளிட்ட புதிய தொழில்நுட்பங்கள் கொண்ட ஒரு கட்டமைப்பை அரசு உருவாக்கும்.

தமிழக பட்ஜெட் 2022–23

பயிர் கடன் தள்ளுபடிக்கு ரூ.2,531 கோடி ஒதுக்கீடு

தமிழக பட்ஜெட் 2022–23

காவல்துறைக்கு ரூ.10,285.22 கோடி ஒதுக்கீடு

தமிழக பட்ஜெட் 2022–23

சென்னைக்கு அருகில் தாவரவியல் பூங்கா அமைக்க ரூ.300 கோடி

இப்பணிகளுக்காக ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இம்மதிப்பீடுகளில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறைக்கு ரூ.7,474.94 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காவல்

- இம்மதிப்பீடுகளில் காவல்துறைக்கு ரூ.10,285.22 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

- இம்மதிப்பீட்டில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்காக ரூ.496.52 கோடி வழங்கப்பட்டுள்ளது.

நீதி நிருவாகம்

- இம்மதிப்பீட்டில் நீதி நிருவாகத்துறைக்கென ரூ.1,461.97 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை

- பயிர்க்கடன் தள்ளுபடிக்காக ரூ.2,531 கோடியும், நகைக்கடன் தள்ளுபடிக்காக ரூ.1,000 கோடியும், சுயஉதவிக் குழுக்களின் கடன்கள் தள்ளுபடிக்காக ரூ.600 கோடியும் என இம்மதிப்பீட்டில் மொத்தம் ரூ.4,131 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- இம்மதிப்பீட்டில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறைக்கு ரூ.13,176.34 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பாசனம்

- டெல்டா பகுதியிலுள்ள 10 மாவட்டங்களில் ரூ.80 கோடி செலவில் 4,964 கிலோ மீட்டர் நீளமுள்ள கால்வாய்களைத் தூர்வாரும் சிறப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான ஒப்புதலை இந்த அரசு அளித்துள்ளது.
- இம்மதிப்பீடுகளில் நீர்வளத்துறைக்கு ரூ.7,338.36 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கால்நடைப் பராமரிப்பு

- ஆதரவில்லாத கைவிடப்பட்ட, காயமடைந்த வளர்ப்புப் பிராணிகள் உள்ளிட்ட பல்வேறு விலங்குகளைப் பராமரிக்கும் அரசு சாரா நிறுவனங்கள், சேவை நிறுவனங்களுக்கு உதவியளிப்பதற்கு "வள்ளலார் பல்லுயிர்க் காப்பகங்கள்" என்னும் புதிய திட்டம் வரும் நிதியாண்டில் தொடங்கப்படும். இத்திட்டத்திற்காக ரூ.20 கோடி ஒதுக்கப்படுகிறது. இம்மதிப்பீடுகளில் கால்நடை பராமரிப்புத்துறைக்கு ரூ.1,314.84 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனம்

- லண்டன் க்யூ பூங்கா (Kew Gardens) அமைப்புடன் இணைந்து சென்னைக்கு அருகில் தாவரவியல் பூங்கா ரூ.300 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.
- காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளவும் இடர் தணிக்கும் திட்டங்கள் மற்றும் பசுமையாக்கும் திட்டங்களுக்குப் போதிய நிதியினை அளித்திடவும், "தமிழ்நாடு பசுமைக் காலநிலை மாற்ற நிதியத்தை" அரசு உருவாக்கும்.
- "வரையாடு பாதுகாப்புத் திட்டத்தை" அரசு செயல்படுத்தும். இத்திட்டத்திற்காக, முதற்கட்டமாக ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- கிண்டி குழந்தைகள் பூங்காவை மறுவடிவமைத்து, பறவைகள், வண்ணத்துப்பூச்சிகள், விலங்குகள் உள்ளடங்கிய இயற்கைப் பூங்காவாக ரூ.20 கோடி மதிப்பீட்டில் அமைத்திட அரசு முடிவு செய்துள்ளது.
- இம்மதிப்பீடுகளில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறைக்கு ரூ.849.21 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



பள்ளிக்கல்வித்துறை

- 15 மாவட்டங்களில் இத்தகைய முன்மாதிரிப் பள்ளிகள் (Model School) தொடங்கப்படும். இத்திட்டத்திற்காக ரூ.125 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.
- அடுத்த ஐந்து ஆண்டுகளில் அனைத்து அரசுப் பள்ளிகளை (ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் உட்பட) நவீனமயமாக்குவதற்கான "பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம்" என்ற மாபெரும் திட்டத்தை அரசு செயல்படுத்தும். இத்திட்டத்தில், அரசுப் பள்ளிகளில், தேவையான கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய 18,000 புதிய வகுப்பறைகள் கட்டப்படும்.
- புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட ஆறு மாவட்டங்களில், ரூ.36 கோடி மதிப்பீட்டில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் உயர்தர வசதிகளுடன் கூடிய மாவட்ட மத்திய நூலகங்கள் அரசால் ஏற்படுத்தப்படும்.
- தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் புத்தகக்காட்சிகள் நடத்தப்படும்.
- இம்மதிப்பீடுகளில் பள்ளிக் கல்வித்துறைக்கு ரூ.36,895.89 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உயர் கல்வித்துறை

- உலகளாவிய பங்களிப்புடன், "அறிவுசார் நகரம்" (Knowledge City) ஒன்று உருவாக்கப்படும். இந்த அறிவுசார் நகரம், உலகளவில் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களின் கிளைகளைக் கொண்டிருக்கும். இந்நகரம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள், திறன் பயிற்சி மையங்கள், அறிவு சார்ந்த தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும்.
- அடுத்த ஐந்து ஆண்டுகளில் ரூ.1,000 கோடி செலவில் ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்கி, புதிய வகுப்பறைகள், விடுதிகள், ஆய்வகங்கள், திறன்மிகு வகுப்பறைகள் உருவாக்கப்படும். இதற்காக, இவ்வாண்டு ரூ.250 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- இம்மதிப்பீடுகளில் உயர் கல்வித்துறைக்கு ரூ.5,668.89 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நான் முதல்வன்

- ஆண்டுக்கு ஐந்து இலட்சம் இளைஞர்களை, படிப்பில், அறிவில், சிந்தனையில், ஆற்றலில், திறமையில் மேம்படுத்துவதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனவுத் திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.
- இந்தியத் தொழில்நுட்பக் கழகங்கள், இந்திய அறிவியல் கழகம், அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகங்கள் போன்ற புகழ்பெற்ற உயர்கல்வி நிறுவனங்களில் சேர, அரசுப் பள்ளி மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், இந்நிறுவனங்களில் இளநிலைப் பட்டப்படிப்பு பயில்வதற்கான முழுச் செலவையும் மாநில அரசே ஏற்கும்.

இளைஞர் நலன்

- ஒலிம்பிக் பதக்க வெற்றியாளர்களை உருவாக்குவதில் வெற்றி கண்ட, "ஒலிம்பிக் தங்கப் பதக்கத் தேடல்" (Olymic Gold Quest) போலவே, தமிழ்நாட்டிலிருந்து உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு வீரர்களையும், ஒலிம்பிக் பதக்க வெற்றியாளர்களையும் உருவாக்க, தமிழ்நாடு ஒலிம்பிக் தங்கப்பதக்கத் தேடல் திட்டத்தைச் செயல்படுத்திட ரூ.25 கோடி வழங்கப்படும்.

சதுரங்க ஒலிம்பியாட்

- சதுரங்க விளையாட்டிற்கு உலகில் மிகவும் புகழ்பெற்ற போட்டி சதுரங்க ஒலிம்பியாட் (Chess Olympiad) ஆகும். பொதுவாக, இந்த போட்டியை நடத்துவதற்கு நாடுகளுக்கு மத்தியில் கடும் போட்டி நிலவுகிறது. இதுவரை, இந்த போட்டியை நடத்த இந்தியாவிற்கு வாய்ப்பு எட்டவில்லை. இவ்வாண்டு, இந்த அரசின் சீரிய முயற்சிகளின் பயனாக முதன்முறையாகச் சதுரங்க ஒலிம்பியாட் சென்னையில் நடைபெறும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 150 நாடுகளைச் சேர்ந்த 2,000 முன்னணி சதுரங்க வீரர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ள உள்ளனர். தமிழ்நாட்டின் விளையாட்டுத் துறையில் இது ஒரு திருப்புமுனையாக அமையும். இந்தப் போட்டியைச் சிறப்பாக நடத்த முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் இந்த அரசு வழங்கும்.
- இம்மதிப்பீடுகளில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு ரூ.293.26 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் நல்வாழ்வு

- புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட 6 மாவட்டங்கள் உள்ளிட்ட 19 மாவட்டங்களிலுள்ள அரசு மருத்துவமனைகள் ரூ.1,019 கோடி செலவில் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்படும்.
- தமிழ்நாட்டில் மனநல மருத்துவப் பயிற்சி பெற்ற மனித வளத்துடன் மனநோய் சிகிச்சைக் கட்டமைப்பை வலுப்படுத்துவது இன்றியமையாதது. இத்தகைய உயர்தர மனநலச் சேவைகளை வழங்குவதற்காக, கீழ்ப்பாக்கத்திலுள்ள மனநல மருத்துவமனையை (IMH), தமிழ்நாடு மனநலம் மற்றும் நரம்பியல் நிறுவனம் (TNIMHANS) என்ற உயர்நிலை அமைப்பாக மேம்படுத்திட அரசு திட்டமிட்டுள்ளது.
- காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம் 750 படுக்கை வசதிகளுடைய, தன்னாட்சி அதிகாரம் பெற்ற உயர்தர மருத்துவமனையாக மேலும் தரம் உயர்த்தப்படும்.
- இம்மதிப்பீடுகளில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு ரூ.17,901.73 கோடி நிதி ஒதுக்கீடு செய்யபட்டுள்ளது.

சமூக நலன்

- மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம் என மாற்றியமைக்கப்படுகிறது.
- அரசுப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு / தொழிற்படிப்பு ஆகியவற்றில் இடைநிற்றலின்றி முடிக்கும் வரை, மாதம் ரூ.1,000 அவர்கள் வங்கிக் கணக்கிற்கு நேரடியாகச் செலுத்தப்படும். இந்த மாணவிகள் ஏற்கெனவே பிற கல்வி உதவித்தொகை பெற்று வந்தாலும், இத்திட்டத்தில் கூடுதலாக உதவி பெறலாம். இத்திட்டத்தின் மூலம், சுமார் ஆறு இலட்சம் மாணவிகள் ஒவ்வொரு ஆண்டும் பயன்பெற வாய்ப்புள்ளது.
- செங்கல்பட்டு மாவட்டம், ஆத்தூரில் ரூ.27 கோடி மதிப்பீட்டில் "சமூக மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த பயிற்சி மையம்" அமைக்கப்படும். இம்மையத்தில், குழந்தைகள் மற்றும் மகளிரின் நலன், உரிமைகள், மேம்பாடு, அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாகச் சமூக நலத்துறை அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்துத்துறை அலுவலர்களுக்கும் பயிற்சிகள் அளிக்கப்படும்.

தமிழக பட்ஜெட் 2022–23

பண்டைய பழங்குடியினருக்கு
443 புதிய வீடுகள்

தமிழக பட்ஜெட் 2022–23

சிறுபான்மையினரின் தொன்மையான
வழிபாட்டுத்தலங்கள்
புனரமைக்க ரூ.12 கோடி

தமிழக பட்ஜெட் 2022–23

மாற்றுத்திறனாளிகள் நலத்துறைக்கு
ரூ.838 கோடி

- இம்மதிப்பீடுகளில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறைக்கு ரூ.5,922.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலன்

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோரால் தொடங்கப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்திற்கு (TANSIM) ரூ.30 கோடி நிதியாக வழங்கப்படும். அரசு மற்றும் அரசு நிறுவனங்களின் பகுக்கக்கூடிய கொள்முதல்களில், ஐந்து சதவிகிதம் தமிழ்நாட்டைச் சார்ந்த ஆதிதிராவிடர், பழங்குடியின தொழில் முனைவோர் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- விளிம்பு நிலையில் இருக்கும் இருளர்கள் போன்ற பண்டைய பழங்குடியினருக்கு (Particularly Vulnerable Tribal Groups) இந்த ஆண்டு ரூ.20.7 கோடி மதிப்பீட்டில் 443 வீடுகள் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. வரும் நிதியாண்டில் மேலும், 1,000 புதிய வீடுகள் பண்டைய பழங்குடியினருக்கு ரூ.50 கோடி மதிப்பீட்டில் கட்டித் தரப்படும்.
- இம்மதிப்பீடுகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு ரூ.4,281.76 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன்

- அனைத்து அரசு மாணவர் விடுதிகளின் செயல்பாடுகளையும் ஆய்வு செய்து, அதன் கட்டமைப்பு வசதிகள், சுகாதாரம், கல்விச் சூழல், உணவுத் தரம், பாதுகாப்பு, கண்காணிப்பு ஆகியவற்றை மறுசீரமைக்கத் தேவையான பரிந்துரைகளை வழங்க, ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்படும்.
- தமிழ்நாட்டில் உள்ள சிறுபான்மையினர் வழிபாட்டுத் தலங்களான தேவாலயங்கள், பள்ளிவாசல்கள், தர்காக்களைப் பழுது பார்ப்பதற்காகவும், புனரமைப்பதற்காகவும் அரசு நிதியுதவி வழங்கி வருகிறது. இந்த ஆண்டு சென்னையில் உள்ள வெஸ்லி தேவாலயம், புனித தோமையர் மலை தேவாலயம், திருநெல்வேலியில் உள்ள கால்டுவெல் தேவாலயம், நாகர்கோவிலில் உள்ள தூய சேவியர் தேவாலயம், சென்னையிலுள்ள நவாப் வாலாஜா பள்ளிவாசல், ஏர்வாடி தர்கா, நாகூர் தர்கா ஆகிய தொன்மையான வழிபாட்டுத் தலங்கள் புனரமைக்கப்படும். இப்பணிகளுக்கு, வரும் நிதியாண்டில் ரூ.12 கோடி வழங்கப்படுகிறது.
- இம்மதிப்பீடுகளில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைக்கு ரூ.1,230.37 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் நலன்

- தகவல் பரிமாற்றத்திற்கு வழிவகை செய்து, பல்வேறு வகையான சிகிச்சை மையங்கள் மூலம் சிறப்புத் தேவைகளுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு அனைத்துச் சேவைகளையும் வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.
- இம்மதிப்பீடுகளில் மாற்றுத் திறனாளிகள் நலத்துறைக்கு ரூ.838.01 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித்துறை

- கட்டமைப்புப் பற்றாக்குறையை நிறைவு செய்து, கிராமங்களைப் பன்முக வளர்ச்சியடையச் செய்வது, அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – IIஇன் குறிக்கோளாகும். வரும் ஆண்டில், ரூ.1,455 கோடி செலவில் 2,657 கிராம ஊராட்சிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

தமிழக பட்ஜெட் 2022–23

குடியிருப்புக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு ரூ.3,000 கோடி

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறைக்கு ரூ.8737.71 கோடி

தமிழக பட்ஜெட் 2022–23

2,213 BS VI புதிய பேருந்துகள், 500 புதிய மின் பேருந்துகள் கொள்முதல்

- கடந்த பத்தாண்டுகளாகப் பராமரிப்பின்றிப் புறக்கணிக்கப்பட்ட 149 சமத்துவபுரங்கள் ரூ.190 கோடி செலவில் சீரமைக்கப்படும்.
- இம்மதிப்பீடுகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறைக்கு ரூ.26,647.19 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நகராட்சி நிருவாகம்

- புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட தாம்பரம், காஞ்சிபுரம், கும்பகோணம், கரூர், கடலூர், சிவகாசி ஆகிய ஆறு மாநகராட்சிகளில் அடிப்படைக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு, தலா ரூ.10 கோடி என மொத்தம் ரூ.60 கோடி சிறப்பு நிதியாக வழங்கப்படும். மேலும் புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட 28 நகராட்சிகளுக்கு தலா ரூ.2 கோடி என மொத்தம் ரூ.56 கோடி சிறப்பு நிதியாக வழங்கப்படும்.
- இம்மதிப்பீடுகளில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு ரூ.20,400.24 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குடிநீர் வழங்கல்

- குடியிருப்புக்குக் குடிநீர் (ஜல்ஜீவன்) வழங்கும் திட்டத்திற்காக ரூ.3,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி

- தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பழுதடைந்த, பழைய குடியிருப்புப் பகுதிகளின் மறுமேம்பாடு (re-development) மேற்கொள்ளப்படும். இதற்காக, அரசு ஒரு "மறுமேம்பாட்டுக் கொள்கையை" இந்த ஆண்டு வெளியிடும். இதுவரை அறுபது திட்டங்கள் இதற்காக அடையாளம் காணப்பட்டு, தொடக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டங்களில் அதிகபட்ச தளப்பரப்பை அடைவதற்கு, தனியார் நிறுவனங்களுடன் இணைந்து இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.
- மீஞ்சூரிலிருந்து வண்டலூர் வரை 62 கிலோ மீட்டர் நீளமுள்ள வெளிவட்டச் சாலையின் (ORR) கிழக்குப் பகுதியில் 50 மீட்டர் அகலமுள்ள நிலம், வளர்ச்சிப் பெருவழியாக (Development Corridor) மேம்படுத்தப்படும்.
- பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டத்திற்காக (நகர்ப்புறம்) ரூ.3,700 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- இம்மதிப்பீடுகளில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறைக்கு ரூ.8,737.71 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைகள்

- மதுரவாயல் – சென்னை துறைமுகம் உயர்மட்டச் சாலைத் திட்டத்தை மீட்டெடுத்து, நிறைவேற்றிட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. இத்திட்டம், ரூ.5,770 கோடி மதிப்பீட்டில் 20.6 கிலோ மீட்டர் நீளமுள்ள இரட்டை அடுக்கு உயர்மட்டச் சாலையாக அமைக்கப்பட உள்ளது.
- நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், சோழிங்கநல்லூரிலுள்ள மீதமுள்ள சாலைப் பகுதி ரூ.135 கோடி செலவில் ஆறுவழிச் சாலையாக அகலப்படுத்தப்படும்.
- இம்மதிப்பீடுகளில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைக்கு ரூ.18,218.91 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

போக்குவரத்து

- KfW என்ற ஜெர்மன் வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் பேருந்து சேவைகளைக் காலநிலைக்கு ஏற்ற நவீனமயமாக்கல் திட்டத்தில் 2,213 BS VI புதிய டீசல் பேருந்துகளும், 500 புதிய மின் பேருந்துகளும் (e-bus) கொள்முதல் செய்யப்படும்.

- இம்மதிப்பீடுகளில் போக்குவரத்துத்துறைக்கு ரூ.5,375.51 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எரிசக்தித்துறை

- இம்மதிப்பீடுகளில் எரிசக்தித்துறைக்கு ரூ.19,297.52 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொழிலாளர் நலன்

- 71 அரசுத் தொழிற்பயிற்சி நிறுவனங்கள், "தொழில் 4.0" (Industry 4.0) தரநிலையை அடைவதற்காகவும், தலைசிறந்த திறன் மையங்களாக மாற்றப்படுவதற்காகவும், ரூ.2,877 கோடி செலவில் முன்னணி தொழில் நிறுவனங்களின் பங்களிப்புடன் ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.
- அரசின் நலத்திட்டங்களின் பயன்கள் அவர்களைச் சென்றடையவும், அவர்களின் சட்ட உரிமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் மூலம் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான நடமாடும் தகவல் மற்றும் உதவி மையங்கள் அறிமுகப்படுத்தப்படும்.
- இம்மதிப்பீடுகளில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறைக்கு ரூ.2,353.93 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில் நிறுவனங்கள்

- குறு நிறுவனங்களுக்கு உதவிடும் வகையில், "குறு நிறுவனக் குழும மேம்பாட்டுத் திட்டம்" ஒன்றை அரசு தொடங்கும்.
- தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம் கோயம்புத்தூரில் அமைக்கப்படும்.
- இம்மதிப்பீடுகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் துறைக்கு ரூ.911.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொழில்கள்

- தமிழ்நாட்டில் ஏற்றுமதி நிறுவனங்களுக்குத் தேவையான பொதுக் கட்டமைப்புகளை உருவாக்க ரூ.100 கோடி சிறப்பு நிதி உருவாக்கப்படும்.
- புதிய காலணி மற்றும் தோல் தொழில் மேம்பாட்டுக் கொள்கை ஒன்று வெளியிடப்படும்.
- இம்மதிப்பீடுகளில் தொழில்துறைக்கு ரூ.3,267.91 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புத்தொழில் நிறுவனங்கள் (Startups)

- தமிழ்நாட்டைச் சார்ந்த புத்தொழில் நிறுவனங்களில் பங்கு முதலீடு செய்வதற்கு ரூ.50 கோடியை வளர்ந்து வரும் தொழில்களுக்கான தொடக்க நிதிக்கு (Emerging Sector Seed fund) அரசு வழங்கும்.
- தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் (TANSIM) வாயிலாக ஈரோடு, மதுரை, திருநெல்வேலியில் புதிய மண்டல அளவிலான புத்தொழில் மையங்கள் ஏற்படுத்தப்படும். சென்னை, நந்தம்பாக்கத்தில் ரூ.75 கோடி மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய மாநில புத்தொழில் நிறுவன மையம் ஒன்று தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் (TIDCO) அமைக்கப்படும்.
- தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டும் வண்ணம், இந்நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் புதுமையான பொருட்களை (innovative manufactured products), ரூ.50 இலட்சம் வரை அரசுத்துறைகளும் நிறுவனங்களும் நேரடியாகக் கொள்முதல் செய்ய அனுமதிக்கப்படும்.

தமிழக பட்ஜெட் 2022-23

எரிசக்தித்துறைக்கு
ரூ.19,297.52 கோடி நிதிஒதுக்கீடு

தமிழக பட்ஜெட் 2022-23

குறு நிறுவனக் குழும மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்

தமிழக பட்ஜெட் 2022-23

ஏற்றுமதி நிறுவனங்களுக்கான
பொதுகட்டமைப்பை உருவாக்க
ரூ.100 கோடி சிறப்பு நிதி

தகவல் தொழில்நுட்பம்

- சென்னையில் ரூ.54.61 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் (ITNT) அரசால் அமைக்கப்படும்.
- தகவல் தொழில்நுட்பவியல் துறைக்கு ரூ.199.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலா

- இம்மதிப்பீடுகளில் சுற்றுலா, கலை மற்றும் பண்பாட்டுத்துறைக்கு ரூ.246.06 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்து சமய அறநிலையத்துறை

- ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயில்களை அவற்றின் பழமை மாறாமல் புதுப்பித்துப் புனரமைத்துப் பார் போற்றும் வண்ணம் பணிகளை மேற்கொள்ள இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். இப்பணிகள் ரூ.100 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.
- இம்மதிப்பீடுகளில் இந்து சமய அறநிலையத்துறைக்கு ரூ.340.87 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசுப் பணியாளர்கள் நலன்

- ஓய்வூதியதாரர்களின் குடும்பத்தினர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, நிலுவையிலுள்ள விண்ணப்பங்களை நேர் செய்ய, ஒரு சிறப்பு ஒதுக்கீடாக ரூ.50 கோடியை அரசு வழங்கும்.



நிருவாகச் சீர்திருத்தங்கள்

- மனிதவளம் தொடர்பான சீர்திருத்தங்கள் மேற்கொள்வதற்கான ஒருங்கிணைந்த திட்டத்தை ஆறுமாத கால அளவிற்குள் முன்மொழிவதற்காக ‘மனிதவள சீர்திருத்தக் குழு’ ஒன்று அமைக்கப்படும்.
- 01.04.2023 முதல் அனைத்து அரசு மற்றும் அரசுப் பொது நிறுவனங்களின் கொள்முதல்களுக்கும் ‘மின்னணு, கொள்முதல் முறை’ (e-Procurement) கட்டாயமாக்கப்படும்.

மாநில அரசின் நிதிநிலை

- இந்த அரசின், சிறப்பான நிதி நிருவாகத்தால் வரவு, செலவுத் திட்டத்தில் கணக்கிடப்பட்ட ரூ.58,692.68 கோடிக்கு மாறாக, திருத்த மதிப்பீடுகளில் வருவாய் பற்றாக்குறை ரூ.55,272.79 கோடியாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 4.33 சதவிகிதம் என முன்னர் மதிப்பிடப்பட்ட நிதிப் பற்றாக்குறை, திருத்த மதிப்பீடுகளில் 3.80 சதவிகிதமாகக் குறைந்துள்ளது.
- வரவு, செலவுத் திட்டத்தில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் ரூ.1,42,799.93 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. மாநிலத்தின் சொந்த வரியல்லாத வருவாய் ரூ.15,537.24 கோடி எனக் கணிக்கப்பட்டுள்ளது.
- ஒட்டுமொத்த வருவாய் வரவினங்கள் ரூ.2,31,407.28 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- மொத்த வருவாய் செலவினங்கள் ரூ.2,84,188.45 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளன.
- வருவாய் பற்றாக்குறை ரூ.52,781.17 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- நிதிப் பற்றாக்குறை ரூ.90,113.71 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் இரண்டாம் வேளாண் நிதிநிலை அறிக்கை

"நிலத்தில் மட்டுமில்லாமல்
உழவர்களின் நெஞ்சங்களிலும்
பசுமையை விளைவிக்கும்
வேளாண் நிதிநிலை அறிக்கை
உழவர்களின் பின்னால்
இந்த அரசாங்கம் இருக்கின்றது
என்ற உந்து சக்தியை அளிக்கிறது.

மண்ணையும் காப்போம்;
மக்களையும் காப்போம்!
மாநிலத்தில் மட்டுமல்ல.
இந்த நானிலத்தையும் காப்போம்!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

மாண்புமிகு வேளாண்மை மற்றும்
உழவர் நலத்துறை அமைச்சர்
திரு. **எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்** அவர்கள்
2022–2023ஆம் ஆண்டிற்கான
வேளாண் நிதிநிலை அறிக்கையினை
19.03.2022 அன்று தாக்கல் செய்தார்.

2022 – 2023ஆம் ஆண்டிற்கான வேளாண் நிதிநிலை அறிக்கையின் சிறப்பம்சங்கள்

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

முக்கிய நோக்கங்கள்

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்டத்தின் ஒன்றான தமிழகத்தின் நிகர சாகுபடிப் பரப்பினை உயர்த்துவது.
- அனைத்து வேளாண் சார்ந்த துறைத்திட்டங்களை ஒருங்கிணைத்து. ஒட்டுமொத்த கிராம வளர்ச்சிக்கு நடவடிக்கை எடுத்தல்.
- மானாவாரி விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவது.
- மாற்றுப் பயிர் சாகுபடி மூலம் சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள், பருத்தி, பழங்கள் மற்றும் காய்கறிகளின் சாகுபடிப் பரப்பினை உயர்த்துவது.
- இயற்கை இடர்ப்பாடுகளினால் ஏற்படும் பயிர் இழப்பிலிருந்து விவசாயிகளைப் பாதுகாத்தல்.
- ஆண்டு முழுவதும் வருமானம் ஈட்ட, விவசாயிகளுக்கு வேளாண் சார்ந்த பணிகளை மேற்கொள்ள ஆலோசனை வழங்குதல்.
- இயற்கை வேளாண்மையை ஊக்குவித்தல்.
- வேளாண் விரிவாக்கத்தில் தகவல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி விவசாயிகளுக்கு விரைவான சேவை அளித்தல்.
- பாசன நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தல்.
- வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் மரபுசார் இரகங்களை ஊக்குவித்தல்.
- வேளாண்மைப் பணிகளை இயந்திரமயமாக்குதல்.
- சூரிய சக்தியினை வேளாண் பணிகளுக்குப் பயன்படுத்தல்.
- பண்ணைக்குட்டைகள் உள்ளிட்ட பல்வேறு நீராதாரங்களை வலுப்படுத்தல்.
- சந்தை உட்கட்டமைப்புகளை வலுப்படுத்தி விவசாயிகளுக்கு இலாபகரமான விலை கிடைக்க உதவுதல்



சிறப்பம்சங்கள்

- மொத்த நிதி ஒதுக்கீடு – ரூ.33,007.68 கோடி. (சென்ற 2021–2022ஆம் ஆண்டின் திருந்திய மதிப்பீடு – ரூ.32,775.78 கோடி)
- கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தை 3,204 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்துவதற்கு ரூ.300 கோடி நிதி ஒதுக்கீடு. அனைத்துத் துறை திட்டங்களையும் ஒருங்கிணைத்து. (1,997 கிராமப் பஞ்சாயத்துகள் 2021–2022)
- முதல்வரின் மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டத்தில் 3,000 மானாவாரி நிலத் தொகுப்புகளில் 7.5 இலட்சம் ஏக்கர் மானாவாரி நிலங்கள் பயன்பெறுவதற்கு ரூ.132 கோடி.
- இயற்கை வேளாண்மை, இடுபொருட்கள் விநியோகம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ரூ.71 கோடி மதிப்பில் மாநில வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் என்ற புதிய திட்டம் அறிமுகம்.
- பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்திட ரூ.2,546 கோடி நிதி ஒதுக்கீடு.
- சிறுதானியங்கள் மற்றும் பயறுவகைகள் இயக்கம்.

  இரண்டு சிறுதானிய சிறப்பு மண்டலங்கள்,

  ❖ திருவண்ணாமலை, சேலம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர் ஆகிய மாவட்டங்களைக் கொண்டு முதல் மண்டலம்,

  ❖ தூத்துக்குடி, விருதுநகர், மதுரை, தென்காசி, இராமநாதபுரம், சிவகங்கை, தேனி, திருச்சி, கரூர், திண்டுக்கல், அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களைக் கொண்டு இரண்டாவது மண்டலம்,

  ❖ துவரைப் பயிருக்கெனச் சிறப்பு மண்டலம். (கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை, சேலம் மாவட்டங்களைக் கொண்டது)

  ❖ சிறுதானியங்களின் ஊட்டச்சத்துப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தச் சிறுதானிய திருவிழாக்கள்,

  ❖ சிறுதானியங்கள், பயறு வகைகளுக்கு விதை முதல் விற்பனைக்கு ரூ.152 கோடியில் உதவி.
- சூரியகாந்தி, சோயாபீன்ஸ் ஆகியவற்றிற்குச் சிறப்புக் கவனம் செலுத்தி எண்ணெய் வித்துக்களை ரூ.29.7 கோடிக்கு ஊக்குவித்தல்.
- ரூ.8 கோடியில் டிஜிட்டல் விவசாயம் அறிமுகம்

  ❖ அனைத்துக் கிராம நிலங்களுக்கும் புவியிடக்குறியீடு,

  ❖ புதிய பயிர்த் திட்டத்திற்கான பரிந்துரை,

  ❖ பூச்சி மற்றும் நோய்களுக்கான செயற்கை நுண்ணறிவு,

  ❖ ட்ரோன்களைப் பயன்படுத்துவதற்கான பயிற்சி,

  ❖ நீர்ப்பாசனத்தில் தானியங்குமயமாக்கலுக்கு நவீன இணையதள தொழில்நுட்பம் (Internet of Things)

  ❖ மண் வள அட்டைகளுக்கான தமிழ் மண் வளம் இணையமுகப்பு,

  ❖ பயிர்ச் சாகுபடிப் பரப்பினைக் கணிக்கத் தொலை உணர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்,

  ❖ இடுபொருட்கள், விதைகள், கன்றுகளை ஆன்லைனில் பதிவு செய்து விநியோகம்,

  ❖ வேளாண் விரிவாக்க மையங்களில் பணமில்லாப் பரிவர்த்தனை.

கரும்பு சாகுபடிக்கு உதவி – ரூ.10 கோடி

50 உழவர் சந்தைகளை சீரமைக்க ரூ.15 கோடி,
10 புதிய உழவர் சந்தைகள் அமைக்க ரூ.10 கோடி

- மயிலாடுதுறையில் புதிய மண் பரிசோதனைக் கூடம்.
- உயர் மதிப்பு வேளாண் திட்டங்களில், ஆதிதிராவிடர், பழங்குடியினச் சிறு, குறு விவசாயிகளுக்குக் கூடுதலாக 20 சதவிகித மானியம் வழங்க ரூ.5 கோடி.
- பூச்சி, நோய் மேலாண்மைக்கான சிறப்பு நிதியாக ரூ.5 கோடி.
- கரும்புச் விவசாயிகளுக்கு உதவி.
    - ❖ மெட்ரிக் டன்னுக்கு ரூ.195 சிறப்பு ஊக்கத்தொகை, கரும்பு விலை ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ.2,950.
    - ❖ கரும்புச் சாகுபடிக்கு உதவி, ரூ.10 கோடி.
    - ❖ சர்க்கரை ஆலைகளில் ஆய்வகத்தின் நவீனமயமாக்கல், தானியங்கி எடைகள் ரூ.4.5 கோடி.
- மின் இணைப்பு வழங்கப்பட்ட தாட்கோ பயனாளிகளுக்கு நுண்ணீர்ப் பாசனம் அமைப்பதற்கு நிதி உதவி ரூ.20 கோடி ஒதுக்கீடு.
- தோட்டக்கலைப் பயிர்களில் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க ரூ.30 கோடி.
- தென்னை, மா, கொய்யா, வாழைத் தோட்டங்களில் ஊடுபயிருக்காக ரூ.27.51 கோடி.
- பசுமைக்குடில், நிழல்வலைக்கூடம், நிலப்போர்வை, ஹைட்ரோபோனிக்ஸ், செங்குத்துத் தோட்டம் (Vertical garden) போன்ற உயர் தொழில்நுட்பங்களுக்கு ரூ.25.9 கோடி
- தேனீ வளர்ப்புத் தொகுப்புகளுக்கு ரூ.10.25 கோடி.
- உழவர் சந்தைகளின் காய்கனிகளின் வரத்தை அதிகரிக்கச் சிறப்புத் திட்டத்திற்கு ரூ.5 கோடி.
- காய்கறிகளில் பாரம்பரிய ரகங்களை மீட்டெடுக்க ரூ.2 கோடி.
- பருவம் இல்லாத தக்காளி சாகுபடியை ஊக்குவிக்க ரூ.4 கோடி.
- பனை மேம்பாட்டிற்காக ரூ.2.65 கோடி.
- பண்ணை இயந்திரமயமாக்கலை ஊக்குவிக்க ரூ.150 கோடி.
- முதலமைச்சரின் சூரியசக்தி பம்பு செட் திட்டத்திற்காக 3,000 பம்பு செட்டுகள் ரூ.65.34 கோடி மற்றும் 145 சூரியசக்தி உலர்த்திகள் ரூ.3 கோடி.
- 50 உழவர் சந்தைகளைச் சீரமைக்க ரூ.15 கோடியும் 10 உழவர் சந்தைகளை அமைக்க ரூ.10 கோடியும் ஒதுக்கப்பெற்றுள்ளன.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு உழவர் சந்தையில் மாலையில் சிறுதானியங்கள், பயறுவகைகளை விற்பனை செய்ய அனுமதி.
- மதிப்புக் கூட்டல் மற்றும் உணவுப் பதப்படுத்துதலுக்கு முன்னுரிமை.
    - ❖ திண்டிவனம், தேனி, மணப்பாறையில் ரூ.381 கோடியில் மூன்று மிகப்பெரிய அளவிலான உணவுப் பூங்காக்கள்,
    - ❖ கிராம அளவிலான மதிப்புக் கூட்டல், சந்தைப்படுத்தல் மையங்கள் 38 கிராமங்களில் அமைக்க ரூ. 95 கோடி.
    - ❖ 3 கோடியில் 5 தொழில் கற்கும் சிறுமையங்கள்.
    - ❖ 295 மதிப்புக் கூட்டும் மையங்கள் அமைப்பதற்கு ரூ.5 கோடி.

- சென்னை மற்றும் திருச்சியில் எஞ்சிய நச்சு பகுப்பாய்வு ஆய்வகங்கள் அமைக்க ரூ. 15 கோடி.
- பொது, தனியார் பங்கேற்பு முறையில் தேனி, கோயம்புத்தூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மொத்த காய்கறி விற்பனை வளாகங்கள் அமைத்து, அருகாமையில் உள்ள மாநில வியாபாரிகள் தமிழக விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்ய வசதி.
- மாநில அளவிலான “உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மேலாண்மை மையம்” அமைத்து வணிக நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுதல்.
- ஆறு ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்குக் கட்டமைப்பு வசதிகளுக்கு ரூ. 36 கோடி.
- பெரம்பலூர், தூத்துக்குடி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், தருமபுரி, விருதுநகர் ஆகிய ஏழு மாவட்டங்களில் இரண்டாம் கட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.125.44 கோடி.
- 60 ட்ரோன்களை வாங்குவதற்கும் பயிற்சி மற்றும் செயல் விளக்கத்திற்கு ரூ.10.32 கோடி.

வேளாண் சார்ந்த துறைகளின் செயல்பாடுகள்

- காவிரி டெல்டா மாவட்டங்களில் 4,964 கி.மீ. நீளமுள்ள கால்வாய்கள் மற்றும் வாய்க்கால்களில் தூர்வாரும் பணிகளுக்கு ரூ.80 கோடி.
- அயிரை, செல் கெண்டை, கல்பாசு போன்ற உள்நாட்டு மீன் வளர்ப்பு பாதுகாப்புக்கு ரூ.5 கோடி.
- விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்க TANGEDCOவிற்கு ரூ.5,157.56 கோடி.
- ஊரக வளர்ச்சித்துறை மூலம் ரூ.1,245.65 கோடியில் பண்ணைக் குட்டைகள், தடுப்பணைகள் மற்றும் தூர்வாரும் பணிகள்.
- விவசாயிகள் இடுபொருட்களை எடுத்துச் செல்லவும், விளைபொருட்களைச் சந்தைக்கு எடுத்துச் செல்லவும், கிராம பஞ்சாயத்துகளில் ரூ.604.73 கோடி செலவில் 2,750 கி.மீ. நீளத்தில் சாலைகள்.
- தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தேசிய ஊரகப் பொருளாதார மாற்றத் திட்டத்தின் மூலம் மூன்று இலட்சம் வேளாண் சார்ந்த வாழ்வாதாரப் பணிகளுக்கு ரூ.42.07 கோடி,
- வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின்கீழ் உற்பத்தியாளர் குழுக்கள், உற்பத்தியாளர்கள் குழுக்கள், சமுதாயப் பண்ணைப் பள்ளிகளை உருவாக்க ரூ.30.56 கோடி ஒதுக்கீடு,
- சிறு, குறு, நடுத்தரத் தொழில்கள் (MSME) மூலம் சிறிய விவசாயம் சார்ந்த தொழில்களைத் தொடங்க ரூ.1.5 கோடி வரை மூலதன மானியம்.
- திருவாரூர் மாவட்டத்தில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (டான்சிட்கோ) மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்கு ஏற்ற விலையைப் பெறுவதை உறுதிசெய்யும் வகையில் விவசாயப் பொருட்களுக்கான தொழிற்பேட்டை,
- வேளாண் புத்தொழில் நிறுவனங்களின் வேளாண் வணிக ரீதியான முயற்சிகளுக்கு ரூ.10 இலட்சம் வரை நிதியுதவி.
- வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், கிராம வங்கிகள் மூலம் தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு ரூ.1,83,425 கோடி வேளாண் கடன் வழங்கப்படுவதைக் கண்காணித்தல்.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில், பள்ளி, கல்லூரி கட்டடங்கள் மற்றும் விடுதிக் கட்டடங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 14.03.2022 அன்று தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் ரூ.13.78 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலப்பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியருக்கான 4 விடுதிக் கட்டடங்களையும், 10 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ரூ.9.34 கோடி செலவில் உட்கட்டமைப்புப் பணிகள் நிறைவுற்ற பள்ளிக் கட்டடங்களையும் திறந்துவைத்தார்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் வகுப்பினரின் சமூக, கல்வி, பொருளாதார நிலைகளை உயர்த்துவதைச் சிறப்பு நோக்கமாகக் கொண்டு பல்வேறு முனைப்பான திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரத்தில் 100 மாணவர்கள் தங்கும் வசதியுடன், ரூ.3.74 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் விடுதிக் கட்டடம்;

விழுப்புரம் மாவட்டம், தையூரில் 50 மாணவர்கள் தங்கும் வசதியுடன், ரூ.2.18 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதிக் கட்டடம்;

இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணத்தில் 100 மாணவியர் தங்கும் வசதியுடன் ரூ.4.12 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிக் கட்டடம், 100 மாணவர்கள் தங்கும் வசதியுடன் ரூ.3.74 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலக்கல்லூரி மாணவர் விடுதிக் கட்டடம்; மதுரை மாவட்டம், கரடிக்கல், பெருங்காமநல்லூர், தேங்கல்பட்டி, கல்லூத்து, நல்லுத்தேவன்பட்டி, வெள்ளைமலைப்பட்டி; திண்டுக்கல் மாவட்டம், மல்லணம்பட்டி, பள்ளபட்டி; தேனி மாவட்டம், சுருளிப்பட்டி, மார்க்கையன்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள 10 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் நபார்ட் வங்கி நிதியுதவியுடன் ரூ.9.34 கோடி செலவில் ஆய்வகங்கள், கூடுதல் கழிவறைகள், சுற்றுச்சுவர், கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் ஆகிய உட்கட்டமைப்புப் பணிகள் நிறைவுற்ற பள்ளிக் கட்டடங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்தார்.

மேலும், 92 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் நபார்ட் வங்கி நிதியுதவியுடன் ரூ.50.09 கோடி மதிப்பீட்டில் உட்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த 6,881 பயனாளிகளுக்கு ரூ.48.03 கோடி அளவில் சிறுதொழில், வியாபாரம் முனைவதற்கான கடனுதவிகள் வழங்குவதன் அடையாளமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 3 பயனாளிகளுக்குக் கடனுதவிகளை வழங்கினார்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் இயங்கும் விடுதிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் ஆகியவற்றில் பணிபுரிந்து, பணிக்காலத்தில் மறைந்த 15 பணியாளர்களின் வாரிசு தாரர்களுக்கு, இளநிலை உதவியாளர் பணியிடத்திற்குக் கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 3 வாரிசு தாரர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாள் சமத்துவ நாள் அரசு ஆணை

சுருக்கம்

உறுதிமொழி – அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்தநாளான ஏப்ரல் திங்கள் 14–ஆம் நாளை ஆண்டுதோறும் 'சமத்துவ நாள்' ஆக அனுசரிப்பது – உறுதிமொழி மேற்கொள்வது – ஆணை வெளியிடப்படுகிறது.

பொது (பொது–I)த் துறை

அரசாணை (நிலை) எண்:292

நாள்:13.04.2022
பிலவ வருடம், பங்குனி –30
திருவள்ளுவர்ஆண்டு – 2053
படிக்கப்பட்டது:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டப்பேரவை விதி 110–ன் கீழ் அறிவிப்பு நாள்:13.04.2022.

*****

ஆணை:–

தமிழ்நாடு சட்டப்பேரவையில் 13.04.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வடக்கே உதித்த சூரியன், மலர்பூக்க வந்த பகலவன், நமது அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்துத்தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளான ஏப்ரல் திங்கள் 14–ஆம் நாளை 'சமத்துவ நாளாக' கொண்டாடுவது என்று தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது என சட்டமன்ற விதி எண்.110–ன் கீழ் அறிவித்தார்கள்.

2. இதனை கருத்தில் கொண்டு, அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளான ஏப்ரல் திங்கள் 14–ஆம் நாள் அன்று, ஆண்டுதோறும் தலைமைச் செயலகம் தொடங்கி, அனைத்து அரசு அலுவலகங்களிலும் 'சமத்துவ நாள்' உறுதிமொழியை எடுத்துக்கொள்ளும் விதமாக கீழ்கண்டவாறு உறுதிமொழியினை அனுசரிக்க முடிவு செய்து அரசு ஆணையிடுகிறது:–

'சமத்துவ நாள்' உறுதிமொழி

சாதி வேறுபாடுகளுக்கு எதிராகவும்,
சாதிகளின் பெயரால் நடக்கும் சமூக அடக்கு முறைகளுக்கு எதிராகவும், தொடர்ந்து போராடி,
ஒதுக்கப்பட்டவர்களுடைய உரிமைகளுக்காகவும்,
ஒடுக்கப்பட்டவர்களுடைய சமத்துவத்திற்காகவும்,
வாழ்நாள் எல்லாம் குரல் கொடுத்து,
எளிய மக்களின் உரிமைகளைப் பற்றி விழிப்புணர்வை ஊட்டிய,
நம் அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்துத் தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளில்,

(த.பி.பா)

சாதி வேறுபாடுகள் ஏதுமில்லாத சமத்துவ சமுதாயத்தை அமைக்க நாம் அனைவரும் பாடுபடுவோம் என்றும்,

சகமனிதர்களைச் சாதியின் பெயரால் ஒருபோதும் அடையாளம் காணமாட்டேன் என்றும்,

சக மனிதர்களிடம் சமத்துவத்தை வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிப்பேன் என்றும் உளமார உறுதி ஏற்கிறேன்.

(ஆளுநரின் ஆணைப்படி)

வெ. இறையன்பு,
தலைமைச் செயலாளர்.

பெறுநர்:
அனைத்து துறைச் செயலாளர்கள்,
தலைமைச் செயலகம், சென்னை-9.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து துறைத் தலைவர்கள்.
பணி மேலாளர், அரசு அச்சகம், சென்னை-79.
(அரசிதழில் வெளியிட வேண்டி)
இயக்குநர், எழுது பொருள் மற்றும் அச்சுத் துறை, சென்னை-9.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை-104.
ஆளுநர் செயலர், ராஜ்பவன், சென்னை-22.
முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர்-I,
தலைமைச் செயலகம், சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.
பொது (மி.க.)த் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

13/04/2022
பிரிவு அலுவலர்
13/04/2022

30ஆவது அனைத்திந்திய கட்டுநர்கள் மாநாடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், மாமல்லபுரத்தில் 12.03.2022 அன்று, 30ஆவது அனைத்திந்திய கட்டுநர் மாநாட்டைத் தொடங்கிவைத்து ஆற்றிய உரை.

தமிழகத்தினுடைய மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அருமை அண்ணன் திரு.துரைமுருகன் அவர்களே, தமிழகத்தினுடைய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்களே, மாண்புமிகு குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ. அன்பரசன் அவர்களே, நாடாளுமன்ற உறுப்பினர் திரு.செல்வம் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.எஸ்.பாலாஜி அவர்களே, திரு.ரூபி மனோகரன் அவர்களே, அனைத்திந்திய கட்டுநர் சங்கத்தின் தேசியத் தலைவர் டாக்டர் ஆர்.என்.குப்தா அவர்களே, துணைத் தலைவர் திரு.எஸ்.அய்யநாதன் அவர்களே, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அந்தமான் மாநிலத் தலைவர் திரு.ஆர்.சிவகுமார் அவர்களே, தெற்கு மையத் தலைவர் திரு.எல்.சாந்தகுமார் அவர்களே, 30ஆவது அனைத்திந்திய கட்டுநர் மாநாட்டின் தலைவர் திரு.பீஷ்மா என்கிற ஆர்.இராதாகிருஷ்ணன் அவர்களே, ஒருங்கிணைப்புக் குழு நிருவாகிகளே, கட்டுமானத் துறையைச் சார்ந்த தொழிலதிபர்களே, பாசமிகு பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே, இங்கே குழுமியிருக்கக்கூடிய பெரியோர்களே, அருமை சகோதரர்களே, சகோதரிகளே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய மாலை வணக்கத்தை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கு வரவேற்புரை ஆற்றிருக்கக்கூடிய திரு.இராதாகிருஷ்ணன் அவர்கள் உணர்ச்சிவசப்பட்டு உரையாற்றிய காட்சியை நாங்கள் மட்டுமல்ல, நீங்களும் பார்த்தீர்கள். அதிலும் குறிப்பாக, தலைவர் கலைஞரிடத்திலே அவர் கொண்டிருந்த நட்பு, பாசம், அதேபோல் தலைவர் கலைஞர் அவர்கள், அவர்மீது கொண்டிருந்த பற்று, பாசம். அதற்கு எடுத்துக்காட்டாக அவர் இன்னமும் இருக்கிறார். இந்த நிகழ்ச்சிக்கு என்னிடத்திலே தேதியைப் பெறுவதற்காகக் கோட்டைக்கு வந்து, முதலமைச்சர் அறைக்கு வந்து, என்னிடத்திலே வந்து சந்தித்து, என்னிடத்தில் இந்த நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லி, அவசியம் வரவேண்டும், தலைவர் கலைஞர் அவர்கள் நாங்கள் அழைத்தபோதெல்லாம் வந்திருக்கிறார். அழைத்தபோது வந்தது மட்டுமல்ல, நாங்கள் சொன்னதையெல்லாம் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றித் தந்திருக்கிறார். கலைஞருடைய ஆட்சி நடைபெற்ற நேரத்தில் என்னென்ன நன்மைகளை, பலன்களை நாங்கள் பெற்றோம் என்பதையெல்லாம் அவர் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

கரிகாலன் விருது வழங்கப்படும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு வாக்குறுதி தந்தார்கள். ஆனால், ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு அது நடக்காமல் போய்விட்டது. இப்போது மீண்டும் ஆட்சி மாற்றம் வந்திருக்கிறது. எனவே, நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. கலைஞர் என்ன உறுதிமொழி கொடுத்தாரோ, அது நிச்சயம் நிறைவேற்றப்படும். இந்த ஆட்சி சொன்னதைச் செய்யும், செய்வதைத்தான் சொல்லும் என்று கலைஞர் அவர்கள் எந்த அடிப்படையிலே அந்த உறுதிமொழியை மக்களிடத்திலே தந்தாரோ, அதை இன்றைக்கு நாங்கள் கூடுதலாக நிறைவேற்றிடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். சொன்னதை மட்டுமல்ல, செய்வதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்யக்கூடிய ஆட்சிதான் இந்த ஆட்சி. ஏனென்றால், தாய் 8 அடி பாய்ந்தால், குட்டி 16 அடிப் பாயும் என்று சொல்வார்கள். 16 அடி பாய்ந்தால் எங்கள் தலைவருக்கு அது பெருமை இல்லை, 32 அடி பாய்ந்தால்தான் எங்கள் தலைவருக்குப் பெருமை கிடைக்கும். அந்த உணர்வோடுதான் நானும் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு உங்கள் அனைவரையும் சந்திக்கக்கூடிய ஒரு நல்வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. இந்த வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கக்கூடிய திரு.இராதாகிருஷ்ணன் அவர்களுக்கும், அவருடன் இணைந்து பணியாற்றிக் கொண்டிருக்கக் கூடிய அத்தனை பேருக்கும் என்னுடைய இதயப்பூர்வமான நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த 30ஆவது அகில இந்தியக் கட்டுநர்கள் மாநாட்டில் பங்கேற்பதில் நாங்கள் எல்லாம் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறோம். இந்த நிகழ்ச்சிக்கு வருகிறபோது நீங்கள் அளித்த அழைப்பிதழைப் பார்த்தேன். அந்த அழைப்பிதழின் அடியில் ஒரு வரியை நீங்கள் போட்டிருக்கிறீர்கள், “Role of Construction in Nation Building” என்ற வாசகத்தைப் படித்தேன். கட்டுநர்கள், இந்த மாநிலத்தின், நாட்டின் முன்னேற்றத்திற்கு மிக முக்கியமானவர்கள் என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள்.

ஒன்றிய – மாநில அரசுகளின் உட்கட்டமைப்பிற்கு அடித்தளம் போடக்கூடியவர்கள் நீங்கள். ஆம், நீங்கள் எல்லாம் இந்த நாட்டைக் கட்டமைப்பதில் ஒன்றிய, மாநில அரசுகளுடன் கைகோர்த்துப் பயணிக்கிறீர்கள். அந்தப் பயணத்தினுடைய ஒரு அங்கமாகவே இந்த 30ஆவது அகில இந்தியக் கட்டுநர்கள் மாநாட்டை அகில இந்தியக் கட்டுநர்கள் சங்கத்தின் தென்னக மையம் நடத்துகிறது. 2,500க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட இந்தத் தென்னக மையம், அகில இந்தியக் கட்டுநர்கள் சங்கத்தின் பழமையான மையம் என்பதையும் தாண்டி, ''தாய் மையம்'' என்பதாலோ என்னவோ, அதே தாய் மனப்பான்மையோடு, மாநிலத்தில் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் வேலை வழங்கும் அமைப்பாக இது திகழ்ந்து கொண்டிருக்கிறது.

ஆகவே முன்னேற்றத்திற்கு மட்டுமல்ல, வேலைவாய்ப்பிற்கும் உறுதுணையாக இருப்பதுதான் இந்தச் சங்கத்தின் சிறப்பு என்பதை நான் உணர்கிறேன். சென்னை மையம் மட்டுமே, 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கும், 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட பணியாளர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்கும் மையமாக விளங்குகிறது என்று சென்னை மையத்தின் தலைவர் சாந்தகுமார் அவர்கள் என்னிடத்தில் சொன்னார்கள். கொரோனா காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரேசன் பொருட்கள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களை இந்த மையத்தின் சார்பாகச் செய்திருப்பது உள்ளபடியே பாராட்டுக்குரியது. அதற்காக நான் அரசின் சார்பிலே வாழ்த்தும், நன்றியும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வழக்கமாக, ஒரு கட்டடத்திற்குத் தூண் வலு சேர்க்கும் என்று சொல்வார்கள். நீங்கள் மாநில அரசின் கட்டடங்களைத் தரமாகக் கட்டுவதில் வலுசேர்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.

அதையெல்லாம் மனதில் வைத்துதான், நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இந்தக் கட்டுநர்கள் சங்கத்திற்கு எப்படி முக்கியத்துவம் கொடுத்து, நீங்கள் அழைத்தபோதெல்லாம் வந்து பங்கேற்றாரோ, அதுபோல இன்றைக்கு நான் வந்திருக்கிறேன், இன்றைக்கு மட்டுமல்ல, என்றைக்கும் வருவேன், எப்போதும் வருவேன், எந்த நேரத்திலும் வருவேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு நிகழ்ச்சிக்கு வந்த நேரத்தில், சிமெண்ட் விலை உயர்வு குறித்து நீங்கள் எல்லாம் கவலை தெரிவித்துக் கோரிக்கை வைத்தீர்கள் அந்த நேரத்தில். மேடையிலேயே உங்களது கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு, சிமெண்ட் விலைக் குறைப்பு அறிவிப்பை வெளியிட்டவர்தான் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். மேடையிலேயே உங்கள் கோரிக்கையை அவர் நிறைவேற்றினார்.

இன்றைக்கு முதலமைச்சராக வந்தவுடன் என்னை அழைத்தீர்கள். முத்தமிழறிஞர் கலைஞர் வழியில், நானும் இங்கே வந்து பங்கேற்க வந்திருக்கிறேன்.

கொரோனா காலத்தில் எத்தகைய சவால்களை இந்தக் கட்டுமான தொழில் சந்தித்துக்கொண்டு வருகிறது என்பது அரசுக்கு நன்றாகத் தெரியும்.

★ அதனால்தான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், பொதுப் பணித்துறையில் தொகுப்பு முறையிலான ஒப்பந்தப்புள்ளி (பேக்கேஜ் டெண்டர்) கோரக்கூடிய நடைமுறை ரத்து செய்யப்பட்டது.

★ ரூ.15 கோடி மதிப்பீட்டிற்குமேல் உள்ள சிவில் மற்றும் மின் பணிகளுக்கு தனித்தனியாக ஒப்பந்தம் மேற்கொள்ள ஆணை வெளியிடப்பட்டது.

★ முன்தகுதி ஒப்பந்தப்புள்ளிக்கான நிதி உச்சவரம்பு ரூ.2 கோடியிலிருந்து ரூ.5 கோடியாக உயர்த்தப்பட்டது.

★ புதிய ஒப்பந்ததாரர் பதிவு மற்றும் புதுப்பித்தல் மண்டல தலைமைப் பொறியாளர்கள் அளவிலேயே மேற்கொள்ள ஆணை வெளியிடப்பட்டது.

★ ஒப்பந்ததாரர் பதிவு ஓராண்டுக்கு ஒரு முறை புதுப்பித்தல் என்பது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பித்தால் போதும் என்று மாற்றப்பட்டது.

★ மதிப்பீடுகள் தயாரிப்பதற்கான தரவினைத் தற்போதைய நடைமுறைக்கு ஏற்றவாறு திருத்தியமைக்கக் குழு அமைக்கப்பட்டது.

ஆனாலும், கொரோனா காலத்தின் தாக்கத்திலிருந்து கட்டுமானத்துறை இன்னும் மீளவில்லை என்பதை நான் நிச்சயமாக அறிவேன்.

அதை மனதில் வைத்துக்கொண்டு, நீங்கள் ஒரு கோரிக்கையை என்னிடம் வைத்தீர்கள். ஒப்பந்ததாரர் வகுப்பு–1இல் பண வரம்பு ரூ.10 முதல் ரூ.25 கோடியாகவும், செல்வநிலைச் சான்று ரூ.1 கோடியாகவும், புதிய வகுப்பு –1A ஏற்படுத்தி அதற்குப் பண வரம்பு ரூ.25 கோடிக்குமேல் நிருணயித்து – அதுக்கு solvency ரூ.3 கோடி என்று நிருணயிக்க அகில இந்தியக் கட்டுநர் கழகத்தின் சார்பில் கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். பிற வகுப்புகளுக்கு தற்போதுள்ள solvency 30 விழுக்காட்டிலிருந்து, 10 விழுக்காடாகக் குறைக்க கோரிக்கை வைத்திருக்கிறீர்கள்.

அவரே சொன்னார், கலைஞருடைய வாரிசு நான் என்று. எனவே, அவர் வழியிலே இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. எனவே, நான் முத்தமிழறிஞர் கலைஞருடைய மகன், ஆகவே இந்த மேடையிலே இப்போது நான் அறிவிக்கிறேன்.

அகில இந்தியக் கட்டுநர் கழகத்தின் கோரிக்கையைப் பரிசீலித்து, புதியதாக வகுப்பு 1–A ஏற்படுத்தி, solvency 10 விழுக்காடாக, அதாவது ரூ.2.50 கோடி எனவும், ஏற்கெனவே நடைமுறையில் உள்ள இதர வகுப்புகளுக்கான Solvency, அனைத்து நிலை ஒப்பந்ததாரர்களும் பயன்பெறக்கூடிய வகையில் 30 விழுக்காட்டிலிருந்து 15 விழுக்காடாகக் குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நீங்கள் கோரிக்கை வைத்தீர்கள். இப்போது நான் உங்களுக்குக் கோரிக்கை வைக்கப் போகிறேன். இப்போது நான் வைக்கக்கூடிய கோரிக்கை என்னவென்றால், ஏழை, எளிய, நலிந்த மக்களுக்குக் குறைந்த விலையில் வீடுகளைக் கட்டித் தர நீங்கள் முன்வர வேண்டும். தொன்மை வாய்ந்த இந்த மையம், கட்டுமானப் பணிகளைத் தரத்துடன் செய்வதில் புகழ்பெற்ற நிறுவனம் என்பது எனக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். ஆகவே, நீங்கள் இந்த அரசின் கட்டடங்களைத் தரமாகக் கட்டிக் கொடுத்து, வலிமை மிக்க கட்டடங்களாகக் கட்டிக் கொடுத்து, இந்த அரசுக்கு, மீண்டும் சொல்கிறேன், இந்த அரசுக்குத் ''தூண்'' போல் நீங்கள் துணை நிற்க வேண்டும்.

ஆகவே, இன்றைக்குத் தமிழ்நாட்டிலே நடைபெறக் கூடிய ஆட்சி, மக்களுக்காக நடைபெறக்கூடிய ஆட்சி, திரு.இராதாகிருஷ்ணன் அவர்கள் சொன்னார்கள். கலைஞர் மேற்கோள் காட்டிய செய்திகளை, எங்களை எல்லாம் ஆளாக்கிய அறிஞர் அண்ணா அடிக்கடி எடுத்துச் சொல்லக்கூடிய அந்த உணர்வை மக்களிடம் செல், மக்களோடு சேர்ந்து வாழ், மக்களுக்காகப் பணியாற்று. ஆகவே, நான் மட்டுமல்ல, பொதுவாக, இந்த ஆட்சியைத் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி என்று சொல்வதைவிட, என் தலைமையில் நடைபெறக்கூடிய ஆட்சி என்று சொல்வதைவிட, எங்களுடைய ஆட்சி என்று சொல்வதை விட, நான் எப்போதும் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பது, இது நமது ஆட்சி, மக்களுக்காக நடைபெறக்கூடிய ஆட்சி. அந்த உணர்வோடுதான் இந்த ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஆட்சிக்கு நீங்களும் எப்போதும் போல் எந்தச் சூழ்நிலையிலும் நீங்கள் துணை நிற்கக்கூடியவர்கள். எனவே, அதைத் தொடர்ந்து எங்களுக்கு வழங்க வேண்டும். உங்களுடைய ஊக்கமும் ஆக்கமும் எங்களுக்குக் கிடைத்தால்தான் நாங்கள் பணியாற்ற முடியும், நாங்கள் பணியாற்றினால்தான் மக்களுக்குப் பல திட்டங்களைக் கொண்டுபோய் சேர்க்க முடியும் என்பதை நினைவுப்படுத்தி, இந்தச் சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு உங்கள் அனைவரையும் சந்திக்கக்கூடிய நல்வாய்ப்பைப் பெற்றமைக்கு மீண்டும் ஒருமுறை என் இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து, என் உரையை நிறைவு செய்கிறேன்.

நரிக்குறவர் இன மாணவிகள் நன்றி...

நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்த ஆவடி, இமாகுலேட் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படித்துவரும் ஆர்.பிரியா, அம்பத்தூர், எபினேசர் பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்துவரும் கே.திவ்யா, ஆவடி, நசரத் அகாடமியில் ஏழாம் வகுப்பு படித்துவரும் எஸ்.எஸ். தர்ஷினி ஆகியோரது வீடியோப் பதிவினைப் பார்த்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 16.03.2022 அன்று அம்மாணவிகளைத் தலைமைச் செயலகத்தில் அழைத்துப் பேசினார்.

அப்போது, அம்மாணவிகள் மிகப்பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில் உள்ள நரிக்குறவர் இனத்தைப் பழங்குடியினர் வகுப்பில் சேர்த்திட நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும், தாங்கள் வசிக்கும் ஆவடி நரிக்குறவர் காலனியை மேம்படுத்திடவும், தங்கள் கல்விக்கு தேவையான உதவிகளைச் செய்திடவும் கேட்டுக்கொண்டார்கள். மேலும், பள்ளி மாணவர்களின் நலனில் மிகுந்த அக்கறையோடு செயல்பட்டுவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அம்மாணவிகள் நன்றி தெரிவித்துக்கொண்டனர்.

அச்சமயம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அம்மாணவிகளுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்வதாகத் தெரிவித்தார்.

மதுரையில் ரூ.65.89 கோடியில் ஆவின் - ஐஸ்கிரீம் தொழிற்சாலை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 14.03.2022 அன்று தலைமைச் செயலகத்தில், பால்வளத்துறை சார்பில் மதுரை பால் பண்ணை வளாகத்தில் ரூ.65.89 கோடி செலவில், நாளொன்றுக்கு 30,000 லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட ஆவின் நிறுவனத்தின் புதிய ஐஸ்கிரீம் தொழிற்சாலையைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

ஆவின் நிறுவனம் கிராம அளவில் 9,316 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட அளவில் 25 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள், மாநில அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் என்ற மூன்றடுக்குக் கட்டமைப்பில் செயல்பட்டு வருகிறது. ஆவின் நிறுவனம் 4.26 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 39 இலட்சம் லிட்டர் பாலைக் கொள்முதல் செய்து, 26.66 இலட்சம் லிட்டர் பாலை நாள்தோறும் நுகர்வோருக்குத் தமிழ்நாடு முழுவதும் விற்பனை செய்து வருகிறது. இந்திய அளவில் பால் கூட்டுறவு அமைப்புகளின்கீழ்ப் பால் கொள்முதலில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.

ஆவின் நிறுவனம் தரம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு பால் மற்றும் பால் உபபொருட்களை நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் வழங்கி, கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாகப் பால் விற்பனையில் தமிழகத்தில் முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. சென்னை, அம்பத்தூரில், தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் இணையத்தில் நாளொன்றுக்கு 15,000 லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட ஐஸ்கிரீம் மற்றும் இதர மதிப்புக்கூட்டப்பட்ட பால் உபபொருட்களை நுகர்வோர்களுக்குத் தரமானதாகவும், நியாயமான விலையிலும் கிடைக்கக் கூடிய வகையில் உற்பத்தித் தொழிற்சாலை இயங்கி வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, ஆவின் நிறுவனத்தின் சார்பில், தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் இணையத்தின் நிதியிலிருந்து ரூ.65.89 கோடி செலவில், சுமார் 100 பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில், தேசியப் பால்வளவாரியத்தின் மூலம் மதுரை பால்பண்ணை வளாகத்தில் நாளொன்றுக்கு 30,000 லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட அதிநவீனத் தொழில்நுட்பத்தில் ஐஸ்கிரீம் தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சாலையில் 50 மி.லி., 100 மி.லி., 500 மி.லி., 1 லிட்டர் அளவுகளிலும் மற்றும் நுகர்வோர்களுக்குத் தேவைக்கேற்ப அளவுகளில் ஐஸ்கிரீம் சிப்பமிடும் வசதிகளுடன், பல்வேறு வகை சுவைகளில் கோன் ஐஸ்கிரீம், குல்ஃபி ஐஸ்கிரீம் ஆகியவற்றை உற்பத்தி செய்து, அவை தென் மாவட்டங்களில் உள்ள நுகர்வோர்களுக்குத் தங்குதடையின்றி வழங்கப்படும்.

- நாளொன்றுக்கு, 30,000 லிட்டர் ஐஸ்கிரீம் உற்பத்தித் திறன்.
- 50 மி.லி., 100 மி.லி., 500 மி.லி., 1 லி. அளவுகள்.
- 100 பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பு.

ரூ.84.57 கோடியில் விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 14.03.2022 அன்று தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் கீழ்ச், செயல்படும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் ரூ.28.08 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள விளையாட்டு உட்கட்டமைப்புகள் மற்றும் தமிழ்நாடு உடற்கல்வியியல், விளையாட்டுப் பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.56.48 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள விளையாட்டு உட்கட்டமைப்புகள் ஆகியவற்றைத் திறந்துவைத்தார்.

விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் மேம்பாட்டில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாகத் தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும் பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரியப் பயிற்சி அளித்தல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் எனப் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், வேலூர் மாவட்டம், காட்பாடியில் ரூ.16.45 கோடி செலவில், 1,500 பேர் அமரக்கூடிய பார்வையாளர் மாடம், மாற்றுத் திறனாளிகளுக்கான தனி இடவசதி, அலுவலக அறை, மாநாட்டுக் கூடம், கணினி அறை, விளையாட்டு உபகரணங்கள் அறை, உடற்பயிற்சி அறை, மருத்துவ உதவி அறை, பயிற்சியாளர் அறை, விளையாட்டு வீரர் வீராங்கனைகள் தங்கும் அறை, உடை மாற்றும் அறை, சமையல் அறை, உணவு அருந்தும் கூடம் உள்ளிட்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள திறந்தவெளி மாவட்ட விளையாட்டு வளாகம்;

கிருஷ்ணகிரி மாவட்ட ஒசூர் விளையாட்டரங்கத்தில் ரூ.3.69 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள கூடைப்பந்து ஆடுகளம் கையுந்து பந்து மைதானம், இறகுப்பந்து உள்விளையாட்டரங்கம். நடைபாதை மற்றும் உடற்பயிற்சிக் கூடம்:

சென்னை – ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தின் அருகில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகத்தில் ரூ.7.94 கோடி செலவில், 150 மாணவியர்களுக்கான தங்குமிட வசதி, பயிற்றுநர் அறை, விளையாட்டு உபகரணங்கள் அறை, சமையல் அறை, உணவு அருந்தும் கூடம், மாணவிகளுக்கான கலந்தாய்வு கூடம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள சிறுமியர்களுக்கான புதிய விளையாட்டு விடுதி;

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.13.33 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள இறகுப்பந்து விளையாட்டுக்கான முதன்மை நிலை மையம், ரூ.12.60 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள மேசைப் பந்து விளையாட்டுக்கான முதன்மை நிலை மையம், ரூ.14.59 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள மாணவ, மாணவியர்களுக்கான விடுதி, ரூ.13.12 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு உயிர் இயந்திரவியலுக்கான முதன்மைநிலை மையம், ரூ.1.60 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள பாரம்பரியக் களரிப்பயட்டு மற்றும் சிலம்பத்திற்கான பயிற்சி மையம், ரூ.51.72 இலட்சம் செலவில் முகாம் மையத்தில் அமைக்கப்பட்டுள்ள உணவுக் கூடம், சமையல் அறை மற்றும் இருப்பு அறை, ரூ.73 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள வாகனங்கள் நிறுத்துமிடம்;

என மொத்தம் ரூ.84.57 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்தார்.

2021 திறன் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற இளைஞர்களுக்கு ஊக்கத்தொகை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 14.03.2022 அன்று தலைமைச் செயலகத்தில், ஜனவரி 2022இல் புதுதில்லியில் நடைபெற்ற தேசிய அளவிலான இந்தியா ஸ்கில்ஸ் 2021 திறன் போட்டிகளில் பங்குபெற்றுப் பதக்கங்களை வென்ற தமிழக இளைஞர்களைப் பாராட்டி, ஊக்கத் தொகை வழங்கினார்.

தமிழ்நாட்டை நாட்டின் திறன் முனையமாக மாற்றிடும் வகையில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவோர் திறனை மேம்படுத்தும் பொருட்டு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தேசிய அளவில் நடைபெறும் அனைத்து மாநிலங்களுக்கான திறன் போட்டிகள் இரண்டாண்டிற்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. அவ்வகையில் இந்தியா ஸ்கில்ஸ் 2021இன் இறுதிப் போட்டிகள் 2022 ஜனவரி 6 முதல் 10ஆம் தேதி வரை புதுதில்லியில் நடைபெற்றது. தமிழ்நாட்டின் சார்பில் துறைவாரியாகப் பல நிலைகளில் தெரிவு செய்யப்பட்ட 36 நபர்கள் பல்வேறு திறன் போட்டிகளில் கலந்துகொண்டனர். இவர்கள் இதுவரை இல்லாத வகையில் 2 தங்கம், 8 வெள்ளி, 8 வெண்கலம், 5 சிறப்புப் பதக்கம் என மொத்தம் 23 பதக்கங்களை வென்றுள்ளது, இதுவே முதல் முறையாகும்.

இந்தியா ஸ்கில்ஸ் 2021 திறன் போட்டிகளில் பதக்கங்கள் வென்று சாதனை படைத்தவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, தங்கப்பதக்கம் வென்ற ஏ.அனுஸ்ரீ, சுபாசிஸ் பால் ஆகியோருக்குத் தலா ரூ.1 இலட்சத்திற்கான காசோலையும், வெள்ளிப் பதக்கம் வென்ற எம்.காளிராஜ், சி.கார்த்தி, எஸ்.தாட்சாயினி, பி.வி.சரஸ்வதி, ஆர்.ஜெ.பிரகதீஸ்வரன், எஸ்.விஷ்ணுபிரியா ஆகியோருக்குத் தலா ரூ.50,000க்கான காசோலையும், வெண்கலப் பதக்கம் வென்ற எம்.ஜெ.அபர்ணா, பி.லோகேஷ், கே.அஜய்பிரசாத், வி.லோகேஷ், எஸ்.ஜெகன், என்.ஆர்.பிரகதீஷ், ஆர்.தினேஷ் ஆகியோருக்கு தலா ரூ.25,000க்கான காசோலையும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி பாராட்டினார்கள்.

பதக்கங்கள் வென்ற தமிழ்நாடு வீரர்கள் பலர் தெரிவு செய்யப்பட்டு ஸ்கில் ஒலிம்பிக்ஸ் எனப்படும் உலக அளவிலான திறன் போட்டிகளில் பங்குபெற உள்ளனர். இப்போட்டிகள் எதிர்வரும் அக்டோபர் மாதம் சீனாவின் ஷாங்காய் நகரில் நடைபெறவுள்ளது.

வரவேற்க காத்திருக்கிறோம்...

அனைவருக்கும் வணக்கம்.

நான் இப்போது தமிழ்நாடு உலக அரங்கில் ஒரு மைல்கல்லாய் நிலைத்திருக்கப் போகின்ற ஒரு நிகழ்வைப் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அந்தச் செய்தி என்னவென்றால், 44ஆவது உலக செஸ் ஒலிம்பியாட் போட்டியை நடத்துகின்ற வாய்ப்பை தமிழ்நாடு பெற்றிருக்கிறது. இது தமிழர்கள் அனைவருக்கும் பெருமிதம்.

விளையாட்டுப் போட்டிகள் என்றாலே ஆற்றல், திறமை, அழகு என நிறைய இருக்கும். அதிலும் செஸ் விளையாட்டுப் போட்டி என்றால், விளையாடுகிறவர்கள் நிதானத்தோடும், பார்க்கின்றவர்கள் படபடப்போடும் பங்கேற்கும் ஒரு அற்புதமான விளையாட்டு. இப்படிப்பட்ட அற்புதமான செஸ் விளையாட்டிற்கும் தமிழ்நாட்டிற்கும் நிறையத் தொடர்பு இருக்கிறது. உலகில் கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் தொடங்கி இன்றைக்கு பிரக்யானந்தா வரையில் தலைசிறந்த செஸ் விளையாட்டு வீரர்களைத் தொடர்ந்து உருவாக்கி வருகிறது தமிழ்நாடு.

இந்த நிலையில், சுமார் 150க்கும் மேற்பட்ட உலக நாடுகள் பங்குபெற இருக்கும் செஸ் விளையாட்டுப் போட்டி, இதுவரை இந்தியாவில் நடைபெற்ற அனைத்துவித பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் மிகப் பெரியதாக அமைய உள்ளது. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பை வழங்கிய பன்னாட்டு செஸ் அமைப்பிற்கும், இந்திய செஸ் அமைப்பிற்கும் நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன்.

விருந்தோம்பலுக்கும், பண்பாட்டிற்கும் பெயர் பெற்ற தமிழர்களுடைய பெருமையை உலகறியச் செய்வதற்கான ஒரு நிகழ்வாக இது நிச்சயம் அமையும். உலக செஸ் போட்டியைத் தமிழ்நாடு அரசு மிகச் சிறப்பாக நடத்துவோம். உலக விளையாட்டு வீரர்களை இருகரம் கூப்பி வரவேற்கக் காத்திருக்கிறோம்.

– **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்

விடுதலைப் போராட்ட வீரர் தோழர் ஜீவானந்தம் பேரனுக்குப் பணிநியமன ஆணை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 14.03.2022 அன்று, தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித்துறை சார்பில் விடுதலைப் போராட்ட வீரரும், பொதுவுடைமைச் சிந்தனையாளருமான தோழர் ஜீவா என்றழைக்கப்படும் திரு.ஜீவானந்தம் அவர்களின் பேரனான திரு.ம.ஜீவானந்த் (மாற்றுத்திறனாளி) அவர்களுக்குத் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தில் காலியாகவுள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் சிறப்பு நேர்வாக பணிநியமன ஆணையினை வழங்கினார்.

தமிழகத்தில் இயங்கிவரும் அனைத்து அரசு, அரசு உதவிபெறும் தொடக்க, நடுநிலைப்பள்ளிகள், சுயநிதி தொடக்க, நடுநிலைப் பள்ளிகள், நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகளின் ஒன்றிய அளவிலான ஆய்வு அலுவலர்களாகத் தொடக்கக்கல்வி இயக்ககத்தில் வட்டாரக்கல்வி அலுவலர்கள் பணிபுரிகிறார்கள். ஒன்றிய அளவில் செயல்படும் பள்ளிகளில் அரசின் நலத்திட்ட உதவிகளைக் கொண்டு சேர்த்தல், மாணவர்களின் கற்றல் மேம்பாட்டினை தொடர்ந்து கண்காணிப்பது இவர்களின் முக்கியப் பணியாகும். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த வட்டாரக்கல்வி அலுவலர் பணியிடங்களில் காலியாகவுள்ள பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் வாயிலாக நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதன் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 95 நபர்களுக்குப் பணிநியமன ஆணைகள் வழங்குவதன் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 4 நபர்களுக்குப் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, அரசுப் பள்ளிகளில் தொழில்நுட்பக் கட்டமைப்பை வலிமைப்படுத்தவும், எளிமையாகத் தொழில்நுட்பக் கற்றல் வளங்களைப் பள்ளிகளில் உருவாக்கிடவும், தொழில்நுட்ப மற்றும் கணினி மயமான பள்ளிகளின் செயல்முறைக்கு ஏற்றவகையில் ஆசிரியர்களின் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்திடவும் தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித்துறை மற்றும் Cognizant நிறுவனமும் இணைந்து பள்ளிகளில் தொழில்நுட்பத் தரமேம்பாட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம், கணினிமயக் கற்றல் மேம்பாட்டுத் திட்டத்திற்கு Cognizant நிறுவனம் அறிவுசார் பங்குதாரராகத் தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித்துறையுடன் இணைந்து செயலாற்றும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதி, பேராசிரியர் ஜெயபிரகாஷ் அவர்களால் தெலுங்கில் மொழிபெயர்க்கப்பட்ட “திருக்குறள் உரை”, எழுத்தாளர் திரு. சுந்தர ராமசாமி அவர்கள் எழுதி, திருமதி கௌரி கிருபானந்தன் அவர்கள் தெலுங்கில் மொழிபெயர்த்த “ஒரு புளியமரத்தின் கதை” ஆகிய நூல்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். இந்நூல்கள் திசைதோறும் திராவிடம் திட்டத்தின்கீழ் வெளியிடப்படும் 7ஆவது, 8ஆவது நூல்கள் ஆகும். இந்நூல்கள் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் ஹைதராபாத் புக் டிரஸ்ட் நிறுவனத்தோடு கூட்டு வெளியீடுகளாகக் கொண்டு வெளியிடப்பட்டுள்ளன.

ரூ.34.60 கோடியில்
அதிநவீன இயந்திர மனிதவியல் அறுவை சிகிச்சை மையம்

சென்னை, ஓமந்தூரார் தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் ரூ.34.60 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள அதிநவீன இயந்திர மனிதவியல் (ரோபோடிக்) அறுவை சிகிச்சை மையம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்துவைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.03.2022 அன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் இந்தியாவில் மாநில அரசு மருத்துவமனைகளில் முதலாவதாகச் சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்திலுள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில், ரூ.34.60 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள அதிநவீன இயந்திர மனிதவியல் அறுவை சிகிச்சை மையத்தை (Advanced Robotic Surgery Centre திறந்துவைத்தார்.

இந்த அதிநவீன இயந்திர மனிதவியல் அறுவை சிகிச்சை மையம் வாயிலாக அறுவைச் சிகிச்சை நிபுணர்களால், கடினமான அறுவைச் சிகிச்சைகளை மிகத் துல்லியமாகவும் நுணுக்கமாகவும், ரோபோடிக் கருவிகள் மூலம் மேற்கொள்ள இயலும். லேபராஸ்கோபியின் அதிநவீன முன்னேற்றமே ரோபோடிக் அறுவை சிகிச்சை ஆகும்.

அறுவை சிகிச்சையின்போது உறுப்புகளை அகற்ற நேரிட்டால் அவற்றின் இரத்த நாளங்களின் இரத்த ஓட்டம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். அதன்மூலம் இரத்த இழப்பினைத் தடுத்துப் பலவீனமடைந்த உறுப்பினை அகற்ற முடியும். அப்படி செய்யும்போது அதன் நரம்பு நாளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இவற்றைத் திறம்பட செயல்படுத்த 3D விரிவாக்கம் அவசியமாகிறது. இதற்கு இந்த நவீன இயந்திர மனிதவியல் அறுவை சிகிச்சை உதவும்.

அறுவை சிகிச்சை நிபுணரின் கைகள் 120 டிகிரி மட்டுமே சுழன்று அறுவை சிகிச்சை செய்ய முடியும் நிலையில், ரோபோடிக் சிகிச்சையில் உள்ள ENDO WRIST மூலம் 360 டிகிரி வரை சுழன்று அறுவை சிகிச்சை மேற்கொள்ள முடியும். மேலும், இதில் 3D விரிவாக்கமுள்ளதால் மிக எளிதில் துல்லியமாக நாளங்களின் அமைப்புகளைக் கண்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ள இயலும்.

ரோபோடிக் அறுவை சிகிச்சையின்போது, நோயாளியின் உடம்பில் சிறிய தழும்புகளே ஏற்படுவதால், இரத்த இழப்பு, வலி மற்றும் நோய்த்தொற்றுப் (Post operative Infection) பெரிதும் குறைவதோடு, அறுவை சிகிச்சையின் பின் வலி நிவாரண ஊசிகள் அதிகம் தேவைப்படுவதில்லை. மிகப்பெரிய அறுவை சிகிச்சை மேற்கொண்டவர்களும் விரைவாகக் குணமடைந்து வீடு திரும்பலாம்.

சிறுநீரக அறுவை சிகிச்சை, குடல் நோய் அறுவை சிகிச்சை, புற்றுநோய் அறுவை சிகிச்சை, நாளமில்லாச் சுரப்பி அறுவை சிகிச்சை, இருதய அறுவை சிகிச்சை ஆகிய அறுவை சிகிச்சைகளுக்கு இந்த அதிநவீன இயந்திரம் பயன்படும்.



முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 14.03.2022 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழகத்திலுள்ள மறுவாழ்வு முகாம்களில் வாழும் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களின் மாணவச் செல்வங்களின் பயன்பாட்டிற்காக 109 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கிடும் அடையாளமாக 3 பயனாளிகளுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினார்.

தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களின் மாணவச் செல்வங்களின் கல்வி இடைநிற்றலைக் கருத்திற்கொண்டு, அவர்களை ஊக்குவிக்கும் வகையில் கல்லூரி மற்றும் பட்டயப் படிப்பு படித்துவரும் மாணவர்களுக்குத் தமிழ்நாடு அரசால் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இலவசக் கல்வி அரசுப் பள்ளிகளில் வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பள்ளி செல்லும் குழந்தைகளின் கல்வி கொரோனா நோய்த்தொற்று காரணமாக பாதிக்கப்பட்டது. அக்குழந்தைகளுக்கு மெய்நிகர் வகுப்பறை வசதியில்லாத காரணத்தால், தமிழ்நாடு அரசால் கல்வித் தொலைக்காட்சி மூலம் நடத்தப்படும் நேரடி வகுப்புகளால் பயனடைவதில் மிகுந்த சிரமம் இருந்தது. அக்குழந்தைகளின் பள்ளிக் கல்வி பாதிப்படையாமல் இருக்கும் வகையில், பள்ளிக் கல்வி கற்கும் குழந்தைகள், தொலைக்காட்சியில் ஒலிப்பரப்பாகும் கல்வித் தொலைக்காட்சியைப் பார்த்து முழுவதும் பயனடையும் பொருட்டும், பள்ளிகள் திறந்தவுடன் மாலை நேரச் சிறப்பு வகுப்புகள் நடத்திட ஏதுவாகவும், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மறுவாழ்வு முகாம்களிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப 55 இன்ச் அல்லது 43 இன்ச் ஸ்மார்ட் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் நிறுவிட ரோட்டரி இண்டர்நேஷனல் சங்கத்தினர் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

இக்கோரிக்கையினை ஏற்றுக்கொண்டு, ரூ.43.60 இலட்சம் மதிப்பீட்டிலான 109 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை இலவசமாக ரோட்டரி இண்டர்நேஷனல் நிறுவனம் வழங்கியுள்ளது. இத்தொலைக்காட்சிப் பெட்டிகள், ஒவ்வொரு மறுவாழ்வு முகாம்களிலுள்ள மாணவர்கள் பயன்பெறும் பொருட்டு மாலை நேரக் கல்வி மைய அறைகளில் நிறுவப்படும்.

வாழ்த்து...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை 22.03.2022 அன்று, தலைமைச் செயலகத்தில், பிரேசில் நாட்டில் 01.05.2022 முதல் 15.05.2022 வரை நடைபெறவுள்ள 24ஆவது கோடைக்கால காது கேளாதோருக்கான ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கவுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கே. மணிகண்டன், ஆர்.சுதன், பிருத்வி சேகர், சமீஹா பர்வீன், ஆர்.சினேகா, ஜெர்லின் அனிகா ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

ரூ.1,588 கோடியில் சாம்சங் நிறுவனம்

காற்றழுத்தக் கருவிகள் உற்பத்திக்கானத் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில் 15.03.2022 அன்று சென்னையில், பன்னாட்டுத் தொழில் நிறுவனமான சாம்சங் நிறுவனத்தின் ரூ.1,588 கோடி முதலீடு மற்றும் 600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய காற்றழுத்தக் கருவிகள் (Compressor) உற்பத்தித் திட்டத்தை ஸ்ரீபெரும்புதூரில் நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

சாம்சங் நிறுவனம், ரூ.450 கோடி முதலீடு மற்றும் 2,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், கணினித் திரைகள், குளிர்சாதனப் பெட்டிகள், குளிரூட்டிகள், சலவை சாதனங்கள் உற்பத்தி செய்யும் திட்டத்தை ஸ்ரீபெரும்புதூரில் அமைந்துள்ள சிப்காட் நிறுவனத்தின் சிறப்புப் பொருளாதார மண்டலத்திலும், ஸ்ரீபெரும்புதூர் தொழிற்பூங்காவிலும் (உள்நாட்டு கட்டணப்பகுதி) அமைத்திட உத்தேசித்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் 10.11.2006 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. ஒரே வருடத்திற்குள் ஆலை கட்டி முடிக்கப்பட்டு 13.11.2007 அன்று, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களாலேயே திறந்தும் வைக்கப்பட்டது. அந்த முதலீடு நடப்பாண்டில் ரூ.1,800 கோடியாக உயர்ந்துள்ளது.

இன்று நடைபெற்ற இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம், சாம்சங் நிறுவனத்தின் புதிய விரிவாக்கத் திட்டத்திற்கான கட்டுமானப் பணிகள் 2022ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டிற்குள் நிறைவுபெறும் எனவும், 2022ஆம் ஆண்டு இறுதிக்குள் ஆண்டொன்றிற்கு 80 இலட்சம் அளவிற்குக் காற்றழுத்தக் கருவிகள் உற்பத்தி மேற்கொள்ளவும், 2024ஆம் ஆண்டு இறுதிக்குள் 144 இலட்சம் அளவிற்கு அதன் உற்பத்தியைப் பெருக்கிடத் திட்டமிட்டுள்ளது.

நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களே! தொழில்துறைக் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. எஸ்.கிருஷ்ணன் அவர்களே! வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி பூஜா குல்கர்னி அவர்களே! சிப்காட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. ஆனந்த் அவர்களே! சாம்சங் எலக்ட்ரானிக் நிறுவனத்தின் தென்மேற்சாசியத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் திரு. கென் காங் (Ken Kang) அவர்களே!

சாம்சங் நிறுவனத்தின் சென்னை தொழிற்சாலையின் மேலாண்மை இயக்குநர் பியோங் ஜிங் கோன்ங் (Byong Jin Kong) அவர்களே! அரசு அதிகாரிகளே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சாம்சங் நிறுவனத்தினுடைய விரிவாக்கத் திட்டத்திற்கான புரிந்துணர்வு (MoU) ஒப்பந்தம் செய்யப்படக்கூடிய இந்த விழாவிலே பங்கேற்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

சாம்சங் குழுமம் என்பது உலக அளவில் மிகப்பெரிய பன்னாட்டுத் தொழில் நிறுவனம் என்பது நம் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். சாம்சங் நிறுவனத்தை நான் யாருக்கும் அறிமுகம் செய்யத் தேவையில்லை. தென்கொரிய நாட்டில் உருவான நிறுவனமாக இருந்தாலும், இன்று சாம்சங் இல்லாத நாடு இல்லை என்ற ஒரு புகழை இது பெற்றிருக்கக்கூடிய நிறுவனமாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

சாம்சங் என்ற கொரியச் சொல்லுக்கு மூன்று நட்சத்திரங்கள் என்று பொருள் சொல்கிறார்கள். வானத்தில் என்றும் நிலைத்து நீடிக்கும் நட்சத்திரமாக இந்த சாம்சங் நிறுவனம் இருக்கிறது. உலகளவில் அதிகளவு சந்தை மதிப்பைக் கொண்ட எட்டாவது நிறுவனமாக சாம்சங் உயர்ந்திருக்கிறது என்பது உலகளாவிய ஒரு சாதனையாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அத்தகைய சாம்சங் நிறுவனத்துடன் விரிவாக்க ஒப்பந்தம் கையெழுத்திடுவது மகிழ்ச்சியாக இருக்கிறது.

“அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி” என்ற நமது அரசின் இலட்சியத்திற்கு ஏற்ப, உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதிலும், பெண்களுக்குப் பெருமளவில் வேலைவாய்ப்பு வழங்குவதிலும், சாம்சங் நிறுவனத்தின் பங்கு உள்ளபடியே பாராட்டுக்குரிய ஒன்றாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, பல தொழில் நிறுவனங்களைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்து, அத்தொழில் நிறுவனங்களை எல்லாம் அவர் துவக்கிவைத்தார். அந்த நிறுவனங்களின் விரிவாக்கத் திட்டங்களுக்கு

தற்போது நான் அடிக்கல் நாட்டிக் கொண்டிருக்கிறேன். அதாவது, கலைஞருடைய சாதனைகளை நாங்கள் தொடர்ந்து அதை நிறைவேற்றுகிற பணியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதற்கு இது ஒரு உதாரணமாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

அந்த வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட சாம்சங் நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) இன்று கையெழுத்திடப்பட இருக்கிறது.

தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டது எதுவும் சோடை போனது கிடையாது. அதற்கான எடுத்துக்காட்டுதான் இந்த நிகழ்ச்சி.

எனக்கும் இந்த நிறுவனத்துக்கும் பல ஆண்டுகளாகத் தொடர்பு உண்டு. அக்டோபர் 2010ஆம் ஆண்டு, நான் தொழில்துறை அமைச்சராக இருந்தபோது, சாம்சங்கின் உயர்மட்ட நிருவாகிகளைச் சந்தித்து நான் பேசினேன். தமிழ்நாட்டில் சாம்சங் நிறுவனத்தின் முதலீடுகளை அதிகரிக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் நான் அவர்களிடத்தில் எடுத்து வைத்தேன்.

அதை ஏற்றுக்கொண்டு 2010ஆம் ஆண்டு நவம்பர் மாதம், இந்த நிறுவனம், தன்னுடைய முதலீட்டினை ரூ.800 கோடியாக உயர்த்தியது. இதைத் தொடர்ந்து இந்த நிறுவனத்தின் குளிர்சாதனப்பெட்டி உற்பத்தித் திட்டத்தினையும் நான் துவக்கி வைத்தேன். நடப்பாண்டில் இந்நிறுவனத்தின் முதலீடு, ரூ.1,800 கோடியாக மேலும் உயர்ந்திருப்பது உள்ளபடியே மகிழ்ச்சிக்குரிய செய்தியாக இருக்கிறது.

உங்களுடைய வளர்ச்சிக்கு நானும் உதவி செய்திருக்கிறேன் என்று சொல்வதைவிட, நாம் இணைந்து தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் துணையாக இருக்கிறோம் என்பது மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கிறது.

இவ்வாறு நீங்கள் முதலீடுகளை அதிகரிப்பதை தனிப்பட்ட ஒரு நிறுவனத்தின் வளர்ச்சியாக நான் கருதவில்லை. நீங்கள் முதலீடுகளை அதிகரிப்பதன் மூலமாக வேலைவாய்ப்புகள் உருவாகின்றன. அதன் மூலமாகத் தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்கிறது. மாநிலத்தின் உற்பத்திச் சூழல் வலுப்பெறுகிறது.

இன்றையதினம், ரூ.1,588 கோடி முதலீடு மற்றும் 600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், காற்றழுத்தக் கருவிகள் (Compressor) உற்பத்தித் திட்டத்தை நிறுவிட முன் வந்துள்ளதை வரவேற்கிறேன்.

இன்றைய காலகட்டத்தில், மின்னணுவியல்துறை, மாநிலத்தின் உற்பத்தி வரைபடத்தையே மாற்றியமைத்திடக் கூடிய வல்லமை படைத்தது. இந்திய அளவில் மின்னணுவியல் சார்ந்த உற்பத்தியில், தமிழ்நாட்டின் பங்களிப்பு 20 விழுக்காடாக இருக்கிறது. இதைக் கருத்தில்கொண்டுதான், தமிழ்நாடு அரசு இத்துறையை, வளர்ந்துவரும் துறை என வகைப்படுத்தி இருக்கிறது. உள்நாட்டு உற்பத்தியைப் பன்மடங்கு அதிகரிப்பதற்கான இவ்வாறான வகைப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

மின்னணுவியல் துறை மட்டுமல்ல, எந்தத் துறையாக இருந்தாலும், அந்தத் துறையில் முன்னணி வகிக்க வேண்டும். அதன் பின்பு, முதல் நிலை என்ற அந்த இலக்கை நோக்கிப் பயணிக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய குறிக்கோளாக இருக்கிறது.

2030ஆம் ஆண்டிற்குள் நமது மாநிலத்தின் பொருளாதாரத்தை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு உயர்த்த வேண்டும் என்கிற எங்களது இலட்சிய இலக்கு உங்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கும் என்று நான் நம்புகிறேன்.

இதன் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டில் உங்கள் தயாரிப்பு வரிசையை பல்வகைப்படுத்தி, மேலும் விரிவாக்கம் செய்யுங்கள் என்று சாம்சங் நிருவாகத்தினை நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, செமிகண்டக்டர் உற்பத்தித் திட்டத்தினை நிறுவிட வேண்டும், இந்தத் தருணத்தில், சாம்சங் நிருவாகத்தினை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கான அனைத்து உதவிகளையும் செய்திட மாநில அரசு தயாராக இருக்கிறது என்று உங்களுக்கு நான் உறுதி அளிக்கிறேன்.

நீங்கள் மட்டுமல்ல, உங்களைப் போன்ற மற்ற தொழில் நிறுவனங்களையும் தமிழகத்தை நோக்கி அழைத்து வாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சாம்சங் நிறுவனத்தின் இப்புதிய திட்டம் மேலும் வளர வேண்டும் என்று மனதார என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து விடை பெறுகிறேன்.

“குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன புனரமைப்பு வல்லுநர் குழு” அறிக்கை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களிடம் 16.03.2022 அன்று தலைமைச் செயலகத்தில், கொரோனா ஊரடங்கால் பாதிக்கப்பட்டு நலிவடைந்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை மீட்டுருவாக்கிட ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அலுவலர் முனைவர் திரு.என்.சுந்தரதேவன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட “குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் புனரமைப்பு வல்லுநர் குழு” தனது அறிக்கையினை அளித்தது.

இக்குழுவானது, 16 தொழிற்துறை சங்கங்கள், 33 அரசுத் துறைகளைச் சார்ந்த அலுவலர்கள், வங்கி அதிகாரிகள், நிதி நிறுவனங்கள், புத்தொழில்கள் சார்ந்த வல்லுநர்கள், பல்துறை ஆலோசகர்கள் ஆகியோருடன் 60க்கும் மேற்பட்ட கூட்டங்கள் நடத்தப்பட்டும், குழு உறுப்பினர்களுடன் விவாதித்தும், ஆலோசனைகள் செய்தும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் முக்கிய பிரச்சினைகளுக்கான தீர்வுகள், பரிந்துரைகளுடன் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது.



தமிழ்நாடு அரசின் விருதுகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 15.03.2022 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில், தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் நடைபெற்ற தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவில், தமிழ் மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கும், தமிழ்ச் சமுதாய உயர்வுக்கும் தொண்டாற்றிப் பெருமை சேர்த்த தமிழ்ப் பேரறிஞர்கள், தமிழ் ஆர்வலர்களுக்கும், தமிழ் அமைப்பிற்கும் ஊடகத்துறைக்கும் என மொத்தம் 21 விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார்.

தமிழ்ப் புலவர்களையும், தமிழறிஞர்களையும் பெருமைப்படுத்தும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1970இல் தைத்திங்கள் இரண்டாம் நாளை திருவள்ளுவர் திருநாள் எனக் கடைப்பிடிக்க ஆணையிட்டார். மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், சென்னையில் வள்ளுவர் கோட்டம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது, கன்னியாகுமரியில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு, திறந்தும் வைக்கப்பட்டது. இளம் பருவத்திலேயே குறளின் பெருமையை அறிந்திடும் வகையில் 1,330 குறட்பாக்களையும் முற்றோதல் செய்யும் மாணவச் செல்வங்களுக்குக் குறள் பரிசு வழங்கும் திட்டத்தையும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள்.

சங்கப் புலவர்களை நினைவுகூரும் வகையில் 1990ஆம் ஆண்டு சங்கப் புலவர்களான ஒக்கூர் மாசாத்தியாருக்குச் சிவகங்கையிலும், நல்லூர் நத்தத்தனாருக்குச் செங்கல்பட்டு மாவட்டம் இடைகழி நாட்டிலும், மாங்குடி மருதனாருக்குத் தென்காசி மாவட்டம் மாங்குடியிலும், கருவூர் புலவர்கள் பன்னிருவருக்குக் கரூரிலும் நினைவுத் தூண்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் நிறுவப்பட்டுச் சிறப்புச் செய்யப்பட்டது. இதுபோன்று எண்ணற்ற தமிழறிஞர்களுக்கும், தமிழ்ச் சான்றோர்களுக்கும், சிலைகள் நிறுவியும், மணிமண்டபங்கள் அமைத்தும், அவர்களது பெயரில் விருதுகள் தோற்றுவித்தும் சிறப்புச் செய்துள்ளார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெருமுயற்சியால் தொன்மையும், இலக்கிய வளமும் நிறைந்த தமிழ் மொழியானது 2004ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் செம்மொழியாக அறிவிக்கப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசும், தமிழறிஞர்களையும், தமிழ்ச் சான்றோர்களையும் சிறப்பிக்கும் விதமாக, பாரதியார் நினைவைப் போற்றும் வகையில் அவர் மறைந்த நூற்றாண்டின் நினைவாக, மகாகவி பாரதியாரின் நினைவு நாளான செப்டம்பர் 11ஆம் நாள், அரசின் சார்பில் ஆண்டுதோறும் ‘மகாகவி நாளாகக்’ கடைப்பிடிக்கப்படும், பாரதியின் கையெழுத்துப் பிரதிகள் தேடித் தொகுக்கப்பட்டு, அவை வடிவம் மாறாமல் செம்பதிப்பாக வெளியிடப்படும் போன்ற 14 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டு, சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது. மேலும், தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவித்துச் சிறப்பிக்கும் வகையில், “இலக்கிய மாமணி விருது” என்ற புதிய விருது தோற்றுவிப்பு, ஞானபீடம், சாகித்ய அகாடமி போன்ற தேசிய விருதுகள், மாநில இலக்கிய விருதுகள் பெற்ற எழுத்தாளர்களுக்கு அவர்கள் வசிக்கும் மாவட்டத்தில் அல்லது விரும்பும் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு மூலமாகக் கனவு இல்லம் வழங்கப்படும் போன்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தமிழறிஞர்களைச் சிறப்பிக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ் மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கும், தமிழ்ச் சமுதாய உயர்வுக்கும் தொண்டாற்றிப் பெருமை சேர்த்த தமிழ்ப் பேரறிஞர்கள், தமிழ் ஆர்வலர்களுக்கும், தமிழ் அமைப்பிற்கும் ஊடகத்துறைக்கும் என மொத்தம்

21 விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார். விருதாளர்களுக்கு விருதுத் தொகையான ரூ.5 இலட்சத்திற்கான காசோலையும், தகுதியுரையும் கேடயத்தையும் வழங்கி, பொன்னாடைகளை அணிவித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்புச் செய்தார்.

விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:

தமிழ் வளர்ச்சித்துறை சார்பிலே தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் நிகழ்ச்சிக்குத் தலைமைப் பொறுப்பேற்று உரையாற்றி அமர்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு தொழில், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு, தொல்லியியல் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களே!

நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு இந்த மேடையில் அமர்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்களே! மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களே! மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்களே! மற்றும் வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

சென்னை மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் திருமதி பிரியா, துணைமேயர் மகேஷ்குமார் உள்ளிட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகளே! துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் திரு.மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., அவர்களே! நிறைவாக நன்றியுரை ஆற்றவிருக்கக்கூடிய தமிழ் வளர்ச்சி இயக்குநர் (பொறுப்பு) திரு.சரவணன், இ.ஆ.ப., அவர்களே! விருது பெறுவதற்காக இங்கே வருகை தந்திருக்கக்கூடிய அன்பிற்குரிய பெருந்தகைகளே! தமிழறிஞர்களே! அரசு உயர் அலுவலர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக் கூடிய நண்பர்களே! என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புக்களே! இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இயக்கத்தினுடைய அகில இந்தியத் தலைவர் நம்முடைய பெருமதிப்பிற்குரிய பேராசிரியர் காதர் மொய்தீன் அவர்களே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

மிகவும் எழுச்சியோடு, உணர்ச்சியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கக் கூடிய விழாவை இந்த மேடையில் நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். எத்தனையோ விருது வழங்கக்கூடிய விழாக்களில் நாம் பங்கேற்றிருந்தாலும், இந்த விழாவில் நான் பங்கெடுக்கிற நேரத்தில் எனக்கு ஏற்படக்கூடிய உணர்ச்சியும், எழுச்சியும் அதிகமானதாக அமைந்திருக்கிறது.

தமிழுக்கும் அமுதென்று பேர் – அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!

தமிழுக்கு நிலவென்று பேர்! – இன்பத்
தமிழ் எங்கள் சமுகத்தின் விளைவுக்கு நீர்!

தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்! – இன்பத்
தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ! –

என்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் கவிதை வரிகளை மனதில் ஏந்திக் கொண்டு, இந்த மேடையில் நான் நின்று கொண்டு இருக்கிறேன்.

ஈராயிரம் ஆண்டு காலம் என்று இதுவரை நாம் சொல்லிக் கொண்டிருந்தோம். ஆனால் இப்போது கிடைத்திருக்கக்கூடிய ஆய்வுகளின்படி பார்த்தால், 3,500 பழமையும், சிறப்பும் கொண்ட தமிழ் மொழிக்கும் இனத்துக்கும் பெருமை சேர்க்கக்கூடிய பெருமக்களின் பெயரால் அமைந்துள்ள விருதுகளை, அதே புகழும் பெயரும் அறிவும் ஆற்றலும் கொண்டிருக்கக்கூடிய பெருமக்கள் இங்கே பெற இருக்கிறார்கள்.

- ★ தமிழனுக்கு மட்டுமல்ல உலகத்துக்கே அறத்தைப் போதித்த திருவள்ளுவர் பெயரிலான விருதை, மு.மீனாட்சி சுந்தரனார் அவர்களுக்கும்,
- ★ பகுத்தறிவுப் பகலவன், அறிவுலக ஆசான் தந்தைப் பெரியார் பெயரிலான விருதை, திராவிட இயக்கத்தின் கணினி என்று தலைவர் கலைஞர் அவர்களால் போற்றப்பட்ட எழுத்தாளர் க.திருநாவுக்கரசு அவர்களுக்கும்,
- ★ ஒடுக்கப்பட்ட மக்களின் ஒளிவிளக்காம் டாக்டர் அம்பேத்கர் பெயரிலான விருதை, சட்ட நீதியை மட்டுமல்ல, சமூக நீதியையும் வழங்கும் தீர்ப்புகளைத் தந்த நீதியரசர் சந்துரு அவர்களுக்கும்,
- ★ நாமணக்கும் பேச்சால் தமிழர் உள்ளமெல்லாம் இன்றும் மணம் தந்து வரும் பேறறிஞர் அண்ணா பெயரிலான விருதை, நாவுக்கரசர், திராவிட இயக்கத்தின் போர்முரசமாம் நாஞ்சில் சம்பத் அவர்களுக்கும்,
- ★ கல்விக் கண் திறந்த பெருந்தலைவர் காமராசர் பெயரிலான விருதை, நம்முடைய பெருமதிப்பிற்குக்குரிய இலக்கியச் செல்வர் குமரி ஆனந்தன் அவர்களுக்கும்,
- ★ பாட்டுத்திறத்தால் இவ்வையகத்தை அசரவைத்த மகாகவி பாரதி பெயரிலான விருதை, தனது பேச்சுத் திறத்தால் தமிழ்நாட்டு மேடைகளை அசர வைத்துக் கொண்டிருக்கக்கூடிய பாரதி கிருஷ்ணக்குமார் அவர்களுக்கும்,
- ★ வார்த்தைகளால் தமிழுக்கு வாளாக அமைந்த புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பெயரிலான விருதை, திராவிடப் புலவர் செந்தலை கவுதமன் அவர்களுக்கும்,
- ★ முத்தமிழால் மூவாத்தமிழுக்கு அணி சேர்த்த கி.ஆ.பெ.விசுவநாதன் அவர்களுடைய பெயரிலான விருதை, முன்னாள் துணை வேந்தரும் எந்நாளும் தமிழாய்வு வேந்தருமான மா.ராசேந்திரன் அவர்களுக்கும்,
- ★ கவிச்சக்கரவர்த்தி கம்பர் பெயரிலான விருதை, பட்டிமன்ற வாதத்தினுடைய சக்ரவர்த்தியான பாரதி பாஸ்கர் அவர்களுக்கும்,
- ★ சொல்லின் செல்வர் பெயரிலான விருதை, ஒவ்வொரு சொல்லையும் கல் போல எடுத்து வீசக்கூடிய சூரியா சேவியர் அவர்களுக்கும்,
- ★ எங்கோ பிறந்து இங்குப் பிறந்த தமிழனாகவே வாழ்ந்தஜி.யு.போப்பெயரிலானவிருதைஇதழியல் துறையில் அனைவருக்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் அ.சு.பன்னீர்செல்வம் அவர்களுக்கும்,
- ★ சீறாப்புராணம் மூலம் தமிழை உயர்வித்த உமறுப்புலவர் பெயரிலான விருதை, தமிழிசை வளர்ச்சிக்கு நாளும் தொண்டாற்றும் மதுரை நா.மம்முது அவர்களுக்கும்,

★ தமிழ்த் தேசிய காப்பியத்தின் மூலமாகத் தமிழினத்தின் பெருமையை நிலைநாட்டிய இளங்கோவடிகள் பெயரிலான விருதை, மேடையில் ஏறினால் எல்லாக் காப்பியங்களையும் கரைமடை திறந்தது போல ஒப்பிக்கும் நெல்லைக் கண்ணன் அவர்களுக்கும்,

★ 20 மொழிகளை அறிந்து, அன்னைத்தமிழே அனைத்துக்கும் தாய் என்று சொன்ன திராவிட மொழிநூல் ஞாயிறு பாவாணர் பெயரிலான விருதைப் பெறும் தகுதியைத் தனது ஆய்வுத் திறத்தால் பெற்ற முனைவர் கு.அரசேந்திரன் அவர்களுக்கும்,

★ பொதுவுடைமைக் கொள்கையைத் திசை எட்டும் சேர்த்த சிங்காரவேலர் பெயரிலான விருதை, தினந்தோறும் தீக்கதிர் மூலமாக அதே பணியைச் செய்து வரும் மதுக்கூர் ராமலிங்கம் அவர்களுக்கும்,

★ தமிழின இயக்கமாம் திராவிட இயக்கம் உருவாகும் போதே தனித்தமிழுக்காக இயக்கம் கண்ட தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகள் பெயரிலான விருதை, சமயமும் தமிழுமாய்ச் சுகித்து வாழக்கூடிய சுகி சிவம் அவர்களுக்கும்,

★ வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் பெயரிலான விருதை அதே நோக்கம் கொண்ட முனைவர் இரா.சஞ்சீவிராயர் அவர்களுக்கும்,

★ முந்தைய நூற்றாண்டிலேயே தமிழன், திராவிடன் என்ற இரண்டு சொற்களையும் அரசியல் களத்தில் பதிய வைத்த அயோத்திதாசப் பண்டிதர் பெயரிலான விருதை, அயோத்திதாசர் எழுத்துக்களைப் பெருமளவில் வெளி உலகுக்கு எடுத்து வந்தவரும், அரசியல் ஆய்வாளர்களில் தலைசிறந்தவர்களுள் ஒருவரான ஞான அலாய்சிஸ் அவர்களுக்கும்,

★ முதலமைச்சர் கணினித் தமிழ் விருதை, கணினியில் முனைப்பாகச் செயல்படும் முனைவர் வ.தனலட்சுமி அவர்களுக்கும்,

★ பாமரர்களையும் செய்தித்தாள் படிக்க வைத்த சி.பா. ஆதித்தனார் பெயரிலான விருதை, படித்தவர்களுக்கும் புதிய சிந்தனைகளை உருவாக்கி வரும் உயிர்மை இதழுக்கும்,

★ தமிழ்த்தாய்ப் பெயரிலான விருதை, மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்துக்கும், வழங்குவதைத் தமிழ்நாடு அரசு பெருமையாகக் கருதுகிறது. உங்களுக்கு வழங்கியதன் மூலமாக இந்த விருது பெருமை அடைகிறது. எனது கையால் வழங்கியதன் மூலமாக நானும் பெருமைப்படுகிறேன்.

விருதுகளைப் பெற்ற பெருமக்களே! உங்களுக்கு விருதுகளை வழங்கியதன் மூலமாக நான் எனது தமிழ்க் கடமையைச் சரியாகச் செய்து விட்டதாக நினைத்து மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழுக்குத் தொண்டு செய்வோம் சாவதில்லை,
தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்ததுண்டோ? –
என்று பாடினார் புரட்சிக் கவிஞர்.

தமிழுக்குத் தொண்டு செய்தவர்கள் அவர்களது படைப்புகளின் மூலமாக வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களது புத்தகங்களின் மூலமாக வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அவர்களைப் போலவே இருக்கும் தமிழ்த் தொண்டர்களாகவும் அவர்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

அத்தகைய தீரமிகு எழுத்தாளர்கள், கனல் தெறிக்கும் பேச்சாளர்கள், களம் கண்ட போராளிகள், ஆய்வு அறிஞர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் இந்த விருதுகளைப் பெற்றுள்ளார்கள். இந்த விருதுகளை இவர்களுக்கு வழங்கியதன் மூலமாகத் தமிழ்நாடு அரசு இன்னொரு மிக முக்கியமான பெருமையை அடைகிறது.

வாழும் காலத்திலேயே, தகுதிசால் தமிழ்த் தொண்டர்களைப் பாராட்டியது தமிழ்நாடு அரசு என்ற விருதைத் தமிழக அரசு அடைகிறது. இதுதான் மிக முக்கியமானது என்று நான் நினைக்கிறேன்.

யாருடைய பெயரால் விருதுகள் உள்ளதோ அவர்கள் வாழ்ந்த காலத்தில் எத்தகைய அங்கீகாரத்தை பெறத் தவறினார்களோ, அதுபோன்ற சூழல் இனி வருங்காலத்தில் இருக்கக் கூடாது என்பதை இன்றைய தமிழக அரசு தனது கொள்கையாக வைத்துள்ளது என்பதை இந்த மாபெரும் நிகழ்ச்சியின் மூலமாக உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதனால்தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை தமிழாட்சியாக, தமிழின ஆட்சியாக நாங்கள் நடத்தி வருகிறோம். நாங்கள் என்றால் உங்கள் அனைவரையும் சேர்த்துத்தான் நான் சொல்கிறேன்.

விருதுபெற்ற பெருந்தகைகளையும் இணைத்துக் கொண்டே நான் சொல்கிறேன்.

★ ஈராயிரம் ஆண்டு இலக்கண, இலக்கிய செழுமை கொண்ட மொழிக்குச் செம்மொழி என்ற அந்த அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு.

★ தமிழர்கள் வாழும் இந்த மாநிலத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டியது கழக அரசு.

★ தமிழர்கள் கல்வியில், வேலைவாய்ப்பில், அதிகாரம் பொருந்திய அனைத்து இடங்களிலும் போய் அமர சமூ கநீதியை உருவாக்கிக் கொடுத்தது திராவிட இயக்கம்.

★ அதாவது தமிழ் மொழிக்கு, தமிழ் இனத்துக்கு, தமிழ்நாட்டுக்குத் தலையாயத் தொண்டு செய்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதையும் கழக அரசு என்பதையும் நான் தலைநிமிர்ந்து சொல்ல முடியும்.

★ ஐந்து முறை ஆட்சியில் இருந்த போது, எத்தனையோ சாதனைகளைச் செய்திருந்தாலும், கடந்த பத்து மாத காலத்தில் பைந்தமிழுக்குப் பல்வேறு சாதனைகளைச் செய்த அரசுதான் கழக அரசு என்பதை உங்களுக்கு மீண்டும் நான் நினைவூட்டுகிறேன்.

★ தமிழ்நாட்டு அரசுத்துறை பணியிடங்களில் நுழைபவர்களுக்குத் தமிழ்மொழி அறிவு கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது.

★ ஆசிரியர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் உள்ளிட்ட மாநிலத்திலுள்ள அனைத்துத் தெரிவு முகமைகளைப் பொறுத்தவரையில் கட்டாயத் தமிழ்மொழித் தகுதித் தேர்வு நடத்தப்படும்.

★ ஆலயங்களில் அன்னைத் தமிழ் ஒலிக்கத் தொடங்கி இருக்கிறது.

★ மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் மாநிலப் பாடலாக அறிவிக்கப்பட்டுள்ளது.

★ மதுரையில் கலைஞர் நினைவு நூலகம், தமிழ் அறிஞர்கள் நூல்கள் நாட்டுடைமை, எழுத்தாளர்கள் பிறந்தநாளில் கூட்டங்கள், குறைந்த விலையில் சங்க இலக்கிய நூல்கள் வெளியீடு, திராவிடக் களஞ்சியம் உருவாக்கம், இதழியலாளர்க்குக் கலைஞர் எழுதுகோல் விருது, உலகப் பல்கலைக்கழகங்களில் செம்மொழித் தமிழ் இருக்கைகள், நூலகங்களுக்குச் சிற்றிதழ்கள், இலக்கியமாமணி விருதுகள், திசைதோறும் திராவிடம், முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம், இப்படி தமிழாட்சி நடந்து வருகிறது.

★ 2010ஆம்ஆண்டு முதல் வழங்கப்படாமலிருந்த முத்தமிழறிஞர் கலைஞர் செம்மொழித் தமிழ் விருதுகள் 22.01.2022ஆம் நாளன்று வழங்கப்பட்டன. இனி ஒவ்வோர்ஆண்டும் முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாளாம், ஜூன் மாதம் 3ஆம் நாள் ரூ.10 இலட்சம் பரிசுத்தொகையுடன் வழங்கப்படும்.

★ பாரதி ஆய்வாளர்கள் ஐவருக்குத் தலா 3 இலட்சம் வழங்கி பெருமைப்படுத்தி இருக்கிறோம்.

★ தமிழக எல்லைப் போராட்ட வீரர்கள் 110 பேருக்குத் தலா 1 இலட்சம் வழங்கிச் சிறப்புச் செய்திருக்கிறோம்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் விரும்பிய ஆட்சி மட்டுமல்ல, தமிழர்கள் விரும்பிய ஆட்சியாகவும் நமது ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது.

தமிழ் வளர்ச்சி என்பது அந்த மொழியின் பெருமையைப் பேசுவது மட்டுமல்ல, மொழியைப் பெருமைப்படுத்தும் படைப்பாளிகளைப் போற்ற வேண்டும்.

கொரோனா காலத்தில் பதிப்பாளர்கள், விற்பனையாளர்கள் அதிகம் பாதிக்கப்பட்டிருந்தார்கள். ஏற்கெனவே ஜனவரி மாதம் தொடங்க இருந்த புத்தகக்கண்காட்சி தள்ளிப்போன காரணத்தால், அவர்களுக்கு இழப்பும் அதிகமாக ஏற்பட்டது. இதனை அரசாங்கம் கவனத்தில் கொண்டு, எங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். ரூ.1 கோடி வரைக்கும் இழப்பு ஏற்பட்டிருக்கும் என்று அவர்கள் சொன்னார்கள். அதனை மனதில் வைத்துக்கொண்டு ரூ.50 இலட்சத்தைத் தமிழக அரசு அவர்களுக்கு வழங்கி இருக்கிறது.

இந்த வகையில் இந்த ஆண்டு மட்டும் ரூ.1.25 கோடி பதிப்பாளர், விற்பனையாளர்களுக்குக் கிடைத்திருக்கிறது.

புத்தகக் கண்காட்சியைத் தொடங்கிவைக்க நான் சென்றபோது ஒரு அறிவிப்பைச் செய்யலாம் என்று நினைத்தேன். ஆனால், அது தேர்தல் காலம். உள்ளாட்சி அமைப்பினுடைய தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரம். அதனை அந்த நேரத்தில் சொல்ல முடியவில்லை. தேர்தல் நடத்தை விதிகள் அதற்கு இடம் தரவில்லை. தேர்தல் முடிந்துவிட்ட காரணத்தால் இந்த நிகழ்ச்சியின் மூலமாக அந்த அறிவிப்பைச் செய்கிறேன்.

அனைத்து நூல்களும் ஒரே இடத்தில் கிடைக்கும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக மாபெரும் புத்தகப் பூங்கா அமைக்கலாம் என்றும், அதற்கான நிலத்தை அரசு வழங்கும் என்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒருமுறை சொன்னார். அதற்குப் புத்தகப் பூங்கா என்றும் அவரே பெயர் சூட்டினார்.

பாபசி அமைப்பைச் சார்ந்திருக்கக்கூடிய அவர்களுடைய ஆலோசனைகளைப் பெற்று அதற்கான நிலத்தைத் தேர்வு செய்து, அரசு வழங்கும் என்று இந்த நிகழ்ச்சியின் வாயிலாக நான் உறுதி அளிக்கிறேன். இந்தப் புத்தகப் பூங்கா உருவானால்,

நீட் தேர்வுக்கு விலக்கு கோரும் சட்ட முன்வடிவை விரைந்து அனுப்பக் கோரிக்கை...

நீட் தேர்வுக்கு விலக்குக் கோரும் சட்டமுன்வடிவை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு விரைந்து அனுப்ப வலியுறுத்தி மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்களை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 15.03.2022 அன்று நேரில் சந்தித்துக் கடிதம் அளித்தார்.

நீட் தேர்வு விலக்குத் தொடர்பான தமிழ்நாடு இளங்கலை மருத்துவப் பட்டப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம், 2021, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 13.09.2021 அன்று அனைத்து அரசியல் கட்சிகளாலும் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு, ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த நிலையில், 142 நாட்களுக்குப் பிறகு, ஆளுநரால் திருப்பி அனுப்பப்பட்டது. அதன் பின்னர், தமிழ்நாடு சட்டமன்றத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்கக் கூட்டத்தில், இந்தச் சட்டமுன்வடிவு மீண்டும் நிறைவேற்றப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக ஆளுநருக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது. 2021–2022ஆம் கல்வியாண்டு முடிவுக்குவந்து, 2022–2023ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை நடைமுறை விரைவில் தொடங்கவுள்ள நிலையில், நீட் தேர்வுக்கு விலக்குக் கோரும் சட்டமுன்வடிவைக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு விரைந்து அனுப்பிட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக ஆளுநரை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சந்தித்து வலியுறுத்தினார்.

மேலும், இதேபோன்று பல மாதங்களாக நிலுவையிலிருக்கும் சட்டமுன்வடிவுகள் மற்றும் கோப்புகள்மீது உடனடி நடவடிக்கை எடுப்பதன்மூலம், தமிழ்நாடு சட்டமன்றத்தின் மாண்பைக் காப்பதுடன், தமிழக மக்களின் உணர்வுகளை மதிப்பதாகவும் அமைந்திடும் எனத் தமிழக ஆளுநரிடம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சுட்டிக்காட்டி வலியுறுத்தினார்.

இந்தச் சந்திப்பின் இறுதியில், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமிழ்நாட்டுக்கு நீட் தேர்விலிருந்து விலக்களிக்கக் கோரும் மசோதாவை மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைப்பதாக உறுதியளித்தார்.

அனைத்து புத்தகங்களையும் ஒரே இடத்தில் வாங்கலாம், அனைத்துப் பதிப்பாளர்கள், விற்பனையாளர்கள் ஒரே இடத்தில் சந்திக்கக்கூடிய சூழல் நிச்சயம் உருவாகும். அதனை உருவாக்கித் தர அரசு தன்னால் ஆன அனைத்து முயற்சிகளையும் உறுதியாகச் செய்யும்.

விருதுபெற்ற அனைவரையும் நான் பாராட்டுகிறேன், போற்றுகிறேன், வாழ்த்துகிறேன். உங்களது ஆலோசனைகளும் வழிகாட்டுதல்களும் இந்த அரசுக்கு எப்போதும் தேவை. இது உங்களது அரசு. அந்த உரிமையோடு நீங்கள் வழிகாட்டுங்கள்.

இன்றைய தினம் 21 விருதுகள் தரப்படவிருக்கின்றன. விருதுக்குத் தகுதியான பெருமக்களைத் தேர்வு செய்த மாண்புமிகு அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களையும், தமிழ்வளர்ச்சித் துறை அதிகாரிகளையும் நான் பாராட்டுகிறேன்.

தந்தை பெரியார் பெயரிலான விருது பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் துறை சார்பிலும், மாமேதை அம்பேத்கர் பெயரிலான விருது ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பிலும் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை இந்த விருதுக்குரியவர்களுக்கு ரூ.1 இலட்சம் தான் வழங்கப்பட்டது. கழக அரசுதான் இந்த ஆண்டு முதல் ரூ.5 இலட்சம் வழங்க அரசாணை வெளியிட்டது. மற்ற 18 விருதுகளுக்கான தொகை ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக ஆக்கப்பட்டுள்ளது. விருதுகளை உரியவர்களுக்கு உரிமையாக்கி இருக்கிறோம். இந்த விருதுகளைப் பெற்றதன் மூலமாக உங்களது தொண்டு மேலும் மேலும் அதிகரிக்கட்டும். இவர்களைப் போலவே இன்னும் பலரும் உருவாகட்டும். தொண்டு செய்வோம் தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும் எனச் சொல்லி உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மன்னார் வளைகுடாவிலுள்ள மெல்லுடலிகள் குறித்து வழிகாட்டி புத்தகம் வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 16.03.2022 அன்று தலைமைச் செயலகத்தில், The Molluscs of Gulf of Mannar, India and Adjacent Waters: A Fully Illustrated Guide (மன்னார் வளைகுடாவிலுள்ள மெல்லுடலிகள் குறித்த விளக்கப் படங்களுடன் கூடிய வழிகாட்டி) என்ற புத்தகத்தை வெளியிட்டார். இப்புத்தகம் இந்தியாவில் முதன்முறையாக ஆவணப்படுத்தப்பட்ட கடல் மெல்லுடலி இனங்களில் 70 சதவிகிதத்திற்கும் அதிகமான இனங்களை விளக்குகிறது.

மன்னார் வளைகுடாவின் மெல்லுடலிகளைக் குறித்துக் கடந்த 200 வருடங்களாக ஆராய்ச்சிகள் நடைபெற்று வந்த போதிலும், அவைகளின் இனங்களைக் குறித்த பட்டியல்களும் மற்றும் சிறிதளவு தகவல்கள் உள்ள கட்டுரைகளுமே உள்ளன. "இந்தியாவின் மன்னார் வளைகுடா, அருகிலுள்ள கடற்பகுதிகளிலுள்ள மெல்லுடலிகள் விளக்கப் படங்களுடன் கூடிய வழிகாட்டி" என்ற புத்தகமானது, மன்னார் வளைகுடாவில் இவ்வினங்கள் குறித்த விரிவான தகவல்களை கொண்டதாகும் விளக்கப் படங்களுடன் மெல்லுடலிகளின் அதிகாரப்பூர்வமான வகைப்பாடு மற்றும் இனம் கண்டறிதல் குறித்த இப்புத்தகம் 722 சங்கு இனங்கள், 287 சிப்பி இனங்கள், 21 கன்வாய் இனங்கள், 4 பாலிபிளக்கோ போரன்ஸ் இனங்கள் உள்ளிட்ட மொத்தம் 1,041 மெல்லுடலி இனங்களைத் தெளிவான படங்களுடன் காட்சிப்படுத்துகிறது.

இந்த வழிகாட்டிப் புத்தகம், இந்தியாவின் சிறந்த இரு ஆராய்ச்சி நிறுவனங்களாகிய, சுகந்தி தேவதாசன் கடல் ஆராய்ச்சி மையம், கேரள பல்கலைக்கழகத்தின் நீர் வாழ்வியல் மற்றும் மீன்வளத்துறை இணைந்து கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக மேற்கொண்ட ஆராய்ச்சிக் கணக்கெடுப்புகளின் தொகுப்பாகும். பல வர்ணங்களுடன் கூடிய இந்தப் புத்தகம் மன்னார் வளைகுடா உயிர்க்கோள மேலாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள், மீன்வள மேலாளர்கள், பொதுமக்கள், சங்கு சேகரிக்கும் பொழுதுபோக்காளர்கள் என அனைவருக்கும் மெல்லுடலிகளைக் குறித்த குறிப்பறியும் புத்தகமாக அமையும். அதுமட்டுமின்றி, சர்வதேச அளவில் மெல்லுடலிகளைக் குறித்த ஆராய்ச்சி மேற்கொண்டுள்ள ஆராய்ச்சியாளர்களுக்கும் படங்களுடன் கூடிய இப்புத்தகம் பேருதவியாக இருக்கும்.

இந்தப் புத்தகத்தின் நூலாசிரியர்கள் சுகந்தி தேவதாசன் கடல் ஆராய்ச்சி மைய இயக்குநர் முனைவர் ஜே.கே. பேட்டர்ஸன் எட்வர்ட், கேரளப் பல்கலைக்கழகத்தின் நீர் வாழ்வியல் மற்றும் மீன்வளத்துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பிஜுகுமார், குஜராத் பாலைவனச் சூழல் நிறுவனம், கடற்கரை மற்றும் கடல் சூழலியல் பிரிவுத் திட்ட ஆராய்ச்சியாளர் முனைவர் ரா.ரவினேஷ் ஆகியோர் ஆவர். உலக அளவில் மெல்லுடலி ஆராய்ச்சியில் சிறந்து விளங்கும் முனைவர் கிரகாம் ஆலிவர், இங்கிலாந்து, வேல்ஸ் தேசிய அருங்காட்சியகம், முனைவர் ஹெங்க் டெக்கர், நேச்சுரலிஸ் உயிர்ப்பல்வகைமை மையம், நெதர்லாந்து ஆகியோர் இப்புத்தகத்தின் பதிப்பாசிரியர்களாவர்.



குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில் 16.03.2022 அன்று தலைமைச் செயலகத்தில், குறு, சிறு, மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, கடன் உத்தரவாத நிதியம் ஆகியவற்றிற்கு இடையே கணினிமயமாக்கப்பட்ட இணையதளம் தயாரிக்கும் பொருட்டுப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. மேலும், தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் கயிறு குழுமத்தின் தென்னை நார் உற்பத்திக் கூடம், காக்களூர், மத்திய மின்பொருள் சோதனைக்கூடத்தில் எல்.இ.டி விளக்குகள் மற்றும் பொருத்திகளுக்கான பிரத்தியேக சோதனைக்கூடம், விருத்தாச்சலம், பீங்கான் தொழில் நுட்பக்கல்வி நிறுவனத்தில் பயிலும் மாணவர்களுக்காகக் கட்டப்பட்டுள்ள தங்கும் விடுதி ஆகியவற்றைத் திறந்து வைத்தார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு, மற்றும் நடுத்தரத் தொழில்கள் உற்பத்தி அலகுகளுக்காகத் தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டம் (TNCGS) பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டு ரூ.40 இலட்சத்துக்கு குறைவான வங்கிக் கடன்களுக்கு 90 சதவிகித உத்தரவாதமும், ரூ.40 இலட்சத்துக்கு மேல் ரூ.2 கோடி வரை உள்ள கடன்களுக்கு 80 சதவிகித உத்தரவாதமும் ஒன்றிய அரசின் குறு மற்றும் சிறு தொழில்களுக்கான கடன் உத்தரவாத நிதியத்துடன் (CGTMSE) இணைந்து தமிழ்நாடு அரசு ஆறு மாதங்களுக்குள் வழங்க திட்டமிட்டுள்ளது.

இந்தக் கடன் உத்தரவாத திட்டத்துடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு விரிவான மதிப்பீட்டுத் திட்டமும் ஒருங்கிணைந்து வழங்கப்படும். இத்திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இன்னும் 6 மாதத்தில் தொடங்கப்படும் வகையில் முழுவதுமாகக் கணினிமயமாக்கப்பட்ட இணையதளம் (Electronic platform) தயாரிக்கும் பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் குறு, சிறு, மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மற்றும் கடன் உத்தரவாத நிதியம் (CGTMSE) ஆகியவற்றிற்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

பூதலூரில் தென்னை நார் உற்பத்திக் கூடம்

தமிழ்நாடு அரசின் கயிறு குழுமங்களை உருவாக்கும் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு அரசு, சிறப்பு நோக்கக்குழு (SPV) ஆகியவற்றின் நிதிப் பங்களிப்புடன், மதிப்புக் கூட்டப்பட்ட தென்னை நார் பொருட்களை உற்பத்தி செய்திடும் நோக்கில், தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், செங்கிப்பட்டி கிராமத்தில் பூதலூர் கயிறு உற்பத்தியாளர் நிறுவனத்தின் கயிறு குழுமத்தைத் தொடங்கிவைத்து, அக்குழுமத்தின் சார்பில் ரூ.3.42 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தென்னை நார் உற்பத்திக் கூடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்துவைத்து, தென்னை நார் உற்பத்தியைத் தொடங்கிவைத்தார். இக்கயிறு குழுமத்தின் மூலமாக நேரடியாக 100 நபர்களும், மறைமுகமாக 200 நபர்களும் வேலைவாய்ப்புப் பெறுவதுடன், குழுமத்தின் 15 கயிறு நிறுவனங்களும் பயன்பெறும்.

எல்.இ.டி. விளக்குகள் மற்றும் பொருத்திகளுக்கான சோதனைக் கூடம்

திருவள்ளூர் மாவட்டம், காக்களூரில் அமைந்துள்ள மத்திய மின்பொருள் சோதனைக்கூடத்தில், மாநிலப் புதுமைத் திட்டத்தின்கீழ், ரூ.6.95 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள எல்.இ.டி. விளக்குகள், பொருத்திகளுக்கான பிரத்தியேகச் சோதனைக்கூடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கிவைத்தார். இச்சோதனைக் கூடத்திற்கான உபகரணங்கள் ஜெர்மனி நாட்டிலிருந்து கொள்முதல் செய்து நிறுவப்பட்டுள்ளது.

பீங்கான் (Ceramic) தொழில் நுட்பக்கல்வி நிறுவன மாணவர் தங்கும் விடுதி

கடலூர் மாவட்டம், விருத்தாச்சலத்தில் இயங்கிவரும் பீங்கான் தொழில் நுட்பக்கல்வி நிறுவனத்தில் பயிலும் வெளி மாவட்ட மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, ரூ.1.65 கோடி செலவில் 50 மாணவர்கள் தங்குவதற்கு வசதியாக 6,000 சதுரஅடி பரப்பளவில் பத்து தங்கும் அறைகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள தங்கும் விடுதியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலிக்காட்சி மூலம் திறந்துவைக்கப்பட்டது.

குறைந்த விலையில் மின்சாரம் கொள்முதல் செய்ய ஒப்பந்தம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில் 16.03.2022 அன்று தலைமைச் செயலகத்தில், என்.எல்.சி, சோலார் எனர்ஜி கார்பரேஷன் மற்றும் பவர் டிரேடிங் கார்பரேஷன் இந்தியா லிமிடெட் ஆகிய நிறுவனங்களுடன் மொத்தம் 2,900 மெகா வாட் மின்சாரத்தைக் குறைந்த விலையில் கொள்முதல் செய்திடத் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

1,500 மெகாவாட் தலபிரா மின்சக்தி கொள்முதல் ஒப்பந்தம்

என்.எல்.சி. 3 x 800 மெகாவாட் திட்டத்தை ஒடிசா மாநிலம், தலபிரா என்ற இடத்தில் அமைத்திட உள்ளது. அதில் 1,500 மெகாவாட் தமிழ்நாட்டிற்கு மத்திய மின் அமைச்சகத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திட்டம் தொடங்கும் ஆண்டு 2026–2027 என்று திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் நிலக்கரி சுரங்கத்தின் அருகில் இருப்பதால் என்.எல்.சி சமன் செய்யப்பட்ட மின்கட்டணமாக யூனிட் ஒன்றுக்கு ரூ.3.06 என நிர்ணயித்துள்ளது. 2026–2027ஆம் ஆண்டு முதல் தமிழகத்தின் மின் தேவையைக் கருத்தில் கொண்டு 1,500 மெகாவாட் மின்கொள்முதல் செய்வதற்கு என்.எல்.சி., தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்துடனான ஒப்பந்தம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

மேலும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குத் தனி நிலக்கரிச் சுரங்கம் ஒன்று ஒதுக்கப்படும் என்றும், கூடுதலாக 2,700 மெகா வாட் மின்சாரம் ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

1000 மெ.வா.க்கு சோலார் எனர்ஜி கார்பரேஷன் உடன் மின் கொள்முதல் ஒப்பந்தம்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், சோலார் எனர்ஜி கார்பரேஷன் ஆப் இந்தியாவுடன் உற்பத்தியுடன் இணைக்கப்பட்ட திட்டத்தின்கீழ், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் புதுப்பிக்கத்தக்க மின்கொள்முதல் கொள்கையின்படி ஏற்படும் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு 1,000 மெ.வா. சூரிய சக்தியை யூனிட் ஒன்றுக்கு ரூ.2.61 என்ற விலையில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் வாங்குவதற்கான ஒப்பந்தம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

சோலார் எனர்ஜி கார்பரேஷன் ஆப் இந்தியாவிலிருந்து வாங்கப்படும் 1,000 மெ.வா. சூரிய சக்தி மின்சாரம் பயன்பாட்டுக்கு 2022–2023ஆம் ஆண்டு இறுதியில் கிடைக்கப்பெறும்.

400 மெகாவாட் பவர் டிரேடிங் கார்ப்பரேஷன் இந்தியா லிமிடெட் நிறுவனத்துடன் ஒப்பந்தம்

தமிழ்நாட்டின் மின் தேவையைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், M/s. பவர் டிரேடிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் நிறுவனத்துடன் நான்கு நடுத்தர கால மின் கொள்முதல் ஒப்பந்தங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தம் மூலம் 24 மணி நேரமும் 400 மெகாவாட் மின்சாரம், யூனிட் ஒன்றிற்கு ரூ.3.26 என்ற விலையில் கொள்முதல் செய்யப்படும். இதன் ஒப்பந்தக் காலம் மூன்று ஆண்டுகள் ஆகும்.

என்.டி.பி.எல். 2021–2022ஆம் நிதியாண்டிற்கான இடைக்கால ஈவுத்தொகை

என்.எல்.சி. தமிழ்நாடு பவர் லிமிடெட், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் என்.எல்.சி.யின் கூட்டு முயற்சி நிறுவனத்தில் 2x500 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படுகிறது. அதில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு 11 சதவீதம் பங்குகள் உள்ளது.

2021–2022ஆம் ஆண்டில் முதல் 9 மாதங்களுக்கான ரூ.182.01 கோடி இலாபத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் பங்கு ஈவுத்தொகையான ரூ.15.16 கோடிக்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.வி.செந்தில் பாலாஜி அவர்கள் வழங்கினார்.

நம்பர் -1 தமிழ்நாடு எனும் நிலை உருவாகவேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 20.03.2022 அன்று செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூரில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை மூலம் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமினைத் தொடங்கிவைத்து, இம்முகாமில் வேலைவாய்ப்பினைப் பெற்ற இளைஞர்களுக்குப் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இவ்வேலைவாய்ப்பு முகாமில் செங்கல்பட்டு, காஞ்சிபுரம், சென்னை, திருவள்ளூர் மற்றும் பிற மாவட்ட இளைஞர்களும் பெருமளவில் கலந்துகொண்டனர். இம்முகாமில் 500க்கும் மேற்பட்ட முன்னணி தனியார்த் துறை நிறுவனங்கள் பங்கேற்றனர். இந்நிறுவனங்களால் 73,950 காலிப் பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில், முதல் 20 பேருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இம்முகாம், மாவட்ட நிருவாகம் மற்றும் காவல் துறையின் ஒருங்கிணைப்புடன் உணவு, குடிநீர், சுகாதாரம், பாதுகாப்பு வசதிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வசதிகளுடன் நடத்தப்பட்டது. அத்துடன் மகளிர் திட்டத்தின்கீழ் சுயஉதவிக்குழு அரங்கும் அமைக்கப்பட்டிருந்தது.

மேலும், திறன் பயிற்சி மேற்கொள்வதற்கான பதிவுகள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் வாயிலாகவும், அயல்நாட்டு வேலைக்கான பதிவுகள் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் வாயிலாகவும், தொழிற் பழகுநர் பயிற்சிக்காகப் பதிவு செய்வதற்கு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் பயிற்சிப் பிரிவின் வாயிலாகவும் மேற்கொள்வதற்கு அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. அத்துடன், தொழில் நெறி வழிகாட்டல் வழங்குவதற்கென மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையத்தினால் அரங்கு அமைக்கப்பட்டிருந்தது.

மே 2021 முதல் இதுவரை 36 பெரிய அளவிலான தனியார்த் துறை வேலைவாய்ப்பு முகாம்களும், 297 சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்களும் நடத்தப்பட்டன. இதில் 5,708 நிறுவனங்களும், 2,50,516 வேலைநாடுநர்களும் பங்கேற்றதில் 41,213 வேலைநாடுநர்கள் பல்வேறு துறைகளில் பணி நியமனம் பெற்றுள்ளனர். இதில் 517 மாற்றுத்திறனாளிகளும் அடங்குவர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விழா மேடையில், கல்வித் தொலைக்காட்சி வாயிலாக, அரசுப் பணிகளுக்காகப் பல்வேறு தேர்வு முகமைகளால் நடத்தப்படும் போட்டித்தேர்வுகளுக்கு தயாராகும் இளைஞர்களுக்குத் தேவையான பயிற்சிக்கான ஒளிபரப்பினைத் தொடங்கி வைத்தார். இப்பயிற்சி வகுப்பு அன்றாடம் காலை 7 மணி முதல் 9 மணி வரையிலும், அதன் மறு ஒளிபரப்பு இரவு 7 மணி முதல் 9 மணி வரையும் ஒளிபரப்பப்படும்.

நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை :

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் நண்பர் திரு. சி.வி.கணேசன் அவர்களே, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஜி.செல்வம் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள், திரு. எஸ்.ஆர்.ராஜா அவர்களே, திருமதி வரலட்சுமி மதுசூதனன் அவர்களே, திரு. எஸ்.எஸ்.பாலாஜி அவர்களே, திரு. இ.கருணாநிதி அவர்களே, திரு. எழிலரசன் அவர்களே, திரு. எம்.பாபு அவர்களே, தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி க.வசந்தகுமாரி அவர்களே, துணை மேயர் திரு. கோ.காமராஜ் அவர்களே, தொழிலாளர்

நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் செயலாளர் திரு. ஆர். கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., அவர்களே, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் திரு. கொ. வீர ராகவ ராவ், இ.ஆ.ப., அவர்களே, கிரெசன்ட் கல்லூரியின் வேந்தர் ஆர்.எஸ்.புகாரி ரஹ்மான் அவர்களே, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆ.ர.ராகுல் நாத், இ.ஆ.ப., அவர்களே, உள்ளாட்சி அமைப்புகளில் பொறுப்பேற்று இருக்கக்கூடிய பிரதிநிதிகளே, வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய நிறுவனங்களே, ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய தோழர்களே, நண்பர்களே, என் பாசத்திற்கும் பேரன்பிற்கும் உரிய மாணவச் செல்வங்களே, இளைஞர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இந்த இனியதொரு விழாவில் கலந்துகொண்டு ஆயிரக்கணக்கான இளைஞர்களை இந்தக் காலை நேரத்தில் பார்க்கும்போது, நான் அதிகமான உற்சாகத்தையும், மனமகிழ்ச்சியையும் அடைந்து கொண்டிருக்கிறேன்.

கையில் பட்டத்துடனும், மனதில் கனவுகளோடு, எதிர்கால வாழ்க்கையை ஏக்கத்தோடு, அதேநேரத்தில் செயல்படும் உற்சாகத்தோடு நீங்கள் எல்லாம் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறீர்கள். நிச்சயமாகச் சொல்கிறேன், உறுதியாகச் சொல்கிறேன், உங்கள் கனவுகள் உறுதியாக நிறைவேற்றப்படும். உங்களது ஏக்கங்கள் தீரும். உங்களது திறமைகளுக்கு ஏற்றவாறு வேலைவாய்ப்பு நிச்சயம் கிடைக்கும்.

உங்களுடைய எதிர்காலம் ஒளிமயமானதாக அமையும் என்று தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக மட்டுமல்ல, உங்களில் ஒருவனாக, உங்களது அன்புச் சகோதரனாக, அத்தனை பேரையும் நான் வாழ்த்துவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் வேலை, இதுதான், இந்த அரசினுடைய மன்னிக்கவும், நம்முடைய அரசின் நோக்கம். அதுதான் நம்முடைய அரசினுடைய இலக்கு. கல்வி என்றால் அடிப்படைக் கல்வி மட்டுமல்ல, அனைவருக்கும் உயர்கல்வி என்பதுதான் நமது அரசினுடைய இலக்காக அமைந்திருக்கிறது.

அதேபோல், அனைவருக்கும் ஏதோ ஒரு வேலை அல்ல, அனைவருக்கும் அவரவர் படிப்புக்கு ஏற்ற, தகுதிக்கு ஏற்ற வேலை வழங்கப்பட்டாக வேண்டும், அதுதான் இந்த அரசினுடைய இலட்சியம், இந்த அரசினுடைய இலக்கு. அதனால்தான், பள்ளிக் கல்வியையும், கல்லூரிக் கல்வியையும் மேம்படுத்திக் கொண்டிருக்கிறோம். அப்படி பள்ளியிலும், கல்லூரியிலும் படிக்கக்கூடிய மாணவர்களை, அவர்கள் விரும்புகின்ற வேலைக்குத் தகுதியுடையவர்களாக உருவாக்கி வருகிறோம். என்னுடைய கனவுத் திட்டமாக அண்மையிலே அறிவிக்கப்பட்டு, செயல்பாட்டுக்கு வந்து கொண்டிருக்கக்கூடிய 'நான் முதல்வன்' என்ற திட்டம் பற்றி நீங்கள் எல்லாம் கேள்விப்பட்டிருப்பீர்கள். அதைப் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

பள்ளிப்பருவத்திலேயே வழிகாட்டு முயற்சிகளை மேற்கொண்டு கல்லூரிகளில் வளர்ச்சிக்கேற்ற பாடத்திட்டங்களைத் தேர்வு செய்ய உதவி செய்து வேலைவாய்ப்புக்களை உறுதிசெய்யக்கூடிய அரிய திட்டம்தான் "நான் முதல்வன்" என்கிற அந்தத் திட்டம்.

இளைஞர்களைப் படிப்பில், அறிவில், சிந்தனையில், ஆற்றலில், திறமையில் அவர்களை மேம்படுத்தி நாட்டுக்கு வழங்குவதுதான் இந்த "நான் முதல்வன்" திட்டத்தினுடைய நோக்கம்.

இந்தத் திட்டத்தின் சிறப்பம்சமானது, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவ, மாணவியர்களின் தனித் திறமைகளை அடையாளம் கண்டு, அதனை மேலும் ஊக்குவிப்பதுதான் இந்தத் திட்டத்தினுடைய இலட்சியம். அடுத்தடுத்து அவர்கள் என்ன படிக்கலாம், எங்குப் படிக்கலாம், எப்படிப் படிக்கலாம் என்றும் வழிகாட்டப்படும்.

அறிவுத்திறத்தால் அனைத்து மாணவர்களையும், இளைஞர்களையும் வளர்த்தெடுக்கக்கூடிய திட்டம்தான் அந்தத் திட்டம். வேலைவாய்ப்புகளை உருவாக்குவது அந்த வேலைக்குத் தகுதியான இளைஞர்களை உருவாக்குவது என்கிற சக்கரச் சுழற்சியுடன் இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

அந்த வரிசையில் இந்த நாள் இங்குள்ள இளைஞர்களுக்கு மிகமிக முக்கியமான நாள். படித்த இளைஞர்களுக்குத் தகுதியான வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதை இந்த அரசு தனது முக்கியக் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது.

இந்த அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இன்று வரை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையால் 36 பெரிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்களும் 297 சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்களும் நடத்தப்பட்டிருக்கின்றன.

இந்தத் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள், வேலையளிப்போர், வேலை தேடுவோர் ஆகிய இரண்டு தரப்பையும் நேரடியாக இணைத்து அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள ஒரு பாலமாக அமைந்திருக்கின்றன.

இதுவரை நடந்த வேலைவாய்ப்பு முகாம்களில் 5,708 நிறுவனங்கள் கலந்துகொண்டன. 2,50,708 பேர் வேலைவாய்ப்புகளை நாடி வந்தார்கள். அவர்களில் 41,213 பேருக்கு

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மூலம் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்

- 507 வேலையளிக்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டன.
- 72460 வேலைநாடுநர்கள் கலந்து கொண்டனர்.
- 8752 வேலைநாடுநர்கள் பணி நியமனம் பெற்றனர்.
- முகாமில் கலந்துகொண்ட 81 மாற்றுத்திறனாளிகளில் 31 மாற்றுத்திறனாளிகள் பணி நியமனம் பெற்றனர்.

கல்வித் தொலைக்காட்சியில் அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகளுக்கு பயிற்சி வகுப்புகளுக்கான ஒளிபரப்பு துவக்கம்

வேலை கிடைத்திருக்கிறது. இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்று கேட்டீர்கள் என்றால், 517 பேர் மாற்றுத்திறனாளிகள் என்பதும் நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய மாவட்டமாக இந்தச் செங்கல்பட்டு மாவட்டம் துவக்கப்பட்ட பிறகு முதல்முறையாகத் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் இன்று நடைபெறுகிறது. இந்த முகாமில் வேலைவாய்ப்பினைப் பெற்ற இளைஞர்களுக்கு உரிய பணி நியமன ஆணைகளை வழங்குவதில் நான் பெறும் மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறேன்.

இந்த வேளையில் நான் மூன்று வேண்டுகோள்களை உங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன். முதலாவதாக, இதுபோன்ற வேலைவாய்ப்பு முகாம்களை, தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தவேண்டும். அதைத்தான் அந்தப் பொறுப்பிற்குரிய அமைச்சராக இருக்கின்ற திரு.கணேசன் அவர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவதாக, சொல்ல வேண்டுமென்றால், இந்த முகாம்களில் பங்கேற்கும் அனைத்து நிறுவனங்களுக்கும் ஒரு வேண்டுகோள். "நான் முதல்வன்" திட்டத்தில் தமிழ்நாடு அரசுடன் இணைந்து தமிழ்நாட்டினுடைய இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும், திறன் பயிற்சியும் வழங்கித் தமிழ்நாட்டில் வேலையின்மை என்பேதே இல்லாத நிலையினை உருவாக்க அயராது உழைக்குமாறும் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்திடக் கைகொடுக்குமாறும் உங்களை வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவதாக, இந்த வேலைவாய்ப்பு முகாம்களில் பங்கேற்று வேலை பெற்ற இளைஞர்களுக்கும், வேலைவாய்ப்புப் பெறமுடியாத இளைஞர்களுக்குமான ஒரு வேண்டுகோள். வேலை பெற்றவர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொண்டு மேலும் முன்னேற வேண்டும். வேலையைப் பெற முடியாதவர்கள் சோர்ந்து போகாமல், கவலைப்படாமல் நீங்கள் அயர்ந்து அதில் உங்கள் கவனத்தைச் செலுத்தவிடாமல், வேலைவாய்ப்புத் திறன்களை நீங்கள் வளர்த்துக்கொண்டு, அடுத்தக் கட்டத்தை நோக்கிச் செல்லத் தயாராக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இந்த நோக்கத்தைப் பற்றி நம்முடைய மாண்புமிகு திரு.கணேசன் அவர்களும், மாண்புமிகு திரு.அன்பரசன் அவர்களும், இந்தத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகளும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும் உங்களிடத்திலே விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே அதைபற்றி நான் அதிகம் விளக்கிச் சொல்ல வேண்டிய தேவையில்லை என்று நான் கருதுகிறேன். நான் முதலமைச்சராக உங்களுடைய அன்போடு, ஆதரவோடு இந்தப் பொறுப்பை ஏற்ற பிறகு எத்தனை முறை முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி இருக்கிறோம். அதன் மூலமாக எப்படியெல்லாம் வேலைவாய்ப்புகள் உருவாக்குவதற்கான திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறோம் என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். எல்லோரும் இன்றைக்கு என்னைப் பாராட்டுகின்ற நேரத்தில் நம்பர்–1 முதலமைச்சர், நம்பர்–1 முதலமைச்சர் என்று எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கேட்பதற்கு மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது. ஆனால், என்னைப் பொறுத்தவரையில், நம்பர்–1 முதலமைச்சர் என்பதை விட, நம்பர்–1 தமிழ்நாடு என்று சொல்லக்கூடிய நிலை உருவாக வேண்டும். அதற்கு "வேலை இல்லை, வேலை கிடைக்கவில்லை, வேலை வாய்ப்பைப் பெற முடியாத நிலையில் இருக்கிறேன்" என்று அந்தச் சொல்லை இந்த 5 ஆண்டுக் காலத்திற்குள் நிச்சயமாக நாங்கள் போக்குவோம் என்ற உறுதியை உங்களிடத்தில் எடுத்துச் சொல்லி, வந்திருக்கக்கூடிய உங்கள் அத்தனைப் பேருக்கும் என்னுடைய நல்வாழ்த்துக்களைச் சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

ரமலான் மாத நோன்புக் கஞ்சித் தயாரிக்க 6,000 மெ.டன். பச்சரிசி

நோன்பு நோற்கும் இஸ்லாமிய மக்களுக்குப் புனித ரமலான் மாதத்தில் நோன்புக் கஞ்சித் தயாரிக்க ஒவ்வொரு ஆண்டும் பள்ளிவாசல்களுக்குப் பச்சரிசி தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டுகளைப் போலவே, 2022 ஆண்டிலும் ரமலான் மாதத்தில் நோன்புக் கஞ்சித் தயாரிக்க பள்ளிவாசல்களுக்கு அரிசி வழங்க வேண்டும் என்று இஸ்லாமிய மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன.

2022 ஆண்டு, ரமலான் மாதத்தில் நோன்பு நோற்கும் இஸ்லாமிய மக்களுக்கு நோன்புக் கஞ்சி தயாரிப்பதற்கு ஏதுவாகப் பள்ளிவாசல்களுக்கு மொத்த அனுமதியின் கீழ் நோன்பு கடைப்பிடிக்கப்படும் நாட்களுக்கு மட்டும் பச்சரிசி வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 24.03.2022 அன்று உத்தரவிட்டுள்ளார்கள்.

பள்ளிவாசல்களுக்குத் தேவைப்படும் அரிசிக்கான மொத்த அனுமதியை வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்படி, 6,000 மெட்ரிக் டன் அரிசி மொத்த அனுமதி மூலம் பள்ளிவாசல்களுக்கு வழங்கப்படும். இதனால், அரசுக்கு ரூ.13.53 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும்.

மேகதாது அணை தொடர்பாகத் தனித் தீர்மானம்

மேகதாது அணை தொடர்பான தீர்மானத்தில்,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
ஆற்றிய உரை – 21.03.2022

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் மேகதாது சம்பந்தமாக ஒரு தீர்மானத்தை, அரசினர் தனித் தீர்மானமாகக் கொண்டுவந்து, அவரே முன்னுரையாக வரலாற்றிலே பதிவாகியிருக்கக்கூடிய பல்வேறு செய்திகளையெல்லாம் எடுத்துச் சொல்லி, கட்சிப் பேதமின்றி, அரசியல் பேதமின்றி இந்தத் தீர்மானத்தை நாம் ஏகமனதாக நிறைவேற்றிட வேண்டுமென்ற அந்த அடிப்படையிலே, ஒரு தீர்மானத்தை அவர் முன்மொழிந்திருக்கிறார்கள்.

அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்ததற்குப் பிறகு, அதைத் தொடர்ந்து உரையாற்றியிருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளும் ஓரணியில் நின்று, இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றிட, இந்த அரசுக்கு ஆதரவு தந்தமைக்கு முதலில் உங்கள் அத்தனை பேருக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேகதாது அணையைக் கருநாடகம் கட்டுவதற்கு ஒன்றிய அரசு அனுமதி தருவதை நிச்சயம் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். அதை எந்தக் காரணத்தைக் கொண்டும் ஒத்துக்கொள்ள மாட்டோம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

நடுவர்மன்றத் தீர்ப்பிற்கும், உச்சநீதிமன்றம் அளித்துள்ள இறுதித் தீர்ப்பிற்கும் எதிராகக் கருநாடக அரசு மேற்கொள்ளத் துடிக்கும் இந்த முயற்சியை தமிழ்நாடு அரசு நிச்சயம் தடுக்கும். அணைக்கு அனுமதி அளிக்கக் கூடாது என ஒன்றிய அரசுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதிலும், சட்டரீதியான நடவடிக்கைகளிலும் இந்த அரசு நிச்சயமாக உறுதியாக இருக்கும். அதிலே எந்தவித பாகுபாடும் பார்க்கமாட்டோம். அணை கட்டக்கூடிய முயற்சிகளை இந்த அரசு எல்லா வடிவிலும் எதிர்க்கும். தமிழ்நாட்டின் காவிரி உரிமையை, தமிழ்நாட்டு உழவர்களின் நலனை இந்த அரசு நிச்சயம் பாதுகாக்கும். தமிழ்நாட்டு உரிமையில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிற்போம்; நிச்சயம் வெற்றிப் பெறுவோம்.

தீர்மானம்

காவிரி நடுவர்மன்றம் 05.02.2007 அன்று அளித்த இறுதித் தீர்ப்பையும், மாண்பமை உச்சநீதிமன்றம் 16.02.2018 அன்று அளித்த தீர்ப்பையும் மதிக்காமலும், சம்பந்தப்பட்ட மாநிலங்களின் இசைவைப் பெறாமலும், ஒன்றிய அரசின் எந்தவித அனுமதியைப் பெறாமலும், தன்னிச்சையாகக் காவிரி நதியின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்ட நிதி ஒதுக்குவதை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதால் கருநாடக அரசின் இச்செயலுக்குத் தனது கடும் கண்டனத்தை இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

ஒன்றிய அரசு கருநாடகாவின் மேகதாது அணைத் திட்டத்திற்கு எவ்விதமான தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் உட்பட எவ்வித அனுமதியும் அளிக்கக் கூடாது என ஒன்றிய அரசை வலியுறுத்த இம்மாமன்றம் கேட்டுக்கொள்கிறது.

காவிரி நதிநீர் பிரச்சினை ஒரு நீண்டகால பிரச்சினையாகும். இதற்குத் தீர்வாக உச்சநீதிமன்றம் 16.02.2018 அன்று வழங்கிய தீர்ப்புச் செயலாக்கப்பட்டு வருகிறது. இப்பிரச்சினை இரு மாநிலங்களின் உணர்வுப்பூர்வமான பிரச்சினையாகும். ஆதலால் கருநாடக அரசு மேகதாதுவிலோ அல்லது காவிரி படுகையில் வேறு எந்த இடத்திலோ அணை அல்லது எவ்வித புதிய நீர்த்தேக்கத் திட்டத்தை மற்ற படுகை மாநிலங்களின் இசைவு இன்றியும், ஒன்றிய அரசின் ஒப்புதல் இல்லாமலும் மேற்கொள்ளக்கூடாது எனக் கருநாடக அரசிற்கு அறிவுறுத்துமாறு ஒன்றிய அரசை இம்மாமன்றம் கேட்டுக்கொள்கிறது.

மாண்பமை உச்சநீதிமன்றத்தின் 18.05.2018இன் ஆணையின்படி, அதன் 16.02.2018 அன்று அளிக்கப்பட்ட தீர்ப்பினைச் செயல்படுத்த, காவிரி நீர் மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, உச்சநீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்படாத, அணையை மேகதாதுவில் கட்ட கருநாடக அரசின் விரிவான திட்ட அறிக்கையைப் பரிசீலிக்கவோ, அதற்கு அனுமதி அளிக்கவோ கூடாது என்று ஆணையத்தை இம்மாமன்றம் கேட்டுக்கொள்கிறது.

கருநாடக அரசின் இந்த முயற்சியை முறியடித்துத் தமிழக விவசாயிகள் நலனைப் பாதுகாத்திடத் தமிழ்நாடு அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் இப்பேரவை தனது முழுமையான ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறது.

ரூ.230 கோடியில் சென்னை, கிண்டியில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனைக்கு அடிக்கல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 21.03.2022 அன்று சென்னை, கிண்டி, கிங் நோய்த் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ரூ.230 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 1,000 படுக்கைகளுடன் கூடிய பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97ஆவது பிறந்தநாளை முன்னிட்டு 03.06.2021 அன்று வெளியிட்ட அறிவிப்பில், ‘‘சென்னைப் பெருநகரத்தில் உள்ள கிங் நோய்த் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ரூ.250 கோடி மதிப்பீட்டில் 500 படுக்கை வசதிகளுடன் கூடிய பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை ஒன்று அமைக்கப்படும்’’ என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

அதன் தொடர்ச்சியாக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கட்டுவதற்காகச் சென்னை, கிண்டி, கிங் நோய்த் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் சுமார் 4.89 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டது. இந்த மருத்துவமனைக்குக் கட்டடம் கட்ட ரூ.230 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இம்மருத்துவமனைக் கட்டடம் தரைத்தளம் மற்றும் 6 மேல் தளங்களுடன் சுமார் 51,429 சதுரமீட்டர் பரப்பளவில் கட்டப்படவுள்ளது.

1,000 படுக்கை வசதிகளுடன் அமைக்கப்படவுள்ள இந்த உயர் சிறப்பு மருத்துவமனையில், இதயவியல் துறை, மூளை நரம்பியல் துறை, கதிர்வீச்சு மற்றும் குறுக்கீட்டுக் கதிர்வீச்சு துறை, குடல் மற்றும் இரைப்பை மருத்துவத்துறை, நோய் எதிர்ப்புக் குருதியியல் துறை, புற்றுநோய் மருத்துவத்துறை, சிறுநீரக மருத்துவத்துறை ஆகிய மருத்துவ உயர் சிறப்புப் பிரிவுகளும்;

இருதயம் மற்றும் நெஞ்சக அறுவை சிகிச்சைத்துறை, மூளை நரம்பியல் அறுவை சிகிச்சைத்துறை, இரத்தநாள அறுவை சிகிச்சைத்துறை, குடல் மற்றும் இரைப்பை அறுவை சிகிச்சைத்துறை, புற்றுநோய் அறுவை சிகிச்சைத்துறை, சிறுநீரக அறுவை சிகிச்சைத்துறை ஆகிய அறுவை சிகிச்சை உயர் சிறப்புப் பிரிவுகளையும் கொண்டு அமைக்கப்படவுள்ளது.

வீரருக்கு வாழ்த்து...

***அ**னைத்து இங்கிலாந்து இறகுப் பந்தாட்டத் தொடரில் மிக இளம் வயதிலேயே லக்ஷ்யா சென் படைத்துள்ள சாதனை கண்டு பெருமை கொள்கிறேன்.*

மதிப்புமிகுந்த இந்த அனைத்து இங்கிலாந்து இறகுப் பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதிபெற்ற ஐந்தாவது இந்திய வீரர் எனப் பெயரெடுத்த லக்ஷ்யா சென் அவர்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றிக்கு மிக அருகில் வந்து அதைத் தவறவிட்டுள்ளார்.

வருங்காலத்தில் அவர் சிறப்பான வெற்றிகளைக் குவித்திட எனது வாழ்த்துக்கள்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
(21.03.2022)

நமது அரசு சொன்னதை மட்டுமல்ல சொன்னதற்கு மேலும் செய்துகாட்டும் அரசு...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
விதி 110இன் கீழ் அறிவித்த அறிவிப்பு
(23.03.2022)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், அறிவுச்சுடர் பேரறிஞர் அண்ணா, நல்லாட்சி தந்த நாயகராகவும், நற்றமிழ் வளர்த்த புரவலராகவும், சொல்லாலும், செயலாலும், எழுத்தாலும் தமிழ் வளர்த்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் முனைப்போடு செயல்பட்டு வரக்கூடிய இந்த அரசு, ஆட்சிக்கு வந்து பத்து மாதங்கள் நிறைவுபெற்றுள்ளது.

தி.மு.க. தேர்தல் அறிக்கை தமிழக மக்களின் எதிர்பார்ப்புகளைக் குறிப்பிட்ட காலவரையறைக்குள் நிறைவேற்றுவதற்கும், மாநிலப் பொருளாதாரத்தை மீட்பதற்கும், துறைவாரியான முன்னேற்றத்திற்கும், ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்ட அறிக்கையாகும். இந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள 505 வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படும். அதில் சொல்லப்படாத நலத்திட்டங்களும் செயல்படுத்தப்படும் என்ற நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்புடன் மக்கள் அளித்த மாபெரும் வெற்றியைப் பெற்று அமைந்துள்ள இந்த அரசு, அதனை நிறைவேற்ற உறுதியுடன் செயல்பட்டு வருகிறது.

தமிழக மக்களின் நம்பிக்கையை உறுதி செய்யும் விதமாக, கடந்த மே 7ஆம் தேதியன்று பதவியேற்ற ஒரு சில மணித்துளிகளிலேயே தமிழகத்திலுள்ள கோடிக்கணக்கான மக்கள் பயன்பெறும் வகையில் ஐந்து முக்கிய கோப்புகளில் கையெழுத்திட்டு அரசாணைகளை நான் வெளியிட்டேன்.

❖ 2.09 கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் ரூ.4,000 கொரோனா நிவாரண நிதி.

❖ ஆவின் பால் லிட்டருக்கு ரூ.3 குறைப்பு.

❖ மகளிருக்கு அரசு நகரப் பேருந்துகளில் இலவசப் பயணம்.

❖ மக்களின் மனுக்களின்மீது தீர்வுகாண "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" துறை.

❖ தனியார் மருத்துவமனைகளில் கொரோனா சிகிச்சைக்கான அனைத்துச் செலவினங்களையும் முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தில் அரசே ஏற்பு.

இந்த ஐந்தில், முதல் நான்குமே திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றிருந்தவை. கடந்த பத்து மாதங்களுக்குள் நிறைவேற்றப்பட்ட முக்கியமான சில வாக்குறுதிகளை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

❖ வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவும், விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கவும், முதன்முறையாக வேளாண்மைக்கென்று தனியாக இரண்டு நிதிநிலை அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

❖ கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் சுமார் 55 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.2,756 கோடி தள்ளுபடி செய்யப்பட்டது.

❖ கூட்டுறவு அமைப்புகள் மூலம் வழங்கப்பட்ட 5 சவரனுக்குட்பட்ட ரூ.5,250 கோடி நகைக்கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

❖ பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.3 குறைப்பு.

❖ ஊரகப் பகுதிகளில் ரூ.1,200 கோடி ஒதுக்கீட்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்துவது.



❖ ‘நமக்கு நாமே’ திட்டம். உள்ளூர் சமூகங்களுடன் இணைந்து ரூ.100 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படுவது.

❖ “இயற்கை வேளாண்மை வளர்ச்சித் திட்டம்” என்ற உன்னதத் திட்டத்தைச் செயல்படுத்துவது.

❖ அண்ணா நூற்றாண்டு நூலகம் புதுப்பொலிவு பெறக்கூடிய வகையில் புனரமைத்தல் மற்றும் மதுரையில் கலைஞர் நூலகம் அமைத்தல்.

❖ பத்திரிகையாளர்கள், இந்தியக் குடியுரிமைத் திருத்தச் சட்டம், மீத்தேன்/நியூட்ரினோ மற்றும் கூடங்குளம் அணுமின் நிலையம், எட்டுவழிச்சாலைத் திட்டங்களுக்கு எதிராகப் போராடிய விவசாயிகள், பொதுமக்கள்மீது போடப்பட்ட 5,570 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன.

❖ மூன்று வேளாண் சட்டங்கள் மற்றும் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தைத் திரும்பப் பெற வலியுறுத்தி சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, மேற்படி மூன்று வேளாண் சட்டங்களும் ஒன்றிய அரசால் திரும்பப் பெறப்பட்டுள்ளன.

❖ NEET தேர்விலிருந்து விலக்குப் பெறுவதற்கான சட்ட முன்வடிவைச் சட்டப்பேரவையில் நிறைவேற்றியது.

❖ கொரோனா சிகிச்சை பணியில் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த மருத்துவர்களின் குடும்பங்களுக்குத் தலா ரூ.25 இலட்சம் கொரோனா இழப்பீட்டுத் தொகை.

❖ அதேபோல், கொரோனா நோய்த் தொற்றால் காவல் துறையில் உயிரிழந்த காவல்துறை அலுவலர்கள், காவலர்களின் குடும்ப வாரிசுதாரர்களுக்குத் தலா ரூ.25 இலட்சம் வீதம் நிவாரணத் தொகை.

❖ குடும்ப அட்டை கோரி விண்ணப்பிக்கக்கூடிய தகுதி வாய்ந்த அனைத்து நபர்களுக்கும் பதினைந்து நாட்களுக்குள் ‘ஸ்மார்ட் கார்டு’ வழங்குதல்.

❖ தமிழக அரசிற்கு ஆலோசனைகளை வழங்கிட ‘முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழு’ அமைக்கப்பட்டுள்ளது.

❖ பணியிலிருக்கும்போது உயிரிழக்கும் அரசுப் பணியாளரின் குடும்பத்தினருக்கு, குடும்பப் பாதுகாப்பு நிதியிலிருந்து வழங்கப்படும் உதவித் தொகை ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டது.

❖ தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நடத்தப்படும் அரசுப் பணிகளுக்கான தேர்வுகளில் தமிழ் மொழி தேர்ச்சி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

❖ ஸ்டெர்லைட் சம்பவம் குறித்துத் தவறாகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகளைத் திரும்பப்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டது மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணத் தொகை மற்றும் கல்வித் தகுதியின் அடிப்படையில் அரசுப் பணி வழங்கப்பட்டுள்ளது.

❖ மகளிர் அரசு ஊழியர்களுக்கான மகப்பேறு கால விடுப்பு 9 மாதங்களிலிருந்து 12 மாதங்களாக உயர்த்தப்பட்டது.

இந்த அரசினால் வெளியிடப்பட்டுள்ள பல்வேறு அறிவிப்புகளில், தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள வாக்குறுதிகளோடு, இடம்பெறாத அறிவிப்புகளும் அடங்கும். அவை குறித்து நடவடிக்கைகள் தொடர்புடையத் துறைகளால் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில்,

❖ இந்த மாமன்றத்தில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில் 52 தேர்தல் வாக்குறுதிகளும்;

❖ மாண்புமிகு ஆளுநர் அவர்களின் உரை குறித்த என்னுடைய பதிலுரையில் 1 வாக்குறுதியும்;

❖ மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட 2021–2022ஆம் ஆண்டு மற்றும் 2022–2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவு அறிக்கையில் 33 வாக்குறுதிகளும்;

❖ மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களால் வேளாண்மைக்காகத் தாக்கல் செய்யப்பட்ட 2021–2022ஆம் ஆண்டு மற்றும் 2022–2023ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் 21 வாக்குறுதிகளும்;

❖ விதி 110இன்கீழ் வெளியிடப்பட்ட அறிக்கையில் 3 வாக்குறுதிகளும்;

❖ அவரவர் துறை சார்பாக அமைச்சர் பெருமக்கள் வெளியிட்ட அறிவிப்புகளில் 78 வாக்குறுதிகளும்;

❖ இதர அறிவிப்புகளில் 10 வாக்குறுதிகளும், நேரடியாக நிறைவேற்றப்பட்ட 10 வாக்குறுதிகளும் என இதுவரை மொத்தம் 208 தேர்தல் வாக்குறுதிகள் அரசின் அறிவிப்புகளாக இடம்பெற்றுள்ளன. இவை அனைத்திற்கும் உரிய அரசாணைகள் வெளியிடப்பட்டு, அரசாணைகள் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் அனைத்தும் முறையாகவும், முழுமையாகவும் செயல்படுத்தப்படுவதை இந்த அரசு முனைப்புடன் கண்காணித்து வருகிறது.

இந்த அரசு பதவியேற்று, இதுவரை நடைபெற்ற சட்டசபைக் கூட்டங்கள், அரசு விழாக்கள் போன்றவற்றில் குறிப்பிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் இடம்பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்ட வாக்குறுதிகளைத் தவிர, தேர்தல் அறிக்கையில் சொல்லாத பல்வேறு கொள்கை அளவிலான அறிவிப்புகளும் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில், தமிழக மக்களின் சமூகப் பொருளாதார

முன்னேற்றம் மற்றும் பலவகையான நலத்திட்ட உதவிகள் எனச் சொல்லாதவற்றையும் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. உதாரணமாக,

❖ பள்ளிக்கு வந்து கல்வி கற்று வந்த மாணவர்களை வீட்டுக்குள் முடக்கி வைத்த கொரோனா பெருந்தொற்றுக் குழந்தைகளின் கல்வியை மட்டுமின்றி அவர்களின் மனதையும் பாதித்துவிட்டது. இந்தப் பாதிப்பைச் சரி செய்யக்கூடிய விதமாகத் தனித்துவம் கொண்ட 'இல்லம் தேடிக் கல்வித் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டு வகுப்பறையைப் பள்ளிகளுக்கு வெளியேயும் நீட்டிக்கச் செய்யும் மகத்தான முயற்சியை இந்த அரசு மேற்கொண்டது.

❖ மாநிலத்தில் தொற்றா நோய்களின் சுமையை எதிர்கொள்ளும் விதமாக இல்லங்களுக்கே சென்று, அனைவருக்கும் நலவாழ்வு என்கிற உயரிய நோக்கத்தினைச் செயல்படுத்தும் வகையில், "மக்களைத் தேடி மருத்துவம்" என்ற புதிய திட்டத்தைச் செயல்படுத்துவது.

❖ தமிழ்நாட்டில் சாலைப் பாதுகாப்பையும், சாலை விபத்தில் ஒருவர்கூட உயிரிழக்கக் கூடாது என்பதையும் உறுதி செய்யக்கூடிய உயரிய நோக்கத்தோடு "இன்னுயிர் காப்போம்–நம்மைக் காக்கும்–48" என்ற உயிர் காக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவது;

❖ தமிழ்நாட்டில் உள்ள சிற்றூர்கள் அனைத்தும் அவற்றின் முழு ஆற்றலுக்கேற்ப வளர்ச்சியடைந்து செழிக்க வேண்டும் என்கின்ற நோக்கில் 'கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தை' அறிமுகப்படுத்தியது;

❖ மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் தனித்துவத் திறன்களை மேம்படுத்தி அவர்களுக்கு ஒரு சிறப்பான எதிர்காலத்தை ஏற்படுத்தித் தரக்கூடிய எனது கனவுத் திட்டமான 'நான் முதல்வன்' என்ற உன்னதமான திட்டத்தைச் செயல்படுத்துவது;

❖ அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு அனைத்துத் தொழிற்கல்வி இடஒதுக்கீட்டுப் பிரிவுகளில், ஏழரை விழுக்காடு இடங்கள் முன்னுரிமையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்தல்.

❖ திருநங்கைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு அரசுப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை.

❖ கொரோனாவால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு ரூ.5 இலட்சம் வைப்பு நிதி, கல்வி, விடுதிக் கட்டணங்கள் அரசே ஏற்பு.

❖ கொரோனாவால் தந்தை அல்லது தாயை இழந்த குழந்தைகளோடு இருக்கும் தந்தை அல்லது தாய்க்கு ரூ.3 இலட்சம் நிவாரணத் தொகை.

❖ தமிழ்நாட்டில் உள்ள முகாம்வாழ் இலங்கைத் தமிழர் நலனைப் பேணிட, வீடு மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு, ரூ.317.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ 'தமிழ்நாடு ஆதிதிராவிடர் பழங்குடியினர் நல ஆணையம்' என்கிற புதிய அமைப்பு ஒன்றைத் தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் வகையில் உருவாக்கச் சட்டம் இயற்றப்பட்டு, ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.

❖ பத்திரிகையாளர் மற்றும் ஊடகத் துறையினர் "முன்களப் பணியாளர்"களாக அறிவிப்பு.

❖ அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகை மற்றும் ஊடகத்துறையினருக்கான சிறப்பு ஊக்கத்தொகை ரூ.5,000 ஆக உயர்வு.

❖ கொரோனா தொற்றால் மரணமடைந்த அங்கீகரிக்கப்பட்ட ஊடகத் துறையினர்களுக்கான இழப்பீட்டுத் தொகை ரூ.10 இலட்சமாக உயர்வு.

சட்டமன்றத் தேர்தலின்போது மக்களுக்கு அளித்த 505 வாக்குறுதிகளில், 208 வாக்குறுதிகளை நிறைவேற்ற பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

2011–2012 முதல் 2020–2021 வரை கடந்த பத்தாண்டுகளில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110இன்கீழ், கடந்த ஆட்சியாளர்களால், வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் 537 அறிவிப்புகள் நிலுவையில் உள்ளன.

செயல்படுத்தப்படாமல் நிலுவையிலுள்ள 537 அறிவிப்புகளில் ரூ.5,470 கோடி திட்ட மதிப்பீட்டிலான 26 அறிவிப்புகள், அவற்றைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் எவற்றையும் ஆராயாமல், ஆய்வு மேற்கொள்ளாமல், 110 விதியின்கீழ் அறிவிக்கப்பட்டு, செயல்படுத்த இயலாதவை எனக் கைவிடப்பட்டுள்ளது. இதில் பெரும்பாலான, அதாவது 19 அறிவிப்புகள் 2011ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை உள்ள ஆட்சிக் காலத்தில் அறிவிக்கப்பட்டவை ஆகும்.

மேற்கூறிய 537 அறிவிப்புகளில், ரூ.9,741 கோடி திட்ட மதிப்பிலான 20 அறிவிப்புகளுக்கு, கடந்த ஆட்சிக்காலத்தில் அதற்குரிய அரசாணைகள் எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

537 அறிவிப்புகளில் 491 அறிவிப்புகளுக்கு மட்டுமே அரசாணையும் அனுமதிகளும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில், ரூ.76,619 கோடி மதிப்பீட்டிலான 143 அறிவிப்புகளுக்கு அதற்குரிய அரசாணையும் அனுமதியும் வழங்கப்பட்டு, நிதி எதுவும் விடுவிக்கப்படாமலும், பணிகள் துவங்கப்படாமலும் உள்ளன. அவற்றில் சிலவற்றை இந்த மாமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

❖ ரூ.2,160 கோடி செலவில் 311 ஏக்கரில் சென்னை திருமழிசையில் துணைக்கோள் நகரம்.

❖ மதுரை விமான நிலையத்துக்கு அருகில் 586.86 ஏக்கரில் ஒருங்கிணைந்த துணைக்கோள் நகரம்.

❖ ரேஷன் கார்டு வைத்திருப்பவர்களுக்கு இலவச செல்போன் வழங்கப்படும், பொது இடங்களில் இலவச வை–பை, ரேஷன் கார்டு வைத்திருப்பவர்கள் கோ–ஆப்டெக்சில் பொங்கல் பண்டிகைக்குத் துணி எடுக்க ரூ.500 மதிப்புள்ள கூப்பன் வழங்கப்படும்.

❖ அம்பேத்கர் அறக்கட்டளை நிறுவப்படும், அம்மா வங்கி அட்டை அனைவருக்கும் வழங்கப்படும் என்று 2016ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் அ.தி.மு.க. கொடுத்த பல்வேறு வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

❖ மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் பேணும் வகையில் வைட்டமின் 'டி' மற்றும் இரும்புச் சத்துகள் செறிவூட்டப்பட்ட ஆவின் பால் 1 லிட்டர் ரூ.25க்கு எனக் குறைந்த விலையில் வழங்கப்படும் என்ற வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை.

❖ இதேபோல, மீனம்பாக்கம்–செங்கல்பட்டு இடையே உயர்நிலை நெடுஞ்சாலை மேம்பாலம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பும் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

❖ உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2 வருடத்துக்கு ஒரு முறை நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், கடந்த 5 ஆண்டுகளில் ஒரு முறை மட்டுமே உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடந்திருக்கிறது.

கடந்த ஆட்சியாளர்களால் 2011ஆம் ஆண்டு அவர்களது தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் நிறைவேறாமல் இருப்பவைகளைத் தங்களின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

❖ சென்னை முதல் கன்னியாகுமரி வரை கடலோரச் சாலைத் திட்டம்.

❖ தென் தமிழகத்தில் 'ஏரோ பார்க்'.

❖ ஆன்லைன் டிரேடிங் தடுக்கப்படும்.

❖ மொபைல் மின்னணு ஆளுமைத் திட்டம்.

❖ தடையில்லா மின்சாரத்துக்குச் சிறப்புத் திட்டம்.

❖ இலவச டிடிஹெச் சேவைகள் விரைவாக வழங்கப்படும்.

❖ வீடுகளில் திருட்டு, கொள்ளைகளைத் தடுக்க இளைஞர் சிறப்புப் படைகள்.

❖ பள்ளிக் குழந்தைகளைப் பாதுகாக்க மாணவர் சிறப்புப் படை.

❖ மீனவர் பாதுகாப்புப் படை.

❖ சிங்கப்பூரில் உள்ளதுபோல சென்னை, மதுரை, திருச்சி, கோவையில் மோனோ இரயில் திட்டம் செயல்படுத்தப்படும்.

இதை ஒப்பிடும்போது, 10 ஆண்டுக் காலம் ஆட்சியில் இருந்த அ.இ.அ.தி.மு.க. அரசு தனது 2011ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் 186 வாக்குறுதிகளும் 2016ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் 321 வாக்குறுதிகளும் என மொத்தம் 507 வாக்குறுதிகளை அளித்தது. அ.தி.மு.க. ஆட்சி 10 ஆண்டுக் காலம் ஆட்சியில் இருந்தும், இந்த 507 வாக்குறுதிகளில், 269 வாக்குறுதிகளுக்கு மட்டுமே அரசாணை வெளியிட்டு நிறைவேற்றியிருக்கிறார்கள்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, இந்த அரசின் முதல் ஆண்டிலேயே 505 வாக்குறுதிகளில், 208 வாக்குறுதிகளுக்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, அவற்றில் 171 வாக்குறுதிகளுக்கு அரசாணைகளும் வழங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

கடந்த ஆட்சியாளர்களால் சட்டப்பேரவை விதி எண்.110இன்கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் அனைத்தும் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பிறகு அறிவிக்கப்பட்டதால், கிட்டத்தட்ட அனைத்து நிதி ஒதுக்கீடு தேவைப்படும் அறிவிப்புகளுக்கும், தொடர்புடையத் துறைகளின் மானியக் கோரிக்கைகளில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த அறிவிப்புகள் அனைத்துமே இன்னமும் வெற்று அறிவிப்புகளாக காகிதத்திலேயே உள்ளன. மேலும், அவை விளம்பர நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டவை என்பதுதான் நிதர்சனம்.

நான் தொடர்ந்து ஒன்றை வலியுறுத்திச் சொல்லி வருகிறேன். இந்த அவையிலும் பலமுறை நான் பதிவு செய்திருக்கிறேன். இது எனது அரசு அல்ல. நமது அரசு. அந்தக் கருத்தினைப் பின்பற்றி இந்த அவையில் நமது அரசின் நிலைப்பாட்டை விளக்கிட நான் விரும்புகிறேன்.

தேர்தல் வாக்குறுதிகளைத் தொடர்ந்து நிறைவேற்றி வரும் வேளையில் "பத்து மாதக் குழந்தையிடம் பத்தாம் வகுப்பு மதிப்பெண் என்ன" என்று கேட்பதுபோல் இருக்கிறது. எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நான் சொல்ல விரும்புவது, "இந்தக் குழந்தை பத்தாம் வகுப்பில் முதல் மதிப்பெண் பெறுவது மட்டுமல்ல பட்டப் படிப்பிலும் பதக்கம் வெல்லும்".

நீங்கள் சுட்டிக்காட்டும் ஒவ்வொரு முறையும் எங்கள் மீது அதிக நம்பிக்கை வைத்து நீங்கள் வைக்கக்கூடிய நினைவூட்டல் என்றே நாங்கள் எடுத்துக்கொள்கிறோம்.

மேலும், ஒன்றை இந்த அவையில் மீண்டும் பதிவு செய்ய விரும்புகிறேன். நமது அரசு சொன்னதை மட்டுமல்ல, சொன்னதற்கு மேலும் செய்து காட்டும் அரசு என்பதை மக்கள் நன்கு அறிவார்கள்.

இறுதியாக ஒரு கருத்தை இந்த அவையில் பதிவிட விரும்புகிறேன். எதிர்க்கட்சிகள் கடந்த 10 ஆண்டு காலத்தில் நிறைவேற்றாமல் போன அறிவிப்புகளில் மக்களுக்கு மிகவும் பயன்படும் தேவைகள் ஏதேனும் கண்டறியப்பட்டால், "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு" என்ற பேரறிஞர் அண்ணாவின் வாக்கிற்கேற்ப, மக்கள் நலனை மட்டுமே முன்னிறுத்தி அவற்றையும் நாங்கள் நிறைவேற்றுவோம் என்ற உறுதியை அளித்து நன்றி கூறி அமைகிறேன்.

பாலியல் வழக்கின் தண்டனை, தவறு செய்வோர்களுக்கு ஒரு பாடமாக அமையும்...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 23.03.2022 அன்று
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
நேரமில்லாத நேரத்தில், சட்டம்–ஒழுங்குப் பிரச்சினை
குறித்த கேள்விக்கு, அளித்த பதில்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேரமில்லா நேரத்தைப் பயன்படுத்தி, சில பிரச்சினைகளை, சட்டம்–ஒழுங்குப் பிரச்சினைகள் குறித்து சில செய்திகளை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதற்குரிய விளக்கத்தை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு பிரச்சினையை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார். வேலூர் மாவட்டம், சத்துவாச்சேரி இந்திரா நகரைச் சேர்ந்த இராமன் என்பவர் கடந்த 17.03.2022 அன்று சத்துவாச்சேரி காவல் நிலையத்தில் அளித்த புகாரில் வ.உ.சி. நகரைச் சேர்ந்த பாலா (எ) பரத், மணிகண்டன் உள்ளிட்ட சிலர் தன்னைக் குடிபோதையில் தாக்கியதாகவும், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவும் கோரியுள்ளார். இப்புகார் தொடர்பாகக் காவல்துறையினர், பரத், மணிகண்டன் உள்ளிட்ட மூவரைப் பிடித்து விசாரணை மேற்கொண்டபோது, 17.03.2022 அன்று அதிகாலை கேலக்சி திரையரங்கம் அருகே ஒரு ஆண் மற்றும் பெண் ஆகியோர் சி.எம்.சி. மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென ஆட்டோவில் ஏறியபோது, அவர்களைத் தனியிடத்திற்கு அழைத்துச்சென்று பரத், சந்தோஷ்,மணிகண்டன் உள்ளிட்ட ஐவர் அப்பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்ததாகவும், அவருடன் இருந்த ஆண் நபரை ஏ.டி.எம்.க்கு அழைத்துச்சென்று, சுமார் ரூ.40 ஆயிரம் பறித்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும், விசாரணையில் பாதிக்கப்பட்ட பெண் சி.எம்.சி. மருத்துவமனையில் மருத்துவராகப் பணிபுரியும் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த பெண் என்பதும், ஆண் நபர் அதே மருத்துவமனையில் பணிபுரியும் நாக்பூரைச் சேர்ந்த பிரனீத் ராஜ் கஷ்யப் என்பதும் தெரியவந்துள்ளது. பாதிக்கப்பட்ட பெண் அவரது சொந்த மாநிலத்திற்குச் சென்றுள்ள நிலையில், 22.03.2022 அன்று இணையவழி வாயிலாக அளித்த புகாரில், வேலூர் வடக்கு காவல்நிலையத்தில் குற்ற எண். 127/2022, இ.த.ச. பிரிவுகள் 147, 148, 342, 365, 368, 376 (D), 376 (E), 395, 397, 506 (ii) உடன் இணைந்த பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, பரத் உள்ளிட்ட நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அடுத்து, இன்னொன்றையும் சொன்னார்கள். அதாவது, ஓய்வுபெற்ற நீதியரசர் காரில் சென்றுகொண்டிருந்தபோது நடந்த ஒரு சம்பவத்தையும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். 4ஆவது காவல் ஆணையத்தின் தலைவரும், ஓய்வுபெற்ற உயர் நீதிபதியுமான திரு. சி.டி.செல்வம் அவர்கள் 22.03.2022 அன்று தனது காரில் தனிப் பாதுகாவலர், தலைமைக் காவலர் திரு. சக்திவேல் என்பவரோடு அசோக் நகர், நூறடிச் சாலையில் உள்ள கே.கே.நகர் காவல்நிலையம் அருகே சென்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது, அவருடைய வாகனம் அப்பகுதியிலுள்ள போக்குவரத்து சிக்னல் அருகே நின்றபோது இருசக்கர வாகனத்தில் சென்ற அடையாளம் தெரியாத 3 நபர்கள், ஆணையத் தலைவரின் வாகனத்தின்முன்பு தங்களது வாகனத்தை நிறுத்தியிருக்கிறார்கள். உடனே, தனிப் பாதுகாவலர் திரு. சக்திவேல் அவர்கள் வாகனத்தை நகர்த்தக் கூறியிருக்கிறார். இதனையடுத்து, அந்த நபர்கள் தனிப் பாதுகாவலரிடம் வாக்குவாதத்திலே ஈடுபட்டு, அவர்களுக்குள் ஒருவர் மறைத்து வைத்திருந்த கத்தியால் அவரைத் தாக்கிவிட்டு, இருசக்கர வாகனத்தில் தப்பிச் சென்றிருக்கிறார்கள். இதில் காயமுற்ற தனிப் பாதுகாவலர் திரு. சக்திவேல், வடபழனியில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வருகிறார்; நலமுடன் இருக்கிறார்.

இச்சம்பவம் குறித்து கே.கே. நகர் காவல் நிலையத்தில் குற்ற எண் 127/2022, இ.த.ச. பிரிவுகள் 341, 294–பி, 324, 307, 506 (ii) அதன்கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விரைவில் குற்றவாளிகள் கைது செய்யப்படுவார்கள். இனி இதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சென்னை மாநகர ஆணையருக்கு நான் அறிவுறுத்தியிருக்கிறேன். இதுசம்பந்தமாக, நானே ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. பி.டி. செல்வம் அவர்களிடத்திலே தொலைப்பேசியிலே தொடர்புகொண்டு, விவரங்களை எல்லாம் நானும் கேட்டிருக்கிறேன்.

அடுத்து, விருதுநகரைப் பற்றி ஒரு பிரச்சினையைச் சொல்லியிருக்கிறார். விருதுநகரிலே 22 வயது பெண்ணிடமிருந்து

பாலியல் **வன்முறை புகார் வந்தவுடன், வழக்குப் பதிவு செய்யப்பட்டு, 24 மணி நேரத்திற்குள் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் 4 பேர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். மீதியுள்ள 4 பேர் சிறார் நீதிமன்றத்தின் கூர்நோக்கு இல்லத்திலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.** இந்த வழக்கில் குற்றவாளிகள் விரைந்து தண்டிக்கப்பட வேண்டும் என்பதற்காக, தற்போது வழக்கு, மாநிலக் குற்றப் புலனாய்வு பிரிவு, சி.பி.சி.ஐ.டி. பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளது. சி.பி.சி.ஐ.டி. கண்காணிப்பாளர் திருமதி முத்தரசி அவர்கள் சிறப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 60 நாட்களுக்குள் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, இந்த வழக்கு தனி நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்படும். விரைந்து குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத்தரப்படும். அதுவும் அதிகபட்ச தண்டனை பெறப்படும் என்பதை ஆணித்தரமாக, உறுதிபட இந்த மன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பாலியல் வன்முறை வழக்கினை ஒரு ‘‘மாடல் வழக்காக’’ நேரடியாகக் கண்காணிக்குமாறு காவல்துறைத் தலைவர், D.G.P. அவர்களுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன். நிச்சயம், பொள்ளாச்சி பாலியல் வழக்குபோல் இல்லாமல், வண்ணாரப்பேட்டை 13 வயது சிறுமி பாலியல் வன்முறை வழக்குபோல் இல்லாமல், இந்த வழக்கு நிச்சயம் முறையாக நடத்தப்படும்.

இந்த அரசு எப்படி தண்டனை வாங்கிக் கொடுக்கிறது; இந்த மாநிலத்திற்காக மட்டுமல்ல; ஒட்டுமொத்த இந்தியாவிற்கே இந்த வழக்கு ‘‘விரைந்து தண்டனை பெற்றுத் தருவதில்’’ ஒரு முன்னணி வழக்காக மட்டுமில்லாமல், இதுபோன்று தவறு செய்யக்கூடியவர்களுக்கு ஒரு பாடமாகவும் இருக்கப்போகிறது. பொறுத்திருந்து பாருங்கள். இதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், இங்கே இருக்கக்கூடிய எல்லா உறுப்பினர்களுக்கும் நான் இதை உறுதியோடு தெரிவித்து, அமைகிறேன்.

சென்னை, தேனாம்பேட்டையில்

மழைநீர் வடிகால் பணிகள் ஆய்வு...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 23.03.2022 அன்று, கடந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழையின்போது பெருநகரச் சென்னை மாநகராட்சியின் தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்டப் பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புகளைச் சீரமைத்திட ரூ.4.51 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் மழைநீர் வடிகால் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழையின்போது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பெருநகரச் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளை நேரடியாகச் சென்று ஆய்வு செய்து மீட்புப் பணிகளைத் துரிதப்படுத்தி, போர்க்கால அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டு, பணிகளும் விரைவாக நடைபெற்றன.

வரும் பருவமழைக் காலங்களில் மழை வெள்ளப் பாதிப்புகள் ஏற்படாத வகையில் அதிக அளவில் நீர் தேங்கும் இடங்களில் மழைநீர் வடிகால் பணிகளை மேற்கொள்ளச் சிங்காரச் சென்னை 2.0 திட்டம், உலக வங்கி நிதி மற்றும் கொசஸ்தலையாறு வடிநிலப்பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் திட்டம் ஆகியவற்றின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்து திட்டப் பணிகளை உடனடியாகத் தொடங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதனடிப்படையில், தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட செனடாப் சாலையில் ரூ.2.14 கோடி மதிப்பீட்டில் 870 மீட்டர் நீளத்திற்கு நடைபெற்றுவரும் மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் சி.வி.ராமன் சாலையில் ரூ.2.37 கோடி மதிப்பீட்டில் 610 மீட்டர் நீளத்திற்கு நடைபெற்றுவரும் மழைநீர் வடிகால் பணிகள்;

என மொத்தம் ரூ.4.51 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் மழைநீர் வடிகால் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, சி.வி.ராமன் சாலை முதல் டி.டி.கே. சாலை வரை நடந்தே சென்று அப்பகுதியில் நடைபெற்றுவரும் மழைநீர் வடிகால் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்ததோடு, வருகின்ற பருவமழைக் காலத்தில் வெள்ளப் பாதிப்புகள் ஏற்படாத வண்ணம் சென்னையில் நடைபெற்றுவரும் மழைநீர் வடிகால் பணிகளை விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

நல்ல திட்டங்கள் எதுவாக இருந்தாலும் அதை நிறைவேற்றுகின்ற ஆட்சி இந்த ஆட்சி...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 23.03.2022 அன்று, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்களது உரையினிடையே அளித்த பதிலுரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு, தாலிக்குத் தங்கம் வழங்கக்கூடிய திட்டத்தை நிறுத்தியதாக ஒரு கருத்தை நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே பதிவு செய்திருக்கின்றார். அ.தி.மு.க. தொடங்கிய திட்டங்களை, ஏதோ திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்ததும் நிறுத்தி விடுவதைப்போல ஒரு போலித் தோற்றத்தை இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தனது உரையிலே உருவாக்கியிருக்கிறார்கள்.

அரசியல் காழ்ப்புணர்ச்சிக் காரணமாக, முந்தைய உங்களுடைய அரசு திட்டங்களை முடக்குவதற்குப் பெயர் போன அரசு; அது உங்களுடைய அரசு. இது கடந்த காலங்களில், பல நேரங்களில் நிரூபணமாகியிருக்கக்கூடிய உண்மை. ஊடகத்தினர், பொதுமக்கள் என அனைவரும் இதை நன்கு அறிந்து வைத்திருக்கிறார்கள். ஆகவே, தலைவர் கலைஞர் அவர்களால், தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் மாபெரும் சட்டமன்ற–தலைமைச் செயலக வளாகம் கட்டப்பட்டு, அன்றைக்குப் பிரதமராக இருந்த திரு. மன்மோகன் சிங் அவர்களால் அது திறந்து வைக்கப்பட்டது. அந்த இடத்தில்தான், சட்டமன்றமும் நடந்திருக்கிறது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டதற்குப்பிறகு, சட்டமன்றம் நடைபெற்ற அந்த இடத்தை மருத்துவமனையாக மாற்றியது யார்?

பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நூற்றாண்டு விழா நினைவாக, ரூ.170 கோடி மதிப்பீட்டில், 8 மாடிகள் கொண்ட அளவில் ஒரு பெரிய மாளிகையை, அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தை தி.மு.க. ஆட்சி கட்டியது. அந்த மாபெரும் அண்ணா நூற்றாண்டு நூலகத்தை மாற்ற நினைத்ததும், அதைப் பாழடிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டதும் யார்? அங்கிருந்த அண்ணாவினுடைய சிலைக்குக்கீழே கல்வெட்டு இருக்கும். அந்தக் கல்வெட்டில் முதலமைச்சர் கலைஞர் அவர்களது பெயர் இருந்தது. அந்தப் பெயரையே எடுத்த ஆட்சி எது?

கலைஞர் காப்பீட்டுத் திட்டத்திலே, கலைஞர் வீடு வழங்கக்கூடிய திட்டத்திலே இருந்த கலைஞர் பெயரை நீக்கியது யார்? செம்மொழிப் பூங்காவிலே, கலைஞருடைய பெயரை மறைப்பதற்காகச் செடி கொடிகளைக் கொண்டுபோய் வைத்து, அதை முழுமையாக மூடி மறைத்தது யார்? கடற்கரைப் பூங்காவில் இருந்த கலைஞர் பெயரை எடுத்தது யார்?

இராணி மேரிக் கல்லூரியை இடித்துவிட்டு, அங்கிருந்த கல்லூரியை அப்புறப்படுத்த நினைத்தது உங்களுடைய ஆட்சி. அதை இடிக்கக்கூடாது, அந்தக் கல்லூரி பழமையான கல்லூரி, பல நூற்றாண்டுகளை கண்டிருக்கக்கூடிய வரலாற்றுச் சிறப்புக்குரிய கல்லூரி என்று நாங்கள் அன்றைக்குத் தி.மு.க. சார்பில் குரல் கொடுத்தோம். அதற்காகச் சிறைபிடிக்கப்பட்டு, சிறைக்குப் போய் பல நாட்கள் இருந்து வந்திருக்கிறோம். அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. ஆனால், நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப்பிறகு, அந்தக் கல்லூரி வளாகத்தில் ஒரு கட்டடம் கட்டப்பட்டு, கலைஞர் மாளிகை என்று பெயர் சூட்டப்பட்டது. நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, அந்தக் கலைஞர் மாளிகையில் இருந்த கலைஞர் பெயரை நீக்கியதுதான் உங்களுடைய சாதனை.

ஆகவே, கலைஞர் கொண்டுவந்தார் என்பதற்காகவே சமத்துவபுரங்கள் எல்லாம் பழுதுபார்க்கப்படாமல், அவற்றைப் பேணிப் பாதுகாக்க முடியாத அளவிற்கு, அதைப் பாழடித்தது யார்? உழவர் சந்தைகளை மேலும், மேலும் வலுப்படுத்தக்கூடாது என்று அதை இடித்து மூடியது யார்? தூத்துக்குடி மாவட்டம், உடன்குடியில் 2009ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட உடன்குடி பவர் கார்ப்பரேஷன் லிமிடெட்–ஐ முடக்கியது யார்? நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சி திட்டம், வருமுன் காப்போம் திட்டம் போன்ற இந்தத் திட்டங்களையெல்லாம் உங்கள் ஆட்சியில் முடக்கினீர்கள். அதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

இன்னொன்று, முக்கியமான விஷயம்; இங்கே மதுரவாயல்–சென்னை துறைமுகம் உயர்மட்டச் சாலைத் திட்டம் குறித்தும் பேசினார்கள். அந்தத் திட்டத்தை முடக்கியது யார்? சமச்சீர்க் கல்விப் பாடப்புத்தகத்தில் கலைஞர் எழுதிய செம்மொழி வாழ்த்துப் பாடலையும், 7ஆம் வகுப்புப் பாடத்திட்டத்திலே நாடகக் கலை குறித்த பாடத்தில் கலைஞர் அவர்களது பெயரையும் ஸ்டிக்கரை வைத்து மறைத்தது யார்?

இப்படி வரிசையாக என்னால் சொல்ல முடியும். அதற்காக, பழிவாங்குவதற்காக நாங்கள் செய்கிறோம் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். நல்ல திட்டங்கள் எதுவாக இருந்தாலும், முறையான திட்டங்கள் எதுவாக இருந்தாலும், அதை நிறைவேற்றுகிற ஆட்சிதான், கலைஞர் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கக்கூடிய, எங்கள் தலைமையில் நடைபெறக்கூடிய இந்த ஆட்சி என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

சென்னை, சென்ட்ரலில் ரூ.34.22 கோடியில் அழகுப்படுத்தப்பட்ட நில மேம்பாட்டு வசதிகள் மற்றும் சுரங்க நடைபாதை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 30.03.2022 அன்று சென்னை சென்ட்ரல் பகுதியில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் நிதியுதவியுடன், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் உலகத் தரம் வாய்ந்த பன்முகப் போக்குவரத்து ஒருங்கிணைப்புத் திட்டமான மத்திய சதுக்கத் திட்டத்தின்கீழ், ரூ.34.22 கோடி மதிப்பீட்டில் அழகுபடுத்தப்பட்ட நில மேம்பாட்டு வசதிகள் மற்றும் சுரங்க நடைபாதையைப் பொதுமக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைத்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட மேம்பாட்டுப் பணிகளின் சிறப்பம்சங்கள்:–

அழகுபடுத்தப்பட்ட நில மேம்பாட்டு வசதிகள்

திறந்த வெளிப்பகுதி, நடந்து செல்பவர்களுக்குப் பாதுகாப்பாகவும், வசதியாகவும் மேம்படுத்தப்பட்டு மரங்கள், புல்வெளி, அழகிய தாவரங்களுடன் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

மேலும், வண்ண விளக்குகளுடன் கூடிய நீரூற்றுகள், நடைபாதையில் டென்சைல் கானோபி, பர்கோலாஸ் மற்றும் கிரானைட் இருக்கைகள், நடைபாதையை ஒட்டி வண்ண விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

வாகனங்கள் எளிதில் செல்லும் வகையில் பாதைகளும், கிரானைட் கற்கள் பதிக்கப்பட்ட நடைபாதைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மேம்பாட்டுப் பணிகள் சுமார் ரூ. 12.49 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுரங்க நடைபாதை

சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் முன்பகுதியில் பல்லவன் சாலை, பூந்தமல்லி நெடுஞ்சாலை சந்திப்பிற்குக் குறுக்கே பாதசாரிகள் பாதுகாப்பாகச் செல்லும் வகையில் சுரங்க நடைபாதை அமைக்கப்பட்டு, பொதுமக்கள் எளிதாகப் பயன்படுத்தும் வகையில் அனைத்து வகையான பயனாளிகளும் பயன்பெறுமாறு மின்தூக்கிகளும், நகரும் படிக்கட்டுகளும் நிறுவப்பட்டுள்ளன. ஏற்கெனவே பூந்தமல்லி நெடுஞ்சாலையின் குறுக்கே அமைந்துள்ள சுரங்க நடைபாதையுடன் இவை ஒருங்கிணைக்கப்பட்டு, பழைய சுரங்கப்பாதையையும் மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும், தேவையான மின்விளக்குகள் மற்றும் ஒளிரும் வழிகாட்டிகளும் அமைக்கப்பட்டுள்ளன. இந்தச் சுரங்க நடைபாதை சுமார் ரூ.21.73 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநிலச் சுகாதாரப் பேரவை தொடக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 30.03.2022 அன்று, சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில், தமிழ்நாடு சுகாதார சீரமைப்புத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு மாநில சுகாதாரப் பேரவையைத் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு மக்களின் சுகாதாரத் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு உலக வங்கியின் துணையுடன் தமிழ்நாடு சுகாதாரச் சீரமைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் ஓர் அம்சமாக, சுகாதாரக் கொள்கை வகுப்பதில் குடிமக்களின் ஈடுபாட்டை மேலும் மேம்படுத்தும் நோக்கில் மாவட்ட மற்றும் மாநில அளவில் சுகாதாரப் பேரவை கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

இப்பேரவையில் ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில், அம்மாவட்ட ஆட்சியர் தலைமையில் சுகாதாரத் துறை, பள்ளிக்கல்வித் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை ஆகிய அரசுத் துறைகளைச் சார்ந்த அலுவலர்கள், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், ஊராட்சி ஒன்றியத் தலைவர், அரசு சாரா அமைப்புகள் (NGO), பொதுச் சமூக அமைப்புகள், பொதுமக்கள், தனியார்த் துறையினர் ஆகியோர் கலந்து கொண்டு, பொதுமக்களின் ஆரோக்கிய வாழ்விற்கான தேவைகளை நேரடியாக மக்களிடமே கேட்டறிந்து, அக்கோரிக்கைகளுக்குத் தீர்வுகாணும் வகைகளில் சுகாதார அமைப்பை வலுப்படுத்துவதற்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன, மேலும், மாற்றுத்திறனாளிகள், பழங்குடியினர், பெண்கள், இளைஞர்கள் போன்றோருடைய தனிப்பட்ட தேவைகள் முன்னிலைபடுத்தித் தீர்வு காணப்படுகிறது,

இம்முன்னோடி திட்டத்தில் இதுநாள்வரை சேலம், சிவகங்கை, புதுக்கோட்டை, கடலூர், அரியலூர், தருமபுரி, இராமநாதபுரம், தேனி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருவண்ணாமலை, தென்காசி, நீலகிரி, விருதுநகர் ஆகிய 14 மாவட்டங்களில் நடைபெற்ற மாவட்ட சுகாதார மக்கள் சபையின் தீர்மானங்கள்,மாநிலச்சுகாதாரப்பேரவையில்சமர்ப்பிக்கப்பட்டுவிவாதிக்கப்பட்டு, மருத்துவக் கட்டமைப்பு வலுப்படுத்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இத்தகைய மக்கள் சபைக் கூட்டங்கள் மூலம், சுகாதார அமைப்பில் வெளிப்படைத் தன்மையும், பொறுப்புணர்வும் மேம்படும், சுகாதாரம் மற்றும் மருத்துவம் தொடர்பான கொள்கை முடிவு எடுப்பதில் சமுதாயத்தின் ஈடுபாடும், பங்கேற்பும் அதிகரிக்கும்.

கர்ப்பிணி தாய்மார்களுக்கான ஆரம்பநிலை கரு வளர்ச்சி குறைபாடுகளைக் கண்டறிந்திடப் பரிசோதனைத் திட்டம்

இப்பேரவையைத் தொடங்கி வைக்கத் தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனைக்கு வருகை புரிந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கர்ப்பிணி தாய்மார்களுக்கான ஆரம்பநிலை கரு வளர்ச்சி குறைபாடுகளைக் கண்டறிந்திட ஒரு கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள மருத்துவக் கருவிகளின் சேவையைத் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசு கர்ப்பிணித் தாய்மார்களுக்கு, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின்கீழ் நிதி உதவி, பேறுசார் மற்றும் குழந்தை நல ஒப்புயர்வு மையங்கள், சீமாங்க் மையங்கள் போன்ற பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இதன் தொடர்ச்சியாக, இந்தியாவிலேயே முதல்முறையாக மாநில மருத்துவமனையில் அதாவது அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில், வெளிநாட்டிலிருந்து பிரத்யேகமாக Autodelfia Maternal Analyzer என்ற மருத்துவக் கருவி தருவிக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது.

இம்மருத்துவமனையில் சிறப்பாகச் செயல்பட்டு வரும் அதிநவீன முழு உடற்பரிசோதனை மையத்தில், சிறப்புத் தனித் தொகுப்பாக, ஆரம்பநிலை கரு பரிசோதனைக்கு 1,000 ரூபாயும், இப்பரிசோதனையுடன் கர்ப்பிணித் தாய்க்குக் கூடுதலாகப் பரிசோதனைகள் மேற்கொள்ள 2,000 ரூபாயும் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப கர்ப்ப காலத்தில் (11–14 வாரங்கள்) இந்தப் பரிசோதனை செய்வதன் மூலமாகக் கரு மரபணு சார்ந்த பல பிரச்சினைகள் கண்டறியப்பட்டு, உடல் உறுப்பு ஊனத்துடன் குழந்தை வளர்வது தவிர்க்கப்படும்.

கவிச்சக்கரவர்த்தி கம்பர்

கவிபாடும் திறத்தால் புவி மக்கள் நெஞ்சங்களைக் கொள்ளை கொண்ட கவிஞர் கம்பர்!

‘கல்வியில் பெரியவர்’ என்றும் ‘கவிச் சக்கரவர்த்தி என்றும்’ போற்றப்படும் கம்பர், தமிழில் மட்டுமின்றி வடமொழியாம் சமசுகிருதத்திலும் ஆழ்ந்த புலமை பெற்றவர். மகாகவி பாரதியால் ‘‘யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவனைப் போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை’’ எனப் பெரிதும் புகழப்பெறுமிவர், ‘கம்பராமாயணம்’ படைத்து வானளாவிய பெருமை பெற்றவர்!

‘சடகோபர் அந்தாதி’, ‘சரசுவதி அந்தாதி’, ‘திருக்கை வழக்கம்’, ‘ஏரெழுபது’, ‘மும்மணிக்கோவை’ ஆகிய நூல்களையும் படைத்தளித்த இக்கவிஞர் பெருமானைப் போற்றுகின்ற வகையில் 24.03.2022 அன்று, அண்ணா சதுக்கத்தில் அமைந்துள்ள கவிச்சக்கரவர்த்தி கம்பர் அவர்களின் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்ரமணியன் அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

அரசு மைய அச்சகத்திற்கு புதிய சுமையூர்தி

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் 23.03.2022 அன்று சென்னை, தலைமைச்செயலகத்தில், சென்னை அரசு மைய அச்சகப் பயன்பாட்டிற்காக ரூ.18 இலட்சத்தில் வாங்கப்பட்டுள்ளப் புதிய சுமையூர்தியின் சாவியை ஓட்டுநரிடம் வழங்கினார். மேலும், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் பணிபுரிந்து பணிக்காலத்திலேயே இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவிகளுக்கான பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

நீர் மேலாண்மை சாதனை

நீர் மேலாண்மையில் சங்ககாலம் முதலே உலகிற்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர்கள் தமிழர்கள்.

தமிழர்கள் நீரியல் நாகரீகத்தின் முன்னோடிகள் என்பதை ஜெர்மானிய அறிஞர் விட்டோகபரின் ஆய்வு உறுதி செய்கிறது. ஏரிகளுக்கு மதகு அமைப்பதை 2,400 ஆண்டுகளுக்கு முன்பே வடிவமைத்தவர்கள் தமிழர்கள்தான். ஆனால், ஐரோப்பாவில் 19ஆம் நூற்றாண்டில்தான் மதகுகள் அமைக்கப்பட்டன என்கிறார் ஆய்வறிஞர் பார்க்கர்.

ஏரிக்கரைகளை ஈரமான களிமண் கலவையில் அமைப்பது அவசியம் என்ற ஆங்கிலேயப் பொறியாளர்களின் கருத்துக்கு மாறாக பண்டைய தமிழர்கள் பல்லாயிரக்கணக்கான ஏரிகளை மண் கரை கொண்டு கட்டியுள்ளனர் என்கிறார் நீரியல் பொறியாளர் சர் ஆர்தர் காட்டன்.

இதற்கு எல்லாம் சாட்சியாகச் சோழர்கள் காலத்தில் உருவாக்கப்பட்ட கல்லணை, வீராணம், மதுராந்தகம் ஏரிகள். பல்லவர்கள் காலத்தில் உருவாக்கப்பட்ட செங்குன்றம், செம்பரம்பாக்கம் ஏரி மற்றும் 1871க்கு முன்பு உருவான சோழவரம் ஏரி ஆகியவை நமது நீர்மேலாண்மைத் திறனின் வரலாற்றுச் சான்றுகள்.

பிரித்தானியர் காலம்

கி.பி. 18ஆம் நூற்றாண்டு வரை 'ஊரார்' என்ற கிராமசபைதான் ஏரியின் நிருவாகத்தை ஏற்று நடத்தியது. இந்த மரபை உடைத்தவர்கள் ஆங்கிலேயர்கள். நீர்மேலாண்மையைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவந்தால் மட்டுமே மக்களைத் தங்கள் கட்டுக்குள் கொண்டுவர முடியும் என்று ஒட்டுமொத்த நீர்மேலாண்மையையும் மராமத்து இலாகா என்ற ஒரு குடையின்கீழ்க் கொண்டு வந்தனர்.

எனினும், வேளாண்மையின் மகத்துவம் உணர்ந்து நீர் கட்டமைப்புகளை வலிமைப்படுத்துவதிலும், புதிய நீர் நிலைகளை உருவாக்குவதிலும் தனிக்கவனம் செலுத்தினார்கள். 2000 ஆண்டுகள் பாரம்பரியமிக்க கல்லணையோடு காவிரியில் கீழணை, மேலணை உருவாக்கி, தஞ்சை மண்டல வேளாண்மையை வலிமைப்படுத்தினர். மேட்டூரில் அணை அமைத்துக் காவிரி நீரை நெறிப்படுத்தினர். தென்மாவட்டங்களின் வளர்ச்சிக்காகப் பென்னி குயிக் உருவாக்கிய முல்லைப் பெரியாறு அணையின் பங்களிப்பை நாம் மறுக்க முடியாது.

1887 – 1895இல் இடுக்கி மாவட்டத்தில் உருவான பெரியாறு அணை, 1897 –1906இல் கன்னியாகுமரி மாவட்டத்தில் உருவான பேச்சிப்பாறை அணை, 1913–1923இல் கடலூரில் உருவான வெலிங்டன் அணை, 1925–1934இல் சேலம் மாவட்டத்தில் உருவான மேட்டூர் அணை மற்றும் 1940–1944இல் திருவள்ளூர் மாவட்டத்தில் உருவான பூண்டி நீர்த்தேக்கம் ஆகியவை பிரித்தானியர்கள் நமக்கு உருவாக்கித் தந்த பெருங்கொடை ஆகும்.

சுதந்திர இந்தியாவில் தமிழக நீர் மேலாண்மை – 1947 முதல் 1967 வரை

வெள்ளையர்கள் இந்தியாவை விட்டு வெளியேறியபோது தமிழ்நாட்டில் மட்டும் சுமார் 50 ஆயிரம் நீர்நிலைகள் இருந்தன. சுதந்திரத்திற்குப் பின் முதல் பத்தாண்டுகள் இந்த நீர் நிலைகளைப் பராமரிப்பது, குடிநீர் ஆதாரங்களை அதிகரிப்பது ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட்டது.

1948இல் பெருஞ்சாணி அணை, 1948இல் பவானிசாகர், 1950இல் மணிமுத்தாறு, 1953இல் திருப்பூர் அமராவதி அணை, 1954இல் திருவண்ணாமலையில் சாத்தனூர் அணை, தேனியில் வைகை அணை, 1955இல் கிருஷ்ணகிரி அணை, 1958இல் விழுப்புரத்தில் வீடூர் அணை, 1962இல் மதுரையில் சாத்தையாறு அணை, 1963இல் கள்ளக்குறிச்சியில் கோமுகி அணை, பாலக்காட்டில் தூணக்கடவு அணைகள் சுதந்திர இந்தியாவின் முதல் நீர் மேலாண்மைத் திட்டங்கள் ஆகும்.

1954 முதல் 1963 வரை காமராஜர் செய்த நீர்மேலாண்மை சாதனை

சுதந்திரத்திற்குப் பிறகான தமிழ்நாட்டில் நீர் மேலாண்மையில் ஒரு புதியப் புரட்சியைத் தொடங்கி வைத்தவர் பெருந்தலைவர் காமராஜர். இவரின் காலகட்டத்தில், கீழ்பவானி அணை, வைகை நீர்த்தேக்கம், அமராவதி அணை, சாத்தனூர் அணை, பரம்பிக்குளம், நொய்யாறு, ஆரணியாறு, கிருஷ்ணகிரி, ஆழியாறு, வீடூர் ஆகிய அணைகள் உருவாக்கப்பட்டன.

1967 முதல் 1977 வரை

06.03.1967 அன்று அறிஞர் அண்ணா அவர்களின் அமைச்சரவையில் பொதுப்பணித்துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மராமத்து இலாகா என்றிருந்த துறையை, அறிஞர் அண்ணா அவர்களின் அறிவுரைப்படி "பொதுப்பணித்துறை" எனப் பெயர் மாற்றம் கண்டது.

1967 முதல் 1976 வரை தமிழ்நாட்டில் ஏராளமான நீர்வளத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டத்தில் இராமாநதித் திட்டம், கன்னியாகுமரி மாவட்டத்தில் சித்தாறு – பட்டணங்கால் திட்டம், கடனா நதித் திட்டம், வைப்பாறு அணை ஆகியவை செயல்படுத்தப்பட்டன.

கடலூரில் மணிமுக்தா நதித் திட்டம், கோமுகி நதித் திட்டம், விழுப்புரம் முதல் திருவண்ணாமலை வரை நந்தன் கால்வாய்ப் புனரமைப்பு, ஆகியவை செயல்படுத்தப்பட்டன.

வைகை கால்வாய் நவீனப்படுத்தும் திட்டம், பரம்பிக்குளம் – ஆழியாறு திட்டம், பி.டி.ராஜன் கால்வாய் திட்டம் ஆகியவை இந்தக் காலகட்டத்தில் உருவாக்கப்பட்டன.

1977 முதல் 1997 வரை

வேளாண்மை விரிவாக்கம் மற்றும் நகர வளர்ச்சிக்கு ஏற்பத் தண்ணீர் தேவைகளும் அதிகரித்தன. இதற்காக புதிய அணைகளின் உருவாக்கம், பழைய அணைகளின் விரிவாக்கமும் தமிழ்நாட்டில் தொடர்ந்தன.

1977இல் கிருஷ்ணகிரியில் பாம்பாறு அணை, கெலவரப்பள்ளி அணை 1979இல் தருமபுரியில் தும்பலஹள்ளி, திருநெல்வேலியில் குண்டாறு, விருதுநகரில் வெம்பகோட்டை ஆகிய சிற்றணைகள், 1980ல் தருமபுரியில் தொப்பையாறு, நாகவதி அணைகள், 1981இல் தருமபுரி கேசரிகுலிஹல்லா, சூலகிரி சின்னாறு மற்றும் திருச்சி உப்பாறு அணைகள் உருவாக்கப்பட்டன.

1982இல் திண்டுக்கல் குதிரையாறு, அரியலூர் சித்தமல்லி, விருதுநகர் கோல்வார்பட்டி, சேலம் கரியகோவில், ஆனைமடுவு, தேனி சோத்துப்பாறை அணைகள் உருவாக்கப்பட்டன.

1983இல் விருதுநகர் ஆணைக்குட்டம் சிற்றணை, 1984இல் ஈரோடு பெரும்பள்ளம், கரூர் மற்றும் ஈரோட்டில் நொய்யல் ஆத்துப்பாளையம் சிற்றணை, 1985இல் திண்டுக்கல் குடகனாறு, 1987 திருநெல்வேலியில் கொடுமுடியாறு, 1988இல் திருநெல்வேலி நம்பியாறு அணைகள் உருவாகின.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிறுபாசனத் திட்டம்

குக்கிராமங்களில் நீர்வளம் மேம்படும் போதுதான் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைச் சரி செய்யமுடியும் என்பதை உணர்ந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஏராளமான சிறுபாசன திட்டங்களை பொதுப்பணித்துறை அமைச்சராக அவர் இருந்த காலங்களில் செயல்படுத்தினார்.

1967 முதல் 1975 வரை சுமார் 14,477 புதிய தனியார் குழாய்க் கிணறுகள் உருவாக்கப்பட்டன. அதே போன்று 14,737 புதிய வடிமுறை குழாய்களும் 4,873 துளைக்குழாய்க் கிணறுகளும் உருவாக்கப்பட்டன. இத்துடன் 8,042 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டன.



1966 வரை 1,10,160 ஏக்கர் பாசனம் பெற்றிருந்த நிலையை உயர்த்தி 1967இல் இருந்து 1976க்குள் சுமார் 4,71,782 ஏக்கர் பாசனம்பெறும் வகையில் புதிய சாதனையை உருவாக்கினார் முத்தமிழறிஞர் கலைஞர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உருவாக்கிய நீர்த்தேக்கங்கள்

தமிழ்நாட்டின் நீர்வளம் என்பது மழையை மட்டும் பெரிதும் நம்பியிருக்கும் நிலையில், அதனைத் தேக்கி வைத்துக் குடிநீர், வேளாண்மை மற்றும் பிற பணிகளுக்குப் பயன்படுத்த ஏதுவாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தனது ஆட்சிக்காலத்தில் நூற்றுக்கணக்கான நீர்த்தேக்கங்களை உருவாக்கினார். அவற்றில் குறிப்பிடத்தக்கவை மணிமுத்தாறு, சின்னார், ராஜாத்தோப்பு கானாறு, மோர்தானா, செண்பகத் தோப்பு, வரட்டாறு, ஆண்டியப்பனூர் ஓடை, மஞ்சளாறு, சித்தாறு – 1, சித்தாறு – 2, கடனாநதி, ராமா நதி, பிளவுக்கல் பெரியார், பிளவுக்கல் கோவிலார், கருப்பா நதி, ஆணைக்குட்டம், நம்பியாறு, பொய்கையாறு, பரப்பலாறு,

பெரும்பள்ளம், குதிரையாறு, நொய்யல் ஆற்றுப் பாளையம், நீராறு மேலணை, பெருவாரிப்பள்ளம், சோலையாறு, நங்கஞ்சியார், நல்லதங்காள் ஓடை, பொன்னணி ஆறு, உப்பாறு ஆகிய நீர்த்தேக்கங்களாகும்.

75ஆவது சுதந்திரப் பொன்விழா ஆண்டில் நீர்மேலாண்மைத் திட்டங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் பல்வேறு சமூக வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் இந்தியாவின் முன்னணி மாநிலமாக நிருவகித்து வருகிறார்.

கடைமடை வரை காவிரி நீர் தடையின்றிச் செல்லும் வகையில், இந்தியாவின் நெற்களஞ்சியமான டெல்டா மாவட்டங்கள் முழுவதும் தூர்வாரும் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் நிறைவேற்றி, விவசாயிகள் உரிய நேரத்தில் நீர் பெறும் வகையில் மேட்டூர் அணையையும் திறந்து வைத்தார். இதனால் உணவு உற்பத்தி அதிகரித்துள்ளது.

10 ஆண்டுகளில் 1,000 தடுப்பணைகள் கட்டுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, முதல் கட்டமாக இவ்வாண்டு 100 புதிய தடுப்பணைகளை மாநிலம் முழுவதும் உருவாக்கிட ஆணையிட்டுள்ளார். இத்துடன் 300க்கும் மேற்பட்ட ஏரிகளைச் சீர்படுத்திப் பொழியும் மழையைச் சேமித்து நிலவளமும், நீர்வளமும் காக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

சுதந்திர இந்தியாவின் பொன்விழா ஆண்டில், சிறுபாசனம் மற்றும் நுண்ணீர்ப் பாசனத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடத்தைப் பெற்று வருகிறது. நீர் மேலாண்மைத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தியதால் தேசிய அளவில் தமிழ்நாடு சிறந்த மாநிலமாக ஒன்றிய அரசால் தேர்வுசெய்யப்பட்டு விருது வழங்கப்படவுள்ளது. மேலும், இவ்வாண்டு ஒன்றிய அரசின் தேசிய நீர் விருது 6 பிரிவுகளில் தமிழகம் தேர்வு செய்யப்பட்டு விருது பெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இத்தகைய சிறப்பான செயல்பாடுகளால் உணவு உற்பத்தியில் தமிழ்நாடு தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.

– பொதுப்பணித்துறை

திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மண்டலச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில், 11.03.2022 அன்று மாநிலச் செய்தி நிலையக் கூட்ட அரங்கில், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மண்டலச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

பாளைச்சிரிப்பு, பசு நெய்யின் நறுமணம். வாளைமீன் துள்ளல், வரிப்புலியின் கனல் பார்வை எல்லாமே இணைந்திட்ட கவிதைச் சுரங்கமே பாரதிதாசன்.

பாற்கடலைப் பற்றிப் புராணங்கள் பகர்ந்திடக் கேட்டிருக்கிறோம். பாரதிதாசனோ, 'பாற்கடலாகவே' பரந்து விரிந்து, தமிழ்மண்ணின் நெஞ்சமெல்லாம் நிறைந்து நின்றார்.

அந்தக் கடலிலே உவமையழகு. உணர்ச்சித் துடிப்பு, புதுமை நோக்கு, புரட்சி வெடிப்பு அனைத்துமே அலைகளாகப் பொங்கியெழுந்து சீறிப்பாய்ந்தன. சிலம்பமும் ஆடின. அவருடைய உருவமே மிடுக்கானது. அந்த உள்ளத்திலிருந்து வெடித்துக் கிளம்பிய சொல்லாட்சியோ, எல்லாவற்றையும்விட மிடுக்கானது, இழிதகைமையை, ஈனச்செயல்களை மிதித்துத் துவட்டக் கூடியது.

"கொலைவாளினை எட்டா–மிகு
கொடியோர் செயல் அறவே"

என்பன போன்ற புரட்சித் தெறித்திடும் வரிகளை இன்னொருவரால் புனைந்திடத்தான் முடியுமா.

"சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன் விளைத்த
நிறையுழைப்புத் தோள்கள்எலாம் எவரின்
தோள்கள் ?"

எனக்கேட்டு,

"காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான் – அவன்
காணத் தகுந்தது வறுமையா ?
பூணத் தகுந்தது பொறுமையா ?"

என்றெல்லாம் தொழிலாளர் தோழராய் உரத்த குரல் எழுப்பிச் சமதர்மப் பூங்காவைச் சமைத்திட அவர் துடித்த துடிப்பினை யாரே மறுத்திட முடியும் ?

"தட்டுப்ப டாத பெரும்–பொருட்கொரு
சாதியும் உண்டோடா !– படுவாய்
சாதியும் உண்டோடா !
மட்டற்ற செம்பொருட்கே– முரண்படும்
மதங்கள் உண்டோடா ! "

என்று சாதிச் சழக்குகளைச்– சாத்திரச் சடங்குகளை ஆத்திரத்துடன் சாடிய ஆண்மையாளர் – அரிமாவும் – அவரே!

"கோரிக்கை யற்றுக் கிடக்கு தண்ணே, இங்கு
வேரில் பழுத்த பலா ! – மிக்க
கொடியதென் றெண்ணிடப்
பட்ட தண்ணே– குளிர்
வடிகின்ற வட்டநிலா !"

என்று பெண்டிர்க்காகக் கண்ணீர் வடித்திட்ட பேரன்புத் தாயுமாவார் அவர்!

"தமிழ் எங்கள் உயிர் என்பதாலே– வெல்லுந்
தரமுண்டு தமிழருக் கிப்புவி மேலே!"

என்று போர்ப் பரணி பாடிய வீர மறவரும் அவரே ஆவார்!

"புரட்சிக் கவிஞன்"

திருவாரூரில் தமிழ் மாணவர் மன்றம் என்னும் ஓர் அமைப்பினை உருவாக்கி என்னாலியன்ற தொண்டினை இயற்றி அதன் ஓராண்டு நிறைவு விழாவினை நான் நடத்திய காலை, அதனை வாழ்த்திடும் முகத்தான் அவர் வரைந்தனுப்பிய வீரங் கொப்பளித்திடும் வரிகள் இன்றைக்கும் என் இதயத்திலே ஈரங்காய்ந்திடாமல் எழுச்சியை – இன மொழி, நாட்டுப்பற்றினைச் – சூடேற்றிய வண்ணமே உள்ளன.

"நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலா !
காடு கமழும் கற்பூரச் சொற்கோ !
கற்பனை ஊற்றாம் கதையின் புதையல் !
திறம் பாட வந்த மறவன்; புதிய
அறம் பாட வந்த அறிஞன்; நாட்டில்
படரும் சாதிப் படைக்கு மருந்து!
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன் !
அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன் !"

என்றெல்லாம் அவர் பாரதியாரைப் பற்றிப் பாடினாலும் அந்த வைர வரிகள் தமக்கே பொருந்துமாறு வாழ்ந்து காட்டிய பாவலர்.

பாரதி–பாடென்று சொன்னவுடன்
பாடிய மறவன்
பார் அதி தீரனென்று பாரதி
புகழ்ந்த புலவன்.....
கனக சுப்புரத்தினம் என்று
காத தூரம் இருந்த பெயரைக்
கவி பாரதிக்குத் தாசனென்று
கச்சிதமாய்ச் சூட்டிக் கொண்டான் !
நிமிர்ந்த நோக்கு, நெரித்த புருவம்;
நீர் வீழ்ச்சி ஓசை, நெற்கதிர்க் கட்டு மீசை;
பாட்டெழுதும் வித்தையிலே பாரதி ரசவாதம்
கற்றவனாம்–இவனைப்
பார், அதிரசவாதம் கற்றவனாம்!
அத்துணை இனிப்பு: இவன் பாட்டில்!
வினாக்குறியா ? வெடிக்கும் எரி மலையா ?
புரட்சிக்கவிஞனெனப் புவியொப்பி மாலை
போடப்போதாதோ இவைகள் ?
இவனோர் சுருட்டுக்கவிஞன்– புகைச்
சுருட்டுக்கவிஞன் – இவன்
புரட்டுக் கவிஞனாவான்;

மூடப் பழக்கமெலாம் தலைகீழ்ப்
புரட்டும் கவிஞனாவான்...
அமளி துமளி ஆர்ப்பாட்டம்! அணிவகுப்பு!
அமைதியிலே உலகுவாழப் புதுவைக்குயில் கூவாதோ!

கருத்துக்கவிஞன்; சற்றுக்
கருத்த கவிஞன்;
காலக்கவிஞன், முக்
காலக் கவிஞன் அவன்!
சுவையாய்த் தமிழுக்கு
அருவியின் பாடல் அமைவாய்க் கண்ட
அற்புதம் என்னே!

இருண்ட வீட்டில் குடும்ப விளக்கைஏற்றி வைத்தார்
இசையமுது பொழிந்து
அதற்குப் பாண்டியன் பரிசு பெற்றார்

நமக்குக் குயில், குறிஞ்சித் திட்டுமுண்டு.
இதழ் நடத்தும் போது கவிதை;
அழகின் சிரிப்பாலே தமிழியக்கம் கவர்ந்து விட்டார்
அமைதிக்கு நல்ல தீர்ப்பளித்தார்
அவர் காதல் நினைவாலே கவிப்பெண்ணை
வாடவிட்டு
சாவின் எதிர்பாரா முத்தத்தால் பிரிந்து விட்டார்!

என் ஆசான்!...

பம்பாயில் நடைபெற்ற கவியரங்கில் பாரதிதாசனைப் பற்றி நான் பாடிய கவிதை வரிகளில் சிலவே இவை!

பகுத்தறிவுப் புரியின் காவலர்களாக அவரது பழைய கவிதை வரிகளை நிறுத்தி வைத்துவிட்டு அவர் போய்விட்டார். ‘பாரதிதாசன்’ என்பது இனி ஒரு தனி மனிதரின் பெயரல்ல. தமிழ் இன்பம் பொழிகின்ற கவிதைத் தொகுப்பின் பெயர். அந்தப் பாரதிதாசனை என்றென்றும் நம்மிடையே வைத்துப் போற்றுவோம்!

– முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்** அவர்கள்

இல்லம் தேடி வரும் “தமிழரசு” இதழ்

தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின் ஆக்கப்பணிகளை எடுத்துரைக்கும் வகையில் வெளியிடப்பட்டு வந்த பல்வேறு இதழ்கள் அனைத்தையும், ஒரே அரசு இதழாக “தமிழரசு” எனும் பெயரில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1970ஆம் ஆண்டு ஜூலை 1 முதல் மாத இதழாக உருவாக்கினார்.

பல்வேறு தனியார் அச்சகங்களில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டு வந்த தமிழரசு மாத இதழுக்குச் சொந்தமாக ஒரு அரசு அச்சகத்தை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1972ஆம் ஆண்டு உருவாக்கினார். ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் செயல்பட்டு வந்த தமிழரசு அச்சகம், தற்போது சென்னை தரமணியில் புதுப்பொலிவுடன் செயல்பட்டு வருகிறது.

தமிழரசு இதழ், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் நான்கு வண்ண வெப்ஆப்செட் இயந்திரம் மூலமாக அச்சிடப்பட்டு மாதந்தோறும் வெளியிடப்பட்டு வருகிறது. தமிழரசு, தமிழ் மற்றும் ஆங்கிலம் தனி இதழ் ரூ.20 ஆகவும், ஆண்டுச் சந்தா ரூ.240 ஆகவும், 10 ஆண்டுகளுக்கான ஆயுள் சந்தா அஞ்சல் கட்டணம் உட்படத் தமிழரசு தமிழ் ரூ.2,000 ஆகவும், தமிழரசு ஆங்கிலம் ரூ.2,400 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அரசு செயல்படுத்தும் அனைத்து நலத்திட்டங்களையும், சாதனைகளையும் பொதுமக்கள் எளிதில் படித்துப் பயன்பெறும் வகையில், தொகுத்து இதழ் வடிவில் வெளியிட்டு மக்களுக்குக் கொண்டு சேர்க்கப்படுகிறது. மேலும், போட்டித் தேர்வுகளுக்கு தங்களைத் தயார் செய்துகொள்ளும் மாணவர்களுக்கும் தமிழரசு இதழ் பயனுள்ளதாக இருக்கும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழகத்தின் கடைக்கோடி மக்கள் மற்றும் உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் அனைவரும் அரசின் மக்கள் நலத்திட்டங்களை எளிதில் அறிந்துகொள்ள பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆணையிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில், செய்திமக்கள் தொடர்புத்துறையின் மூலம் வெளியிடப்படும் தமிழரசு மாதஇதழை, அனைவரும் பெற்றுப் பயனடையும் வகையில் அரசு இ–சேவை மையங்கள் வாயிலாகவும், சந்தாத்தொகை செலுத்தும் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், உரைகள், நிகழ்ச்சிகள் அரசின் மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் அரசாணைகள் ஆகியவற்றை முழுமையாகப் பொதுமக்கள் அறிந்து பயனடைய அரசு இ–சேவை மையங்களில் தங்கள் பெயர் மற்றும் முகவரி விவரங்களைத் தெரிவித்து, பதிவு செய்து தமிழரசு இதழை அஞ்சல் வாயிலாகப் பெற்றுபயனடையக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தமிழரசு இதழுக்கு www.tamilarasu.org என்ற இணையதளத்திலும் சந்தாத்தொகையினை நேரடியாகச் செலுத்தலாம். மேலும், தமிழரசு சந்தாத் தொகையினை வங்கிவரைவோலையாகவோ, பணவிடை மூலமாகவோ இணை இயக்குநர் (வெளியீடுகள்), தமிழரசு அலுவலகம், இராஜீவ்காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை – 600 113 என்ற முகவரிக்கு தங்களின் பெயர், கதவுஎண். தெருப்பெயர், ஊர், மாவட்டம், அஞ்சல் குறியீட்டு எண் மற்றும் கைப்பேசிஎண் ஆகியவற்றைச் சரியாக எழுதி அனுப்பித் தமிழரசு இதழைப் பெற்றுக் கொள்ளலாம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 14.03.2022 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழகத்திலுள்ள மறுவாழ்வு முகாம்களில் வாழும் முகாம் வாழ் இலங்கைத் தமிழர் மாணவச் செல்வங்களின் பயன்பாட்டிற்காக இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினார்.

தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023
& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 30.03.2022 அன்று சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்திலுள்ள அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில், தமிழ்நாடு மாநிலச் சுகாதாரப் பேரவையைத் தொடங்கிவைத்தார்.

Published by Dr.V.P. JEYASEELAN, I.A.S., on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: Dr.V.P. JEYASEELAN, I.A.S.,